
# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி : 02 | ஒக்டோபர் 2005 | பார்வை : 14 | விலை : ரூபா.25.00



உள்ளே....


ஏ. சி. ஜோர்ஜ் ■ இலங்கைப் பாடசாலைகளின் மட்டத்தில் ஏற்பட்டுவரும் பரடைம் சிவ்ட்

செ. யோகராசா ■ சமகால வாசிப்பு அதிர்வுகளும் அடுத்த காலடியும்

மா. கருணாநிதி ■ வாசிப்புப் பழக்கத்தின் இன்றியமையாமை

சோ. சந்திரசேகரம் ■ வாசிப்பு பழக்கம் : வளர்ச்சி, தடைக்கல், எமது கல்விமுறைமை

எஸ். ராமகிருஷ்ணன் ■ நானும் சில புத்தகங்களும்

சாந்தி சச்சிதானந்தம் ■ கல்விக் கொள்கைத் தீர்மானங்களில் வாசக வட்டங்கள் வகிக்கக் கூடிய பங்கு

சபா. ஜெயராசா ■ புறூனரும் நவீன கல்வியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# POOBALASINGHAM BOOK DEPOT

IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS.

**Head Office :**
340, 202 Sea Street,
Colombo 11, Sri Lanka.
Tel : 2422321
Fax : 2337313
E-mail : pbdho@sltnet.lk

**Branches :**
309A-2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka.
Tel : 2504266
Fax : 4-515775

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.

60

# பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி,
இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

தலைமை :
இல. 340,202 செட்டியார் தெரு,
கொழும்பு 11, இலங்கை.
தொ. பே. : 2422321
தொ. நகல் : 2337313
மின்னஞ்சல் : pbdho@sltnetlk

கிளை :
இல. 309 A-2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை.
தொ. பே. : 2504266
தொ. நகல் : 4-515775

இல. 4 A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவிழி

மாத இதழ்

ஆசிரியர்

[illegible]

## ஆசிரியரிடமிருந்து...

இன்று பாடசாலைகளிலும் வாசிப்புச் செயற்பாடு இயல்பாகக் குறைந்து செல்கிறது. குறிப்பாக ஆசிரியர், மாணவர் நிலைகளில் வாசிப்பு எதுவுமின்றி தமது பணிகளில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட முடியும் என்ற நிலை மனோபாவம் வளர்ச்சி பெற்றுள்ளது.

இன்றைய கல்விமுறைமை கூட வாசிப்புச் செயற்பாட்டின் தன்மைகளை ஊக்குவிக்கும் விதத்தில் இல்லை. மாறாக பாடத்திட்டம், அவை சார்ந்த குறிப்புகள் பழைய வினாவிடைத் தொகுப்புகள் போன்றவற்றுடன் தான் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலமே தேர்ச்சி மிகு மாணவர்களை உருவாக்க முடியுமென்ற நம்பிக்கை ஆசிரியர்களிடம் திடமாக உள்ளது. இதனால் இன்று நவீனத்துவம் சமூக விஞ்ஞானம், இயற்கை விஞ்ஞானம், மற்றும் மனிதப் பண்பியல் துறைகளில் ஏற்பட்டுள்ள ஆராய்ச்சிகளை அறிவு விருத்திகளை இனங்காண முடியாதவர்களாகவும் அவற்றுடன் பரிச்சயம் எதுவுமற்றவர்களாகவும் இருந்து ஆசிரியத் தொழில் புரிய முடியும் என்ற கல்வி ஏற்பாட்டு நடைமுறையில் உள்ளது.

ஆசிரியர்கள் சுயமாகக் கற்பதற்கான, வாசிப்பில் ஈடுபடுவதற்கான பல்வேறு உபாயங்கள் நோக்கிச் செயற்படுவதற்கான திறன்களை வளர்த்துக் கொள்ளத் தயாராக இல்லை. இதனை ஊக்குவிக்கும் கல்வி முறைமையும் பாடஏற்பாடும் இங்கு இல்லாமல் போய்விட்டது. இன்றைய கல்வியாளர்கள் மாணவர்கள் கற்றல் அனுபவத்தைப் பெறும் போதே கற்பதற்கு கற்கும் வழிமுறைகளை வளர்த்துக் கொள்ளல் வேண்டும் என்று கருதுகின்றனர். "கற்பதற்கு கற்றல்" என்னும் புதிய சிந்தனையை மார்க்கத்தில் பல்வேறு சாராரும் கருத்திற் கொள்ளத் தொடங்கியுள்ளனர். மாணவர்கள் கட்டாயக் கல்வி பெறும் காலத்திலேயே அவர்கள் கற்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கல்வியியலாளர்கள் விரும்புகின்றனர்.

ஆனால் 'கற்பதற்கு கற்றல்" மாணவர்சார் கண்ணோட்டமாக அல்லாமல் ஆசிரியர்சார் கண்ணோட்டமாக விரிவுபெற வேண்டிய தேவை தற்போது உள்ளது. ஆசிரியர்களின் கற்றும் பண்புகள் சுயமாகப் பெறும் அறிவானதும் அறிவுப் பெருக்கமாக விரிவுபெற வேண்டும். இந்த விரிவுக்கு வாசிப்பு தேடல், சிந்தனை முக்கியம். இது ஓர் இயக்கமாக பரிணமிக்க வேண்டும். இந்த கற்பதற்கு கற்றல் ஆசிரியர்களின் மனோபாவத்தை நடத்தைகளை மாற்றியமைக்கும் புதிய தூண்டுகோளாக மாறுதல் வேண்டும். இது இயக்கமாக பரிணமிக்க வேண்டும்.

சிந்தனை பூர்வமான அறிவும் விமர்சனநோக்கும் தகவல் தேடல் பண்பும் கொண்டவொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான வாசிப்பு இயக்கம் தான் ஆசிரியர் சமூகத்தை விழித்தெழ வைக்கும். இதுவே கல்விமுறைமையில் புதிய மாற்றங்களுக்கான வாயில்களைத் திறக்கும்.

'இறந்த பிறகும் என் விழிகளை மூடிவிடாதீர்கள் அவை அப்போதும் எனது மரணத்தைப் பார்க்கவும் படிக்கவும் புரிந்து கொள்ளவும் தேவைப்படலாம்'

— பாப்லோ நெருடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பாடசாலைகளின் மட்டத்தில் ஏற்பட்டுவரும் "பரடைம் சிவ்ட்" (Paradigm Shift)

மதிப்பீட்டுக் கலாசாரம் ஒன்றில் இருந்து கணிப்பீட்டுக் கலாசாரம் ஒன்றுக்கு மாறுவதற்கான வேலைத் திட்டமே பாடசாலை மட்டக் கணிப்பீடாகும். வெறும் அறிவுத் தொகுதியினை இன்று மட்டும் மதிப்பீடு செய்து வந்த பாடசாலைகள் பிள்ளையின் அறிவு, திறன், மனப்பாங்கு, பிரயோகம் போன்ற பல்வேறு ஆளுமைத் திறன்களை அளவீடு செய்யும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறையை அமுலாக்கி வருகின்றன. இருபத்தோராம் நூற்றாண்டின் நுழைவாயிலில் நிற்கும் இன்றைய பாடசாலை மாணவர்கள் தவிர்க்க முடியாததும் கடும் முரண்பாடானதுமான ஒரு போட்டியின் அறை கூவல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

ஏ. சி. ஜோர்ஜ்
ஆசிரிய ஆலோசகர்
கல்வி வலயம் யாழ்ப்பாணம்

பாடசாலைகள் பற்றி நாம் பொதுவாகக் கொண்டிருந்த விளக்கங்களையும் பார்வைகளையும் இவான் இலிச் (Ivan Ilich) 'பாடசாலைகளற்ற சமூகம்' (No Schooling) என்ற தனது புதிய சிந்தனைகள் மூலம் அவற்றை தகர்த்தார். ஆனால் இலங்கையில் இடம் பெற்றுவரும் தொடர்ச்சியான கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகளிலும் அமுலாக்கங்களிலும் 'பாடசாலைகள் மட்டத்திலேயே' அனைத்து அடிப்படையான கல்விச் செயற்பாடுகளும் என்ற தொனியில் கல்விச் சீர்திருத்த அமுலாக்கங்கள் இடம் பெற்று வருகின்றன. இதனை கல்வியியலாளர்கள் பாடசாலை மட்டத்தில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் Paradigm Shift என அழைக்கின்றனர். இக்கட்டுரையானது இலங்கைப் பாடசாலைகள் மட்டத்தில் இடம் பெற்று வரும் பரடைம் சிவ்ட் பற்றி சுருக்கமாக நோக்குகின்றது.

1991 ஆம் ஆண்டில் இருந்து அமுலாக்கப்பட்டு வரும் கல்விச் சீர்திருத்தங்களில்:

(i) கல்வி வாய்ப்புக்களை விரிவடையச் செய்தல்.

(ii) கல்வியினை தரரீதியாக வளர்த்தல்.

(iii) கல்வியினை தகவல் தொழில்நுட்ப செயற்திறன் அடிப்படையில் மேம்படுத்தல்.

(iv) ஆசிரியர் கல்வி

(v) கல்வி முகாமைத்துவமும், மூலவளங்களும் என்ற பிரதான பகுதிகளினூடாக கல்வியில் புதிய எல்லைகளை தொடுதல் என்ற அடிப்படையில் முன்மொழிவுகள் உருவாக்கப்பட்டன.

இக்கட்டுரையாளர் மேலேயுள்ள அம்சங்களில் பாடசாலை மட்டத்தில் அடிப்படையில் நிகழ்ந்து வரும் பிரதான மாற்றங்களில் பின்வரும் விடயங்களில் மட்டும் கவனம் செலுத்த விரும்புகின்றார்.

(1) பாடசாலை மட்டக் கணிப்பீடு (School Base Assesment)

(2) பாடசாலை மட்ட முகாமைத்துவம் (School Base Management)

(3) பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடு (School Base Teacher Development Activity)

(4) பாடசாலைகள் விரும்பும் பாடத் தெரிவு (Multi option book) (MOB)

## பாடசாலை மட்டக் கணிப்பீடு (SBA)

பாடசாலையில் நிகழும் கல்விச் செயற்பாடுகளில் கற்றல், கற்பித்தல், மதிப்பீடு என்ற மூன்று முறைகள் பிரதானமானதாகும். புதிய கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகளில் ஏற்கனவே குறிப்பிட்டது போல, பிரதான பகுதிகளில் ஒன்றான கல்வியினை தரரீதியாக வளர்த்தல் என்ற இலக்கை அடைவதற்காக கற்றல், கற்பித்தல் மதிப்பீடு என்னும் செயன்முறைகளில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் தற்போது நாடெங்கும் உள்ள பாடசாலைகளில் ஆரம்ப பிரிவு, இடைநிலை, உயர்தரம், என்ற எல்லாத் தரங்களிலும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் அமுலாக்கப்பட்டு வருகின்றது.

மதிப்பீட்டுக் கலாசாரம் ஒன்றில் இருந்து கணிப்பீட்டுக் கலாசாரம் ஒன்றுக்கு மாறுவதற்கான வேலைத்திட்டமே பாடசாலை மட்டக் கணிப்பீடாகும். வெறும் அறிவுத் தொகுதியினை இன்று மட்டும் மதிப்பீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வந்த பாடசாலைகள் பிள்ளையின் அறிவு, திறன், மனப்பாங்கு, பிரயோகம் போன்ற பல்வேறு ஆளுமைத் திறன்களை அளவீடு செய்யும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறைமையை அமுலாக்கி வருகின்றமை இருப்பதேயாகும். அற்றாண்டின் நூதனமாய் நிற்கும் இன்றைய பாடசாலை மாணவர்கள் தயக்க முடியாததும் காடு முரடானதுமான ஒரு போட்டியின் அறைகூவல்களை எதிர்நோக்கியுள்ளனர். மாணவர்கள் பொதுவாக தொடர்ந்து தங்களினூடாக மதிப்பிடப்படும் தகவல் காரணமாக மனைத்துப் போயுள்ளனர். இன்று ஏற்பட்டும் பொது கணித இலக்கணப் பாடங்களும், முறையான பயிற்சிகளும் தொடர்ச்சியோடு மற்ற ஒழுக்கப் பண்புத் திண்பகுதிகளும் காணப்படுகின்றன என தேசிய கல்வி நிறுவகத்தினை சேர்ந்த செயற்றிட்ட அதிகாரி பந்துல பி. தயாரத்ன கூறுகின்றார்.

எனவே பிள்ளைகள் பாடசாலையை விட்டு வெளியேறும் போது தேர்ச்சியுடையவர்களாக, வேலையுலகொன்றிற்கு பொருந்தக் கூடியவர்களாக, சமநிலை ஆளுமையுள்ளவர்களாக, பாடசாலை வெளியே அனுபவங்களை பிரயோகிக்கக் கூடியவர்களாக ஆக்குவதற்கு பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத் திட்டம் உதவுகின்றது.

இக் கட்டுரையாளர் இது கால வரையும் தேசிய, மாகாண, வலய கோட்ட மட்டங்களில் இருந்து வந்த கல்விச் செயற்பாடுகள் பாடசாலை மட்டத்திற்கு கையளிப்புச் செய்யப்படும் பரவலாக்கல் என்ற விடயத்தினையே பார்க்க விரும்புவதினால், பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் உள்ளார்ந்த விடயங்களில் கவனம் செலுத்தாமல் விடுகின்றார்.

பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் தேசிய மட்ட பரீட்சைப் பெறுபேறுகளுடனும் இணைக்கப்பட்டு வெளிப்படுகின்றன. இது க.பொ.த சாதாரண தரம் இவ்வருடம் முதல் க.பொ.த உயர்தரத்திலும் இடம்பெறவிருக்கின்றது. அடுத்து வரும் சில வருடங்களில் பாடசாலையை விட்டு வெளியேறும் பிள்ளை பற்றிய முழுமையான விளக்க அறிக்கையாக பாடசாலை மட்டக் கணிப்பீட்டு அறிக்கைகள் பயன்படுத்தப்படுவதற்கான திட்டங்கள் காணப்படுகின்றன. இன்றைய நிலையில் பா.ம.க பற்றிய சில பலவீனமான அம்சங்கள் காணப்பட்டாலும் எதிர்காலத்தில் பாடசாலைகளினால் வழங்கப்படும் சான்றிதழ்கள் பாடசாலையின் நிலைமை முக்கியமானதாகும்.

பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் தேசிய மட்ட பரீட்சைப் பெறுபேறுகளுடனும் இணைக்கப்பட்டு வெளிப்படுகின்றன. இது க.பொ.த சாதாரண தரம் இவ்வருடம் முதல் க.பொ.த உயர்தரத்திலும் இடம்பெறவிருக்கின்றது. அடுத்து வரும் சில வருடங்களில் பாடசாலையை விட்டு வெளியேறும் பிள்ளை பற்றிய முழுமையான விளக்க அறிக்கையாக பாடசாலை மட்டக் கணிப்பீட்டு அறிக்கைகள் பயன்படுத்தப்படுவதற்கான திட்டங்கள் காணப்படுகின்றன. இன்றைய நிலையில் பா.ம.க. பற்றிய சில பலவீனமான அம்சங்கள் காணப்பட்டாலும் எதிர்காலத்தில் பாடசாலைகளினால் வழங்கப்படும் சான்றிதழ்கள் பாடசாலையின் நிலைமை முக்கியமானதாகும்.

## பாடசாலை மட்ட முகாமைத்துவம் (SBM. பா.ம.மு)

அமுலாக்கப்பட்டு வரும் புதிய கல்விச் சீர்திருத்தங்களில் கல்வி முகாமைத்துவமும் அவற்றின் பிரதான அமைப்பில் பாடசாலைகளின் முகாமையை மாற்றுவதற்கான வேலைத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கையானது கடந்த நான்கு தசாப்தங்களாக கல்வி நிர்வாகத்தினை பரவலாக்கம் செய்வதில் பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. கல்வி நிறுவனங்கள் வினைத்திறனுடன் செயற்படும் வடிவில் நிர்வாகத்தினை கீழ்மட்டத்திற்குப் பரவலாக்கம் செய்வதில் கவனம் செலுத்தப்பட்டு வந்துள்ளது. ஆனால் பரவலாக்கல் பாடசாலை மட்டம் வரையில் போதியளவாக சென்று அடையவில்லை.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் பாடசாலை சம்பந்தமான பெரும்பாலான செயற்பாடுகளை பாடசாலைக்கு வழங்குகின்றது. இதனையே பாடசாலை மட்ட முகாமைத்துவம் எனக் கூறுகின்றோம். ஆசியாவிலேயே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் என்ற வகையில் பா.ம.மு அறிமுகம் செய்து வைக்கும் முதலாவது நாடு என்ற பெருமையையும் இலங்கை பெறுகின்றது. சில தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் முன்மாதிரித் (Pilot Programme) திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பா.ம.முகாமைத்துவம் 2007ஆம் ஆண்டிலிருந்து நாடு தழுவிய ரீதியில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பா.ம. முகாமைத்துவம் பாடசாலை என்ற எல்லைக் கருவுக்குள் இருந்து வந்த விளக்கத்தினை மாற்றியமைக்கும் ஒரு பரந்த சிந்தனை ஆகும். பாடசாலையானது தனது நாளாந்த கருமங்களை சுயமாக முகாமை செய்யும் நிலைக்கு விட்டு விடுவதே பா.ம முகாமைத்துவமாகும்.

பாடசாலை மட்ட முகாமைத்துவ சிந்தனையில் பின்வரும் அம்சங்கள் காணப்படுகின்றன.

* பாடசாலை மட்ட முகாமைத்துவத்தினை சிறப்புறச் செய்ய, தீர்மானமெடுக்கும் உரிமை என்பன பாடசாலை சபையிடம் விடப்படும். (School Board)
* பாடசாலைகள் ஒவ்வொன்றும் இனி பாடசாலை சபையினாலேயே முகாமை செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பாடசாலை அதிபர்கள் வெறுமனே பாடசாலை நிர்வாகிகளாக மட்டும் செயற்படாமல், அவர்கள் பாடமுகாமையாளர்களாகவும், நிர்வாகம் மேற்கொள்பவர்களாகவும் நிதிக் கட்டுப்பாட்டாளராகவும் கொள்ளப்படுவர்.

* இதற்கான பயிற்சியினை அதிபர்களுக்கு தேசிய கல்வி நிறுவகம் வழங்க இருக்கின்றது.

* பாடசாலை சபையின் உறுப்பினராக அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், வலயத்தினால் நியமிக்கப்படுபவர்கள் (Zonal nominee) போன்றோர் இடம்பெறுவர். பாடசாலையின் கொள்கையை முகாமை செய்வதிலும் இச்சபை பொறுப்பாக இருக்கும். ஒவ்வொரு பாடசாலைக்கும் ஒரு பாடசாலை சபை இருக்கும்.

* ஒவ்வொரு பாடசாலையும் பாடசாலைக்கென ஒரு கொள்கையினையும் பாடசாலைக்கென ஒரு நிகழ்ச்சித்திட்டத்தினையும் (School policy and programme) அபிவிருத்தி செய்யும். பாடசாலைக் கொள்கையை மாகாண வலய மட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தீர்மானிக்கலாம்.

* மிக முக்கியமான மற்றும் நிதியானது நேரடியாகவே பாடசாலைக்கு வழங்கப்படும். தற்போது தர உள்ளீட்டு (Quality Inputs) நிதி நேரடியாக பாடசாலைக்கு ஆரம்ப, இடைநிலை, உயர்தர பிரிவுகளுக்கு என வழங்கப்படுகின்றது. கல்வியின் தரத்தினை (Quality Assurance) உறுதி செய்வது பாடசாலை மட்டத்திலேயே இருக்கவேண்டும் எனவும்; கல்வியின் பயனாளிகளை அது நேரடியாக சென்றடைய வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலும் தர உள்ளீட்டு நிதி பாடசாலைகளுக்கு நேரடியாக கிடைக்கின்றது. தர உள்ளீட்டு நிதியானது அடுத்த வருடத்தில் இருந்து தற்போது பெறப்படும் நிதி அளவின் 5 மடங்காகவும் அதிகரிக்கப்படவிருக்கின்றது.

* தர உள்ளீட்டு நிதிக்கப்பால் வேறு பல நிதிகளும் பாடசாலையின் அபிவிருத்தி, முகாமை தொடர்பாக பாடசாலைகளுக்கு நேரடியாகவே கிடைக்க இருக்கின்றன. உதாரணம்: தற்போது பாடசாலைகளுக்கு நேரடியாக ஆங்கிலப் பாட அபிவிருத்திக்கென நிதி வழங்கப்படுகின்றது. மேலும் எதிர்காலத்தில் ஒரு பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியர் இல்லையாயின் அருகிலுள்ள விளையாட்டுக் கழகம் போன்றவற்றில் இருந்து வாடகைக்கோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ அத்தகைய ஆசிரியரினை நியமிப்பதற்கான நிதிகளை எதிர்காலத்தில் பாடசாலைகளுக்கு நேரடியாக வழங்கப்படவிருக்கின்றன.

இலங்கைப் பாடசாலைகளின் வரலாற்றில் பாடமுகாமைத்துவம் என்ற எண்ணக்கரு ஒரு Paradigm Shift ஆகும். பாடசாலைகளை வினைத்திறன் பொருந்திய (Effective School) பாடசாலைகளாக்குவதற்கான ஒரு கோட்பாடாகும். பாடசாலைகளில் தற்போது காணப்படும் பல பிரச்சினைகளுக்கு சவாலாக இது காணப்படுகின்றது. பாடசாலை மட்டத்திற்கு அதிகாரத்தினை பரவலாக்கம் செய்யும் நடவடிக்கையின் முதற்படியாகவும் பாடமுகாமைத்துவம் காணப்படுகின்றது.

## பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடு (SBTDA)

21ஆம் நூற்றாண்டிற்கான கல்வி பற்றிய புதிய சவால்களை எதிர்நோக்கும் ஒருவராகவே இன்றைய ஆசிரியர் காணப்படுகின்றார். எமது பாடசாலை முறைமையின் மைய முக்கியத்துவமுடையவராக ஆசிரியர் எமது சமூகத்தில் தொடர்ந்தும் காணப்படுகின்றார். புதிய தகவல் தொழில்நுட்பப் புரட்சி, பூகோளமயமாதல் மற்றும் புதிய சவால்கள் என்பனவற்றிற்கு முகம் கொடுக்க வேண்டியவராக ஆசிரியர் காணப்படுகின்றார். இதனால் இச்சவால்களுக்கு இசைவான ஆசிரியர்களை தயார்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. வேறு வகையில் கூறினால் 'கற்றல் உங்களுடையது' என்ற யுனெஸ்கோவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள 'புது ஆசிரியர்' ஒன்றிற்கான தேவை இலங்கைப் பாடசாலைகளிலும் எழுந்துள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு பாடசாலைகளின் தேவை ஒவ்வொரு பாடசாலைக்கும் இருக்கும் விசேட பிரச்சினைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளின் மட்டத்திலேயே ஆசிரியர்களுக்கு அனுபவங்களையும் பயிற்சிகளையும் வழங்கும் திட்டமொன்று இன்றைய நிலையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனையே பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்பாடு என அழைக்கின்றோம். (SBTDA) இதுகால-

> தர உள்ளீட்டு நிதியைப் போன்று பல நிதிகளும் பாடசாலையின் அபிவிருத்தி, முகாமை தொடர்பாக பாடசாலைகளுக்கு நேரடியாகவே கிடைக்க இருக்கின்றன. உதாரணம்: தற்போது பாடசாலைகளுக்கு நேரடியாக ஆங்கிலப் பாட அபிவிருத்திக்கென நிதி வழங்கப்படுகின்றது. மேலும் எதிர்காலத்தில் ஒரு பாடசாலையில் உடற்கல்வி ஆசிரியர் இல்லையாயின் அருகிலுள்ள விளையாட்டுக் கழகம் போன்றவற்றில் இருந்து வாடகைக்கோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ அத்தகைய ஆசிரியரை நியமிப்பதற்கான நிதிகளும் எதிர்காலத்தில் பாடசாலைகளுக்கு நேரடியாக வழங்கப்பட இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையும் ஆசிரியர் அபிவிருத்தித் திட்டங்கள் பாடசாலை மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படாமல் தேசிய, மாகாண, வலய மட்டங்களிலேயே நடத்தப்பட்டன. SBTDA திட்டத்தின் அந்தந்தப் பாடசாலைகளிலேயே அப்பாடசாலைகளின் ஆசிரியர்களின் தேவை கருதி சிறப்பான பயிலமர்வுகளை நடத்துவதன் மூலம் பாடசாலை மட்ட அபிவிருத்தி என்ற எண்ணக்கரு பலமடையச் செய்வதுடன் பாடசாலையில் சிறப்பான தேவைகள் நிறைவு செய்வதற்கான திட்டமாகவும் காணப்படுகின்றது. இத்திட்டத்தின் பாடசாலைகளில் ஆசிரிய தரவட்டங்கள் நியமிக்கப்படுகின்றன. (Teacher Quality Circles)

A Quality circle is a get together of teachers who teach a subject in the school in a division. The programme provides a forum for teacher to discuss their problems and exchage expeiences.

புதிய கல்விச் சீர்திருத்த அமுலாக்கங்களில் பாடசாலைகளுக்கு சுயாதீனத்தினை வழங்கும் செயற்பாடு பாடப் புத்தகத் தெரிவும் ஒன்றாகும். (MBO) தற்போது இடைநிலைப் பிரிவில் தரம் 6,7ல் இத்திட்டம் பரீட்சார்த்திட்டமாக கணிதம், தமிழ் போன்ற பாடங்களுக்கு அமுலாக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்ந்து அடுத்தடுத்த வருடங்களில் சகல தரங்களுக்கும் பாடங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. பாடசாலைகள் விரும்பும் பாடப்புத்தகத் தெரிவானது (MOB) கலைத்திட்ட அமுலாக்கங்களில் பாடசாலைகளின் பங்கீட்டினை அல்லது பாடசாலைகளுக்கு சுயாதீனத்தினை வழங்கும் ஒரு பிரதான Paradigm shift ஆகும்.

21ஆம் நூற்றாண்டிற்கான கல்வி எதிர்நோக்கும் சவால்களை எதிர்நோக்கும் ஆற்றலாளர்களை இன்றைய ஆசிரியர் கல்வி உருவாக்குகின்றது. பாடசாலை முறையில் மிக முக்கிய வளவாளராக ஆசிரியர் வகுப்பறையில் தொடர்ந்தும் காணப்படுகின்றார். புதிய அறிவுப்பெருக்கம் நுட்பங்கள் புதிய சவால்கள் ... ஆசிரியர் காணப்படுகின்றார். இதனால் இச்சவால்களுக்கு இன்றைய ஆசிரியர் ... தேவை காணப்படுகின்றது. ... ஆசிரியர் ... இருக்கை பாடசாலைகளிலும் ... 

இதுவரை காலமும் பாடசாலையின் தரம், பிள்ளைகளின் தரம், தேவை என்பனவோ; குறிப்பிட்ட பாடசாலையில் அப்பாடத்திட்டத்தினை கற்பிக்கும் ஆசிரியரின் விருப்பம், அதிபரின் விருப்பம் போன்றவை கவனத்தில் எடுக்கப்படாது மேலேயிருந்து திணிக்கப்படும் பாடப்புத்தகத்தினையே பயன்படுத்தும் நிலை காணப்பட்டது. ஆனால் எதிர்காலத்தில் ஒரு பாடத்திற்கான பல நூல்களில் ஒவ்வொரு பாடசாலையும் தனது விருப்பு வெறுப்பு, பிள்ளைகளின் தரம் என்பவற்றைக் கவனத்தில் எடுத்து ஆசிரியர் அதிபர் என்பவர்களின் பங்களிப்புடன் பாடநூல்களை தெரிவு செய்யும் முறை நடைமுறைப்படுத்தப்படும்.

எனவே இன்றைய இலங்கைப் பாடசாலைகளில் இடம் பெற்று வரும் மாற்றங்களை அவதானிக்கும் ஒருவருக்கு, ஒவ்வொரு பாடசாலையும் அதன் தனித்துவமும், பாடசாலை சமூகத்தின் தேவை, பிள்ளைகளின் நன்மை என்பனவற்றை கவனத்தில் எடுத்து மிகச் சுயாதீனமாக இயங்கும் ஒரு மாற்றத்தின் வாசற்படியில் பாடசாலைகள் காணப்படுவதினை அவதானிக்கலாம். கல்வியில் தர விருத்தியினை (Quality Assurence) வழங்கும் Paradim Shift ஆக இதனை கட்டுரையாசிரியர் நோக்குகின்றார்.

**REFEREMCE**


(1) Treasure of the education system in Srilanka by Dr. Tara de mel

(2) புதிய கல்விச் சீர்திருத்தமும் பரிமாணங்களும் By ஜ.சிவம் இருபதுயிர் (கொழும்பு கல்வி ஆணையாளர்)

(3) தேசிய ஆசிரியர் கல்விக் கொள்கை தேசிய கல்வி அதிகாரசபை இருநூறு.



அகவிழி

**AHAVILI,**

*3, Torrington Avenue, Colombo - 07*

*Tel : 011-2506272*

*E.mail : ahavili@viluthu.org*

சந்தா விபரம்

காசோலை மூலம் பணம் செலுத்துபவர்கள் **AHAVILI** எனப் பெயரிட்டு அனுப்புக.

காசுக் கட்டளையாயின் **AHAVILI** எனப் பெயரிட்டு **HAVELOCK TOWN** தபால்நிலையத்தில் மாற்றக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமகால வாசிப்பு அதிர்வுகளும் அடுத்த காலடியும்

கலாநிதி செ. யோகராசா
முதுநிலை விரிவுரையாளர்
கிழக்குப்பல்கலைக்கழகம்

மாணவர் மத்தியிலே வாசிப்பு ஆர்வம் குன்றியுள்ளமைக்கான காரணங்களாக

- போட்டிப் பரீட்சைக்கு வாசிப்புத் தடையாயிருப்பதாகக் கருதுதல்
- பிறபொழுது போக்குகளிலே அதிக நாட்டம்
- வீட்டுச் சூழல்
- பொருளாதாரப் பின்னடைவு
- சகபாடிகளிடம் வாசிப்பில் ஆர்வமில்லாமை

முதலானவை அமைகின்றன.

0.1 'வாசிப்பு' என்ற விடயம் பற்றி, பல்வேறு வகைகளில் பல்வேறு நிலைகளில் பல்வேறு அணுகுமுறைகளில் அவதானிக்க முடியும். எனினும் வாசிப்பின் இன்றைய நிலை பற்றியும், வாசிப்பார்வம் குன்றியிருப்பின் அதற்கான காரணங்கள் பற்றியுமே இக்கட்டுரை கவனஞ் செலுத்துகின்றது.

0.2 முதலில் வாசிப்பின் இன்றைய நிலைபற்றி அவதானிப்போம். இவ்வாறு, இக்கட்டுரையாளரது நீண்ட கால அனுபவஞ்சார் அவதானிப்புகளே இங்கு ஆதாரங்களாக அமைகின்றன.

அவை பின்வருமாறு :-

2.1 ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையொன்றின் நூலகத்திலுள்ள அலுமாரியின் பூட்டுக்கள் இறுகிக் கறள் பிடித்திருந்தமையால் அவற்றைத் திறப்பது கஷ்டமாகவிருந்தமை. (1991ல்)

2.2 மாநகரசபை நூலகமொன்றின் புத்தக அலுமாரிச் சாவி தொலைந்து பல நாளாகியமையால் குறிப்பிட்ட தினத்தில் தேவையான நூலினைப் பெறமுடியாதிருந்தமை (1991ல்)

2.3 ஆக்க இலக்கிய முயற்சியூக்குதல், வாசிக்கத் தூண்டுதல், நல்ல இரசனையை ஏற்படுத்தல் முதலான நோக்கங்களுடன் அவ்வக் காலமாக வெளிவரும் 'தெரிதல்' சஞ்சிகை (ரூ.5/-) இதழொன்றினை A/L வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விற்றபோது, ஆசிரியர் சிலர் அவ்விதழை வாங்க விரும்பாமை (2004யூன்)

2.4 A/L வகுப்பிற்கு 'தமிழ் இலக்கிய வரலாறு' போதிக்கும் ஆசிரியர்கள் பலர் 1955ல் வெளிவந்த (பேராசிரியர் வி.செல்வநாயகம் எழுதிய) தமிழ் இலக்கிய வரலாற்று நூலை மட்டுமே இன்றுவரை வாசித்தல் (சிலர் வினாவிடை Notes என்பன இருப்பின் அந்நூல் வாசிப்பதைக் கூட தவிர்த்தல்)

2.5 A/L வகுப்பிலே (தமிழகமோ ஈழமோ) நவீன இலக்கியக்காலப் பகுதியைக் கற்பிப்பதை ஆசிரியர் பலரும் தவிர்த்தல் (அவ்விடயம் தொடர்பாக அதிகம் வாசிக்க வேண்டும்)

2.6 A/L வகுப்புத் தேர்விற்கு மறுமலர்ச்சிக்காலக் கதைகள் தொகுப்பு பற்றி ஒருதடவை கேட்கப்பட்டபோது மாணவர் சிலர் அதுபற்றி எழுதியிருந்தமையும் ஆசிரியர்கள் பலர் அதுபற்றி அறியா-திருந்தமையும்.

2.7 பல்கலைக்கழகமொன்றிலே தமிழ் (சிறப்பு) கற்கைநெறியைப் பயின்ற மாணவரொருவர், (பாடத்திட்டத்திற்குத் தேவையா-யிருந்தும் அதிக பக்கங்கள் கொண்ட நூலாதலால்) 'சிவகாமியின் சபதம்' நூலை வாசிக்காது திருப்பிக் கொடுத்தமை (1992ல்)

2.8 பிற்பகல் ஆறு மணிக்குப் பின்னரும் திறந்திருக்க முடியுமாயிருந்தும் பல்கலைக்கழக நூலகமொன்று மாணவர் வருகையின்மையால் மூடப்பட்டமை (1999ல்)

2.9 பல்கலைக்கழகமொன்றிலே விடுதியில் தங்கியிருந்த மாணவரொருவர் இரவிலே தேர்விற்குப் படிக்கின்ற வேளையில் மாணவர் சிலர் அவரை ஏளனஞ் செய்து, ரீ.வி பார்ப்பதற்கு அழைத்துச் சென்றமை (1999ல்)

2.10 பல்கலைக்கழகமொன்றின் நிர்வாகஞ் சார்ந்த வேலையொன்றிற்கான நேர்முகத் தேர்விற்கு வந்திருந்த (பட்டப்படிப்பு முடித்து வெளியேறி வீட்டிலிருந்த) மாணவர் பலர் நாளாந்தப் பத்திரிகை கூட வாசிக்காதவர்களாக இனங்காணப்பட்டமை (2003ல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.11 'தேடல்', 'அதிகம் வாசிக்க வேண்டியிருத்தல்' என்று புறமொதுக்கப் போதுமான (ஆசிரியர், மாணவர் இரு சாராரிடமும் காணப்படுகின்ற) தவறான காரணங்களினால் உயர்வகுப்புகளிலே தமிழை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர் தொகை குன்றி வருகின்றமை.

2.12 குறிப்பிட்ட பிரதேசஞ்சார்ந்த, ஆரம்பக் கல்வி போதிக்கும் பாடசாலைகள் பலவற்றிலே, அப்பாடசாலைகளின் நூலகத்திற்காக அன்பளிப்புச் செய்யப்பட்ட நூல்கள் பலவும் பேணப்படவோ இரவல் கொடுக்கவோ மனமின்றித் தேங்கியிருந்தமை.

2.13 பாடசாலை நூலகமொன்றின் நூல்களை வீட்டில் வாசிக்க நேரமில்லாதபடியால் (பாட ஓய்வு வேளையிலும் வாசிக்க முடியாதாம்) இரவல் பெற்றுக் கொள்ள ஆசிரியர்கள் விரும்பாமை (2004)

2.14 குறிப்பிட்ட பாடசாலைகள் சிலவற்றிலே கற்கின்ற மாணவர்கள் தமது ஒப்படைவேலைக்காக, மாநகர சபை பொது நூலகமொன்றின் பிரதம நூலகரிடம் சென்று உசாத்துணை நூல்களைக் கேட்டு அறியும்படி பணிக்கப்பட்டமை (2003 -2004)

2.15 பெற்றோர் ஆசிரியர்களாகவிருந்தும் தமது மகனின் எழுத்தாற்றலுக்கும் வாசிப்பு ஆற்றலுக்கும் (அது படிப்பிற்கு இடையூறு எனக்கருதி) தடையாயிருந்தமை (2003)

2.16 இதழியல் டிப்ளோமா பயில்கின்ற மாணவர்கள் சிலருக்கு 'அறிவித்தல்கள் என்றால் என்ன?' போன்ற அடிப்படை விடயங்கள் கூட அறியாதிருந்தமை (2005 ஆகஸ்ட்)

2.17 யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள 19 பிரதேசசபை நூலகங்களிலும் நூல் இரவல் பெறுவோர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளமை (அண்மைக்கால 'வீரகேசரி' செய்தி)

2.18 குடும்ப அங்கத்தவர் சிலர் 'அவன் வருவானா?' என்ற சினிமாப் பாடலை வீட்டிலுள்ள 3½ வயதுப் பிள்ளைக்காகவும் விரும்பிக் கேட்டமை.

2.19 புத்தகக் கடையொன்றிலே 15 ரூபா விலையுள்ள 'ஞானம்' சஞ்சிகையின் 10 இதழ்களில் 04 இதழ்களே (எழுத்தாளர்கள் பலரிருந்தும் கூட) விற்பனையானமையும் அதனால் புத்தக விற்பனையாளர் ஞானம் போன்ற சஞ்சிகைகள் விற்பனை நிறுத்தியமையும் (2000)

2.20 கொழும்பிலுள்ள பழைய புத்தகக் கடையொன்றிலே 'அகவிழி'யின் பழைய இதழ்கள் பல குறைந்த விலையில் விற்பனைக்குக் கிடைத்தமை (2005 யூலை)

3. மேற்கூறப்பட்ட ஆதாரங்களுள் சில எமக்கு அதிர்ச்சியளிப்பவை, சில நம்பமுடியாதவை. சில ஜீரணிக்க முடியாதவை; அனைத்துமே விசனத்தை ஏற்படுத்துபவை. எவ்வாறாயினும் இவை ஆசிரியர் (2.3, 2.4, 2.5, 2.6, 2.14, 2.15, 2.20) மாணவர் (2.1, 2.2, 2.12, 2.13, 2.17) இடையே நீண்டகாலமாகவே வாசிப்பு ஆர்வம் குன்றிவந்துள்ளமையை - அதன் ஆரோக்கியமற்ற நிலைமையை - எமக்கு உணர்த்தி நிற்கின்றன!

4. மேற்கூறியவாறான, பரிதாபகரமான நிலைமைக்கான காரணங்கள் யாவை என்பது பற்றி, இனிக் கவனிப்போம். (ஆசிரியர் நிலையும் மாணவர் நிலையுமே இங்கு கவனத்திற்கெடுக்கப்படுகின்றன)

4.1 ஆசிரியர் மத்தியிலே வாசிப்பு ஆர்வம் குன்றியுள்ளமைக்கு பின்வருவன காரணங்களாகலாம்:

**வாசிப்பதற்கு நேரமின்மை**

வாசிக்க வேண்டியதன் அவசியம் உணரப்படாமையும் உணர்த்தப்படாமையும் பாடத்திட்டத்தை முடிப்பதும் பரீட்சைக்குத் தயார்படுத்தலுமே முக்கியமானவையென்று கருதுகின்ற மனோபாவ பின்னடைவு. கல்விமுறையிலுள்ள குறைபாடு பொழுதுபோக்குகளிலே கூடிய நாட்டம் வாசிப்பிலே சிறுவயது தொடக்கம் ஈடுபாடு ஏற்படாமையும், ஏற்படுத்தப்படாமையும் நூல்கள் பெறுவதன் சிரமங்களுமாகலாம்.

4.2 மாணவர் மத்தியிலே வாசிப்பு ஆர்வம் குன்றியுள்ளமைக்கான காரணங்களாவன:-

வாசிப்பதற்கு நேரமின்மை வாசிக்க வேண்டியதன் அவசியம் உணரப்படாமையும் உணர்த்தப்படாமையும் பாடத்திட்டத்தை முடிப்பதும் பரீட்சைக்குத் தயார்படுத்தலுமே முக்கியமானவையென்று கருதுதல்; கல்விமுறையிலுள்ள குறைபாடு; பொழுதுபோக்குகளிலே கூடிய நாட்டம்; வாசிப்பிலே சிறுவயது தொடக்கம் ஈடுபாடு ஏற்படாமையும், ஏற்படுத்தப்படாமையும் நூல்கள் பெறுவதன் சிரமங்களும்.

போட்டிப் பரீட்சை; பரீட்சைக்கு வாசிப்புத் தடையாயிருப்பதாகக் கருதுதல்; பிறபொழுது போக்குகளிலே அதிக நாட்டம்; வீட்டுச்சூழல்; பொருளாதாரப் பின்னடைவு; சகபாடிகளிடம் வாசிப்பார்வமின்மை முதலானவை.

5. குறிப்பிட்டவாறு, வாசிப்பு ஆர்வம் பலவீனங்களிலும் குன்றிய நிலையிலும் சிலவற்றங்களிலே அதற்கான காரணங்கள் இனங்காணப்பட்ட நிலையிலும் எங்கே எப்படி அடுத்த காலை வைப்பது? எமது கல்விமான்களின் முன் விஸ்வரூபமெடுத்து நிற்கின்ற வினா இதுவாகும்! ❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்புப் பழக்கத்தின் இன்றியமையாமை

இன்றைய கல்விச் சிந்தனைகளில் பிரதானமானது கல்வி ஒரு குறிப்பிட்ட வயதுடனோ அல்லது ஒரு கல்வி நிறுவனத்துடனோ முடிந்து விடுவதில்லை. அறிவுவெள்ளம் பல்கிப் பெருகும் இன்றைய நாட்களில் புதிய அறிவுத் தளங்களுடன் எம்மைத் தொடர்புபடுத்திக் கொள்ள கல்வி அறிவைப் பெறும் முயற்சி வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண்டும் என்பதாகும். இக்குறிக்கோளுக்கு உறு துணையாக அமையும் வழிமுறை வாசிப்புப் பழக்கமாகும்.

கலாநிதி மா. கருணாநிதி
கல்விப்பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்

பாடசாலை செல்லும் மாணவர்கள் வாசிப்பதில் ஈடுபடுகின்றார்கள் என்பது உண்மை. இந்த வாசிப்பானது பாடநூல்களுடனும் வகுப்பறையில் ஆசிரியர் கொடுக்கும் குறிப்புகளுடனும் மட்டுப்படுத்தப்படுகிறது. பெரும்பாலும் பிள்ளைகள் வாசிப்பதில் ஈடுபடுகின்றார்கள். இவ்விடயத்தில் பெற்றோரின் ஊக்குவிப்பும் பாடநூல்களோடும் குறிப்புகளோடும் தொடர்பாகவே அமைந்து விடுகின்றன. இத்தகைய வாசிப்புகள் கற்றலுடன் நேரடியாக இணைக்கப்படுவதனாலாகும். இவர்கள் பாடசாலை மட்டப் பரீட்சைகளிலும் போட்டிப் பரீட்சைகளிலும் வெற்றிபெறுகின்றனர். உண்மையிலே வாசிப்பு என்பது இதனைக் கருதவில்லை.

பாடசாலைக் கல்விக்காலத்தில் பல்வேறு விடயங்களைக் கற்க வேண்டிய தேவை மாணவர்களுக்கு உண்டு. அவற்றுள் மிகமுக்கியமானது வாசிப்புப் பழக்கமாகும். பாடசாலை செல்லும் காலத்தில் வாசிக்கும் பழக்கத்தினை விருத்தி செய்யாத பிள்ளை பிற்காலத்தில் அதனை விருத்தி செய்வான் என உறுதியாகக் கூற முடியாது. ஏனெனில் அதற்கான வாய்ப்புகளை சந்தர்ப்பம் கிடைப்பது அரிதாகும். வாசிப்புப் பழக்கத்தை புதிதாக ஏற்படுத்திக் கொள்ள முடியாது.

ஒருவருக்கு வாசிப்பின் முக்கியத்துவம் எடுத்துக்காட்டப்படுவதுடன், அது வாழ்க்கைக் காலம் முழுவதும் தொடர்ந்து இடம்பெற வேண்டும் என்பதையும் வலியுறுத்துதல் வேண்டும். பாடசாலைக் காலத்திலே இத்தகைய பழக்கத்தினை விதைக்கும் பொறுப்பு, போதிய ஊக்குவிப்பினை வழங்கும் பொறுப்பு ஆசிரியரைச் சாருகின்றது. இவ்விடத்தில் எனது அனுபவம் ஒன்றை பரிமாற விரும்புகின்றேன். நான் இடைநிலைக்கல்வி பயின்ற பாடசாலை ஒரு சிறிய பாடசாலையாகும். அப்பாடசாலையில் இருந்த அதிபர் புத்தாக்கச் சிந்தனையுடன் கூடிய ஒருவர், அவரால் அறிமுகப்படுத்தப்பட்ட சுற்றுவாசிப்பு முறையினால், ஒரு வருடத்தில் சராசரியாக 25 அல்லது 30 நூல்களை வாசிக்கும் வாய்ப்பு இருந்தது. அத்தகைய நூல்கள், இலக்கியம், வரலாறு, விஞ்ஞானக் கட்டுரைகள், ஆளுமையுள்ள மனிதர் பற்றிய கட்டுரைகள், பொது அறிவு போன்ற பல்துறை விடயங்களாக அமைந்தன.

சிறுவயதில் ஏற்பட்ட வாசிப்புப் பழக்கம் க.பொ.த சாதாரணதரம் மற்றும் உயர்தரம் கற்கும் மாணவர் பருவத்தில் சாதகமானதொரு போக்கினையும் உருவாக்கியது. இத்தகைய பழக்கத்தினை எமது ஆசிரியர்கள் ஏற்படுத்தியதன் பலாபலன்களை நன்கு உணர்கின்றேன்; அனுபவிக்கின்றேன். பல்கலைக்கழகத்தில் எனது கற்றல், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றிற்கு சிறந்ததொரு அடித்தளம் இதுவேயாகும்.

ஏதாவது தொழிலில் வெற்றிகண்ட நூற்றுக்கணக்கான தொழிலதிபர்களிடம் காணப்படும் குணாதிசயங்கள் பலவற்றில் வாசிப்பும் ஒன்றாக இடம்பெற்றிருக்கும். இத்தகையோர் தமது துறைசார்ந்த நூல்களை வாசிப்பதில் தேர்ச்சியுடையோராக மட்டுமன்றி ஏனையவற்றையும் வாசிக்கின்றனர். சில தொழில்வல்லுனர்கள், வாசிப்பின் ஈடுபாட்டினால் துறைகளை மாற்றிக் கொண்டமையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். பல மருத்துவர்கள் ஆக்க இலக்கியகாரராகவும் பொறியியலாளர்களாகவும், சமூகவியலாளராகவும், அரசியல்வாதிகளாகவும் பரிமளிப்பதைக் காண்கிறோம். வாசிப்பின் வழியிலேயே அவர்களது சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட விடயங்கள் பல ஆய்வு முடிவுகளில் இருந்தும் சொந்த அனுபவங்களில் இருந்தும் பெறப்பட்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பேச்சாளர்களாகவும், அறிஞர்களாகவும் ஆராய்ச்சியாளராகவும் சமூக மற்றும் கலை இலக்கிய விமர்சகர்களாகவும் பிரபல்யமடைந்து அவ்வத்துறைகளில் தமது பெயர்களை நிலைநாட்டிக் கொண்ட பலரின் பின்புலத்தை நோக்கும் பொழுது அவர்கள் சிறந்த வாசகர்களாக இருந்துள்ளனர் என்பது தெரியவருகின்றது. இத்தகையோர் இவ்வுயர் நிலைமைகளை எய்துவதற்கு உதவிய காரணிகளைப் பட்டியலிட்டுக் கூறமுடியும். (1) அவர்களுடைய கல்விக் காலத்தில் பெற்ற சிறந்த வகுப்பறைப் போதனை, சிறந்த ஆசிரியர்கள் (2) அவ்வாறு பெற்றுக் கொண்ட ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவினைத் தமது சுயசிந்தனைகள், விரும்பி ஏற்றுக் கொண்ட அரசியல், பொருளாதார, சமூக, இலக்கிய சித்தாந்தங்கள் என்பவற்றோடு இணைத்துப் புதிய கருத்துக்களை உருவாக்கும் முயற்சி.

இவற்றுக்கு அப்பால் தனது துறையிலும் அதற்கு மேலுமுள்ள தொடர்புபட்ட துறைகளிலும் புதிய விடயங்களை அறிந்து கொள்ள வேண்டுமென ஊக்கமுடன் செயற்பட நோக்கிக் கொண்ட வாசிப்புப் பழக்கம். இத்தகைய பழக்கமானது ஒரு குறுகிய முறையில் தனது துறையை நோக்காது பல்வேறு சார்ந்த புலமையோடு அத்துறையை நோக்கி அது சார்ந்த பல புதிய பரிமாணங்களைக் காணவேண்டும் என்ற ஊக்கமானது, பரந்த வாசிப்புப் பழக்கத்துக்கு இட்டுச் செல்கின்றது.

வாசிப்புப் பழக்கத்தினால் ஏற்படக் கூடிய பரந்த புலமைசார் நிலைப்பாட்டிற்கு ஒரு சிறு எடுத்துக்காட்டைக் கூறலாம். இன்று மரபுவழிவந்த வரலாற்றுப் பாடத்துக்குப் பதிலாகத் தோன்றியுள்ள புதிய வரலாறு என்னும் வரலாற்றியல் கருத்திற்கு, வரலாற்றுக் கல்விக்கும் சமூகவியல் மானுடவியல், உளவியல் பொருளியல், அரசறிவியல் போன்ற துறைகள் சார்ந்த அறிவு தேவைப்படுகின்றது. இவ்வாறு வரலாற்றைப் புதிய முறையில் நோக்குவதற்கு முதலிரண்டு வழிமுறைகளைவிட வாசிப்புப் பழக்கமே அறிஞர்களுக்குப் பெரிதும் துணையாக இருந்து வருகின்றது.

இன்றைய கல்விச் சிந்தனைகளில் பிரதானமானது கல்வி ஒரு குறிப்பிட்ட வயதுடனோ அல்லது ஒரு கல்வி நிறுவனத்துடனோ முடிந்து விடுவதில்லை. அறிவு வெள்ளம் பெருக்கெடுக்கும் இன்றைய நாட்களில் புதிய அறிவுத் துறைகளுடன் எம்மைத் தொடர்புபடுத்திக் கொள்ள கல்வி அறிவைப் பெறும் முயற்சி வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண்டும் என்பதாகும். இக்குறிக்கோளுக்கு உறுதுணையாக அமையும் வழிமுறை வாசிப்புப் பழக்கமாகும்.

இப்பின்புலத்தில் இன்று கல்வியை இளையோர் மத்தியில் பரப்புவதை வாழ்தொழிலாகக் கொண்ட இலட்சக்கணக்கான ஆசிரியர்கள் (பாடசாலை, பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள் என்பவற்றைச் சேர்ந்தவர்கள்) பல்கிப் பெருகும் பல்துறைசார்ந்த அறிவுத் தொகுதியுடன் தம்மை இணைத்துக் கொள்வதற்கான பிரதான வழிமுறை வாசிப்புப் பழக்கமாகும். இன்று பல இலட்சக் கணக்கான நூல்கள், சஞ்சிகைகள், கலைக்களஞ்சியங்கள் என்பவற்றில் மாத்திரமன்றி இணையத்திலும் எழுத்தில் விபரித்துக் கூறமுடியாத அளவுக்கு நவீன அறிவும், ஆய்வு முடிவுகளும் சேமித்து வைக்கப்படுகின்றன. வாசிப்புப் பழக்கத்தினூடாகவே இப்பெருநிதியங்களை நாம் தரிசித்துப் பயனடைய முடியும். □

---

கலை

மனிதனின் பகுத்தறிவை பாதிப்பவை அவன் உணர்வுகளைப் பாதிக்கிறது. அவன் ஆன்மாவை இயக்குகிறது. நல்ல விஷயங்களை நோக்கி அவனை திருப்புகிறது.

— ஆந்த்ரேய் தார்க்கோவ்ஸ்கி —

□ □ □ □

இன்று பழைய உலகுக்கு மாற்றாக தொடர்பு சாதனங்கள் விளங்குகின்றன. பழைய உலகை மீட்டெடுக்க நாம் விருப்பப்பட்டால் அதற்கு ஒரே வழி இந்தத் தொடர்பு சாதனங்கள் எப்படி பழைய உலகை கபளிகரம் செய்தன என்பது குறித்து தீவிரமாக ஆராய்வதுதான்.

— மார்ஷல் மெக்லூஹன் —


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு பழக்கம் : வளர்ச்சி, தடைக்கல், எமது கல்விமுறைமை

நூல்கள் மாற்றங்களுக்கு வழிவகுக்கும் தன்மை உடையன. பல நூல்கள் மனித வரலாற்றில் புரட்சிகள் ஏற்படக் காரணமாகி இருந்தன. உலகளாவிய ரீதியில் நிகழ்ந்த சோஷலிசப் புரட்சிகளுக்கு கார்ல் மார்க்ஸ் எழுதிய 'மூலதனமும்' கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையும் (ஏங்கல்சுடன் எழுதிய Communist manifesto) தளம் அமைத்துக் கொடுத்தன.


சோ. சந்திரசேகரம்
பேராசிரியர் — கல்வியியல் துறை
கொழும்புப் பல்கலைக்கழகம்


பல்வேறு கல்விக் கருத்தரங்குகளிலும் நூல் வெளியீட்டு விழாக்களிலும் வெளிப்படுத்தப்படும் முக்கிய ஆதங்கம் இன்றைய இளைஞர் மத்தியில் வாசிப்புப் பழக்கம் குறைந்து விட்டது என்பதாகும். ஆயினும் 'அன்றைய' (என்றைய?) இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் பெரிய அளவில் இப் பழக்கத்தைக் கொண்டிருந்தார்கள் என்றும் கூறமுடியாது. 'அன்று' வாசிப்பில் ஈடுபாடு காட்டிய ஒரு சிலர் கூட இன்று இல்லை என்பதே இந்த ஆதங்கத்தின் உட்பொருள் எனக் கொள்ளலாம்.

இன்றைய இளைஞர்களின் நேரத்தை விழுங்கும் பிரமாண்டமான 'திசைதிருப்பிகள்' இருப்பதை மறுக்க முடியாது. தொலைக்காட்சி, திரைப்படம், கிரிக்கெட், செல்போன் என்று அடுக்கிக் கொண்டு செல்லலாம். அத்துடன் இதுவரை காலமும் நடைமுறையிலிருந்து வந்துள்ள கல்வி முறை. க.பொ.த சா/த , உ/த பொதுப் பரீட்சைகள் என்பன வாசிப்புப் பழக்கம் இல்லாமலே உயர்வான மதிப்பெண்களைப் (தரங்களைப்) பெற முடியும் என்ற நிலையை ஏற்படுத்திவிட்டன.

க.பொ.த உ/த கல்வி நிலையில் பயன்படுத்தக் கூடிய விதிக்கப்பட்ட பாடநூல்கள் கூட இல்லை. விரிவுரைக் குறிப்புகள், ஆசிரியர் தரும் விளக்கங்கள், பரீட்சை வழிகாட்டிகள், பழைய பரீட்சை வினாத்தாள்கள், சிறுசுன் வகுப்புக்கள் மனனம் செய்யும் / நினைவிலிருத்தும் ஆற்றல் என்பனவே மாணவர்களுக்கு கற்க உதவும் அல்லது பரீட்சைக்கு உதவும் சாதனங்கள். இதில் நூல் நிலையப் படிப்புக்கோ சுய தேடலுக்கோ அதிக இடமில்லைதான். எமது கல்வி முறையின் உள்ளார்ந்த அம்சங்கள் பல இளைஞர்களின் பொது வாசிப்புப் பழக்கத்தின் வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக உள்ளது.

இப்பின்புலத்தில் நூல்கள், நூல்வாசிப்பு என்பவற்றின் முக்கியத்துவம் பற்றிச் சில விடயங்களை வலியுறுத்திக் கூற வேண்டியுள்ளது.

* உலகில் ஆற்றல் மிக்க, நன்கு வெற்றிகண்ட தலைவர்களின் குணப் பண்புகள் பற்றிய ஆய்வுகள், அவர்கள் அனைவரும் சிறந்த வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். தாம் சம்பந்தப்பட்ட துறை என்றில்லாது பல்துறை சார்ந்த நூல்களையும் வாசிப்பவர்களாக அவர்கள் காணப்படுகின்றனர்.
* நூல்கள் அறிஞர்களால், படித்தவர்களால் முயன்று எழுதப்படுபவை. நூல்களை எழுதுபவர்களும் அதனூடாகத் தமது வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்கிறார்கள். நூல்களை வாசிப்பவர்களும் தமது நடத்தைகளைத் திருத்திக் கொள்ளும் வாய்ப்பு உண்டு.
* நூல்கள் மனிதர்களுக்கு உற்றதுணைவர்கள்; அவை மனிதர்களிடம் எதனையும் வேண்டி நிற்பதில்லை (Undemanding) மனிதன் எத்தகைய சிரமங்களுக்கும் தொல்லைகளுக்கும் உள்ளான போதும் அவனைக் கைவிட்டு விடுவதில்லை (Do notdesert).
* ஒரு மனிதன் எப்படிப்பட்டவன் என்பதை அவன் வாசிக்கும் நூல்களிலிருந்தும் அவன் வைத்திருக்கும் புத்தகத் தொகுதிகளைக் கொண்டும் அறிந்து கொள்ளலாம்.
* அலெக்சாந்தர் மன்னன் நூல்வாசிப்பில் விருப்புடையவன். தத்துவ ஞானி அரிஸ்டோட்டில் எப்போதும் அவனுடன் செல்பவர். ஆயினும், போருக்குச் செல்லும் போது ஹோமரின் காவியங்களையும் கூடவே எடுத்துச் செல்வான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எதனையும் துறந்து விடலாம், வாசிப்பினால் பெற்ற அறிவை மட்டும் இழந்து விட முடியாது. நூலைப் படித்து விட்டு மறந்து போனாலும் நீங்காது எஞ்சி மனதில் நிற்பதுதான் கல்வி கற்றல் (Clearning) எனலாம்.

* வாசிக்கும்போது கிடைக்கும் தரவுகள் பதனிடப்பட்டு அறிவாகக் கிரகிக்கப்படுகின்றது. அவ்வறிவு பயன்படுத்தப்படும் போது அது ஞான அறிவாகின்றது. (Wisdom)

* நூல்கள் மாற்றங்களுக்கு வழிவகுக்கும் தன்மை உடையன. பல நூல்கள் மனித வரலாற்றில் புரட்சிகள் ஏற்படக் காரணமாகி இருந்தன. உலகளாவிய ரீதியில் நிகழ்ந்த சோஷலிசப் புரட்சிகளுக்கு கார்ல் மாக்ஸ் எழுதிய 'மூலதனமும்' கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையும் (ஏங்கல்சுடன் எழுதிய Communist manifesto) தளம் அமைத்துக் கொடுத்தன.

* புத்தக வாசிப்பில் வெறி பிடித்தோரும் வரலாற்றில் உண்டு. பாரசீக நாட்டின் அப்துல் கசீம் என்ற போர்த்தலைவன் தன்னிடமிருந்த 1,17000 நூற்தொகுதிகளைச் சென்ற விடமெல்லாம் ஒட்டகத்தில் மீது ஏற்றிச் சென்றான். அவை அகர வரிசைப்படி நிரையாக நூல்களைச் சுமந்து பயணஞ் செய்தன என்பது வரலாறு.

* புத்தகங்கள் கேலிப் பொருளாகவும் சுட்டப்படுவதுண்டு. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது, புத்தகப் பூச்சி, புத்தக அறிவு என்னும் கருத்தாக்கங்கள் அத்தகையன.

* அச்சிடப்பட்ட முதலாவது புத்தகம் குட்டன்பேர்க்கின் பைபிள்நூல். அச்சிடப்பட்ட மிக அழகிய நூலும் அதுவே. பைபிள் என்னும் சொல்லும் சாதாரணமாக புத்தகத்தையே குறிக்கும். இதிலிருந்து நூற்பட்டியலைக் குறிக்கும் Bibliography என்னும் சொல்லும் புத்தக ஆர்வலர்களைக் குறிக்கும் Bibliophilic என்னும் சொல்லும் பிறந்தன.

* குட்டன்பேர்க்கின் பைபிள் பிரதியொன்று 1970 இல் 25 இலட்சம் டொலர்களுக்கு விற்பனையானது. ஆனால் குட்டன்பேர்க் தமது காலத்தில் மிக வறியவராக வாழ்ந்து கடன் பட்டுக் காலமானார்.

* பலரும் நூல்களை எழுதுகின்றார்கள். ஆனால் சிலர் மட்டுமே அவற்றைப் பிரசுரிக்கின்றார்கள். மிகச் சிலரே தமது நூல்களை விற்க முடிகின்றது. எமிலிடிக்சன் என்ற கவிஞரின் ஏழு கவிதைகள் மட்டுமே அவரது காலத்தில் பிரசுரமாயின. Kafka தனது நூல்கள் சிலவற்றை பிரசுரிக்க விரும்பவில்லை. அவர் பெரிதும் விமர்சித்த அவரது நூலொன்று மிகப் பிரபல்யமாயிற்று. அச்சிட்ட 1250 பிரதிகளும் முதல் நாளே விற்பனையாகிவிட்டன, நூலின் பெயர் The Origin of Species ஜோர்ஜ் பைரனின் கவிதை நூலின் 30,000 பிரதிகளும் முதல் நாளே விற்பனையாகிவிட்டன. உலகில் ஐஸ்லாந்து நாட்டவர்களே மிகச் சிறந்த வாசகர்கள்.

* வாசிப்பு பழக்கமானது பலதரப்பட்ட சிந்தனைகளை மனதில் தூண்டி விடுகின்றது. சிந்தனைகள் ஒரு வழிப் போக்காக அமைந்து விடக் கூடாது. புத்தகங்கள் மனித வாழ்க்கையில் திருப்பு முனைகளை ஏற்படுத்தக் கூடும். அவை தகவல்களை (Inform) வழங்குகின்றன; மனிதனைப் பண்படுத்துகின்றன. (Reform ) அவனில் மாற்றங்கள் ஏற்படக் காரணமாகின்றன. புத்தகங்கள் மனிதனின் செல்வத்தைப் வெளிப்படுத்தும் காட்சிப் பொருட்கள் அல்ல ;அவை மனிதனைப் பகுப்பாய்வுக்கும் சிறந்த சிந்தனைகளின் கிரகிப்புக்கும் இட்டுச் செல்வன. உலக வரலாற்றில் பல புத்தகங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு முதலாவதாகத் தடை செய்யப்பட்ட நூல் இடிபஸ் (Oedipus) என்பதாகும். Sophocles இந்நூலை எழுதிய போது அவருக்கு வயது 90க்கு மேல்.

(ஆதாரம் : வி. இறையன்பு இந்து பத்திரிகையில் எழுதிய கட்டுரை)

---

உலகளாவியதாய் உருப்பெற்றுவரும் தமிழ் இலக்கிய ஆய்வு விருத்தியின் பிரிக்கவியலாத அம்சமாகவே ஈழத்துத் தமிழிலக்கிய ஆய்வும் கடந்த சில வருடங்களாகப் பரிணமித்து வந்திருக்கிறது. யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரிந்த பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையவர்கள் வரையறுத்துக் குறிப்பிடக் கூடிய ஒரு காலகட்டத்தில் தமது ஆசிரியப் பணியாலும் புலமை மிக்க எழுத்துக்களாலும், சொற்பொழிவுகளாலும் ஈழத்துத் தமிழ்ப் பாரம்பரியத்திலே குறிப்பாக யாழ்ப்பாணத்து தமிழ்ப் பாரம்பரியத்திலே தமிழ்க் கல்வி, கலாச்சாரம், சைவசமயம் ஆகிய துறைகளில் சுட்டிக் காட்டக் கூடிய அளவு ஒரு பெருந்தாக்கத்தை ஏற்படுத்திச் சமுதாயத்தின் பெரும் மதிப்பைப் பெற்றிருந்தார்.

பேராசிரியர் அ. சுசீந்திரராஜா
ஈழத்துப் பண்டிதமணி பக்கம் 57 - 2002


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் சில புத்தகங்களும்

எஸ்.ராமகிருஷ்ணன் நவீன தமிழ் இலக்கியத்தில் தொடர்ந்து தீவிரமாக இயங்கி வருபவர். எண்பதுகளுக்குப் பின்னர் அவரது படைப்பாளுமை பல நிலைகளில் நிறுவப்பட்டுள்ளது. சிறுகதை, நாவல், மொழிபெயர்ப்பு, விமர்சனம், நாட்டாரியல், சினிமா என விரிந்தது.

'சாக்கியங்களின் சாலை' என்ற நூல் மூலம் தனது வாசிப்புப் பரப்பின் ஆழ அகலங்களை அனுபவ உள்ளுணர்வுகளை, சிந்தனையின் பிரதான தொடர் விசாரணைகளை, படைப்பியல் நுட்பங்களை தரிசனப் பதிவாக முன்வைக்கின்றார். அந்நூலில் 'நானும் சில புத்தகங்களும்' எனும் தலைப்பில் எழுதிய குறிப்பு இங்கு மீள் பிரசுரமாகிறது. வாசிப்பு என்பது தொடர்ந்த சிந்தனைப் பிரவாகத்தின் ஊள்ளீடாக இருக்கும் என்பதை இதன் மூலம் நாம் புரிந்து கொள்ளலாம். — (ஆ)

**எஸ். ராமகிருஷ்ணன்**
எழுத்தாளர்
தமிழ்நாடு

பள்ளிநாட்களில் இருந்தே புத்தகங்களின் மயக்கத்திற்குள் அலைந்து கொண்டிருக்கத் துவங்கியதன் சாட்சி, நிழலைப் போல இன்றும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. புத்தகங்களை முதலில் எனக்கு அறிமுகப்படுத்திய மனிதர் யாராக இருக்கக்கூடும் என ஞாபகம் தேடுகிறது. தெளிவாக எவர் உருவமும் புலப்படவில்லை. வீட்டிலிருந்த புத்தகங்கள், கிளைநூலகங்கள், கிராமிய, இடதுசாரி விவாத புத்தகங்கள், கலைந்து கிடக்கும் மரப்பெஞ்சினை நோக்கி எந்த வயதில் முன்னேறினேன் என்பதும் தெளிவற்றதாகவே உள்ளது.

அண்ணனும் சித்தப்பாக்களும் யாருமற்ற மாடியின் ஒற்றைச் சுவரில் சாய்ந்தபடியோ, படர்ந்த வேம்பின் நிழலடியில் கட்டிலில் கல்லின் மீது சாய்ந்தபடியோ, ஒரு தனி உலகைச் சிருஷ்டித்துப் புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கும் சிற்பக் காட்சி போன்ற மயக்கக் காட்சிகள் இன்னமும் நினைவில் இருக்கின்றன. நடக்கும் சத்தம் கூட எழுப்பாமல் வரவேண்டியிருக்கும். சத்தத்தில் ஒரு கணம் அவர்களை எரிச்சலுறுத்தி விடும். பின்னால் ஒளிந்து பார்ப்பதை அவர்கள் மிக கோபமாகக் கண்டிப்பார்கள். ரகசிய வாசனை என அந்தப் புத்தக வாசனைக்குப் பெயரிட்டிருந்தேன். ஒருவேளை வீட்டில் அந்த வாசனை புத்தகங்களை முதலில் விசிறமுடையதாக்கியிருக்கலாம்.

வீட்டில் பெண்களும் படிக்கும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள். அவர்களும் கூட படிக்கும் போது ஏதேதோ முகங்களுக்குள், மகிழ்ச்சியாக பெருமூச்சிட்டுக் கொண்டவர்களாக இருப்பதைக் கண்டிருக்கிறேன். புத்தகம் என்பது ஒரு கனவு என முதலில் ஒரு சித்தி சொன்னாள். அவள் புத்தகங்களை மிகவும் அந்தரங்கமானதொரு காதலில் வாசிப்பவளாக இருந்தாள். சில நேரங்களில் புத்தகங்களின் வாசகங்களை தானே பேசிக்கொள்வதும், அதன் கதாபாத்திரங்களை தானே காதலிப்பதையும் செய்து வருபவளாக இருந்தாள். வீட்டில் பிற வயதினர்களோடு பேச அனுமதிக்காத சூழலில் அவள் காகித வரிகளில் நடமாடும் வாலிபர்களோடு மிகுந்த சிநேகத்துடனும், ஒளிந்து பேசி அவர்களோடு காதல் கொண்டிருந்தாள். அவளது ஆட்டோகிராப் புக்கில் கதைகளின் நாயகர்கள். அவளை நேசித்துக் கையெழுத்து போட்டுத் தந்தார்கள். அவளே பல ஆண்களின் பெயரில் கையெழுத்திட்டு அடிபாத நாத்தா அவளது அத்தனை புத்தகங்களையும் ஒரு இரவில் எடுத்துக் கொளுத்தியபோது எரிந்து சிவப்பு நிற சுடரின் படபடப்பும், விசும்பி விசும்பி அழுத அவள் முகமும் புத்தகத்தின் வடிவத்தை எனக்குள் என்றோ கலைத்துவிட்டது.

ஒவ்வொருவருக்கும் ஒருவகை புத்தகத்தாகத்தால் படிக்கிறார்கள். எவ்வேளையும் வாசிப்பதற்கான புத்தகம் என எதுவும் எழுதப்பட்டதேயில்லை. காலனின் பாத நிழலைப் பற்றிக் கொள்வதற்காக வீட்டில் எப்போதும் தேவாரம், திருவாசக புத்தகங்களைத் தங்களது நாவில் புரட்டியபடியிருந்தவர்கள் யாவரும் புத்தகம் என்பது வார்த்தைகளை மீட்டிப் பாடும் கலையென்றே அறிந்திருந்தார்கள்.

கோபமிக்க இளைஞர்களோ புத்தகங்கள் ஒரு கொந்தளிப்பு என்றும், ஒரே நாளில் உலகைப் புரட்டிப்போட்டுவிடத் தயாராயிருக்கும் ஒரு நெருப்புக்கோளம் எனவும் விவாதித்துக் கொண்டார்கள். இளம் பெண்கள் காதலும் வேதனையும் கலந்த ரகசிய பேச்சென ஏதேதோ அவர்களுள் பேசிக் கலைந்த ரகசிய பேச்சென ஏதேதோ அவர்களுள் பேசிக் கலைந்த நாட்களில் பாங்கான வாழ்வில் இருந்த நானும் எனது சகோதரிகளும் புத்தக வாசித்தல் என்பது ஒருவகை விளையாட்டு என ஆர்வம் கொள்ளத் துவங்கினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமிக்கஸ் புத்தகங்களில் ஒன்றான 'தோற்பதற்காகவே ஆடப்படுபவன்' என்ற ரிப் கெர்பி எனும் சாகசக்காரனின் கதையை வாசித்த பசுமையான நினைவுகள் இப்போதும் நினைவின் தொலைவில் மங்கிய வெளிச்சத்தோடு தெரிந்து கொண்டிருக்கிறது. பள்ளியின் அரையாண்டு கால விடுமுறை நாட்களில் ஒவ்வொரு அக்கா பையன்களிலும் நானும் ஆர்வம் தளராது புத்தகம் படிப்பவனாக எல்லோரிடமும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டுமென ஆசை மிகுந்தவனாக வாசலை ஒட்டிய திண்ணையில் சாய்ந்து கொண்டு ரிப் கெர்பியின் 'தோற்பதற்காகவே ஆடப்படுபவன்' என்ற புத்தகத்தைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினேன். அதுவரை எனக்குப் பள்ளியிலும் வீட்டிலும் பழக்கப்பட்டிருந்த வார்த்தைகள், வாசகங்கள் எதுவும் அதில் இல்லை. நிஜமாகவே வேறு பாஷையில் எழுதப்பட்ட புத்தகமோ எனும்படியான வாக்கிய அமைப்புகள். ஆனால் தமிழ் எழுத்துக்கள் தெளிவாகத் தென்படுகின்றன. நான் மிக ஆர்வத்தோடு வாக்கியங்களை விடவும் சித்திரங்களின் மீது அதிக விருப்பம் கொண்டவனைப் போல பாகங்களுடன் கவனித்துக் கொண்டிருந்தேன். இப்பொழுதும் அந்தச் சித்திரங்கள் தெளிவாக நினைவில் பதிந்திருக்கிறது. கறுப்பு வெள்ளைக் கோட்டோவியம். ஓர் குதிரையின் மேல் துப்பாக்கி ஏந்தியபடி ரிப் கெர்பி நிற்கிறான். அவனது தோளில் கொள்ளைக்காரர்களின் இரட்டைக் குழல் துப்பாக்கி. முகம் கூர்மையாக இருக்கிறது. அதில் அலட்சியமான சிரிப்பு தென்படுகிறது. காலடியில் மிக கனமான பூட்ஸ். குதிரையின் நிழல் பின்புறம் பாதி வெளிச்சமாக விழுந்து கிடக்கிறது. அவன் எதிரே வானில் சிதறியபடி விழுந்து கொண்டிருக்கும் சீட்டுக்கட்டின் கார்டுகள். அதன் நடுவே 'தோற்பதற்காகவே ஆடப்படுபவன்' என விசித்திரமான தீன் எழுத்து.

இந்த முதல் பக்கமே எனக்குப் போதுமானதாக இருந்தது. ஒருபோதும் அறிந்திராத துப்பாக்கி விசையும் குதிரையும் ஒரே நேரத்தில் சிரிப்பையும் வேடிக்கையையும் தந்தது. நானே ரிப் கெர்பி போல எனது வீட்டின் முகப்பில் கட்டப்பட்டிருந்த ஆட்டுக்குட்டி, திண்ணையில் படுத்துக் கிடக்கும் நாய், மேய்ந்து கொண்டிருக்கும் கோழிக்குஞ்சுகள் யாவும் கேட்கும்படியாகச் சொன்னேன். 'நான் ரிப் கெர்பி. ரிப் கெர்பி' புத்தகங்களில் மிக அரியதும் ஆசையூட்டும் தீரர்கள் எனது சப்தத்திற்கு தலையை உயர்த்திப் பார்த்தன. தங்கள் நித்திய காரியங்-



களில் மூழ்கத் தொடங்கியிருந்தன. நான் அதே பக்கத்தை திரும்பத் திரும்ப வாசித்துக் கொண்டேயிருந்தேன். இன்றளவும் அதைப்போல வியப்பு தீராத ஒரு பக்கத்தை வாசிக்கும் நிகழ்வு கூடவேயில்லை. ஏனோ சிரிப்பு எனைத் தொற்றிக் கொண்டது. பயமாது என்பது நிஜ வாழ்வுப் போல ரசிக்கத்தெரியாப் புரியத்தவங்கியது புத்தகத்தின் கரைகளுக்குள்தான். எப்போதும் கதைகதைப்பில் கொண்டேயிருக்கும் மனநிலை அறிந்தவனானேன்.

விடுமுறையான பகல் நாட்களும் பாயின் பார்வையில் படும்படியாக நான் புத்தகம் படிப்பவனாக அமர்ந்திருந்த போதும் அவை எவர் கவனத்தையும் கவரவே யில்லை. பதிலாக வாசித்துக் கொண்டிருக்கும் நான் ஒன்றில் மட்டும் தெரியாமல் ஒளிந்து எட்டிப் பார்த்த சகோதரிகளில் ஒருத்தி பிறந்த எங்கள் அண்ணையம் அறையில் போட்டுக்கவிட்டாள். இது அப்போட புத்தகம் திருடி வச்சிருக்கான் நான் மிரட்சியும் கோபமும் மீறி, மறுத்துக் கத்தியபோது அவள் அம்மாவைக் கையோடு அழைத்துக் கொண்டு வந்து காட்டினாள்.

விடுமுறைக்காக வந்து போன உறவுக்காரரின் மகன் கொண்டு வந்த புத்தகம் என்பதோ, அது தொலைந்து வீடெங்கும் தேடப்பட்டதோ எதுவும் தெரியாத நான் மிக மோசமான குற்றத்திற்காக அகப்பட்டுக் கொண்டவன் போல கையோடு பிடிபட்டிருந்தேன். அம்மா புத்தகத்தை வாங்கி சோதனையிட்ட போது அதன் முப்பத்திநாலாவது பக்கத்தில் சிறிய எழுத்தில் கிறுக்கலாக ரிப் கெர்பியின் காவலரின் கப்பு என எழுதியிருக்கிறது. நான் இதுவரை முப்பத்தி நாலாவது பக்கம் படிக்கவில்லை என்பதையும், அதை நான் திருட வேண்டியதற்கான எந்த முன்காரணமுமில்லை என்பதையும் நிரூபிக்க முயன்று இயலாமல் திட்டும் ஏச்சும் வாங்கியவனாக, பாதியிலே புத்தகத்தைப் பிடுங்கி காதைத் திருகி புறப்பட்டுப் போகும் சித்தப்பாவிடம் தந்து சப்புவிடம் ஒப்படைத்து விடும்படியான நிகழ்ச்சி நடந்தேறிய நாளில், தனியே வைக்கோல் போரில் படுத்துக் கொண்டு சப்தமில்லாமல் அழுததோடு, இனிமேல் இதுபோல காட்டிக் கொடுத்துவிடும் சகோதரி எவரும் என்னோடு பிறக்க வேண்டாமெனக் கடவுளைப் பிரார்த்தனை செய்தேன். பாதி படிக்காமலே விடுபட்டுப் போன அந்தப் புத்தகம் பின் கிடைக்காமலே போனது. வேறு ஒரு வயதில் அதைத் தேடிப் படித்தபோது சாகசம் மறைந்து துக்கம் மட்டுமே மிஞ்சியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள் என்னோடு பின் எந்த சிரமமும் இன்றி உறவு கொள்ளத் துவங்கி விட்டன. எண்ணிக்கையற்ற மனிதர்கள் உலவித் திரிந்த புத்தக வனத்தில் நானும் தனியனாகச் சுற்றிக் கொண்டேயிருக்கிறேன். காட்டு விறு சக்கரைப்போலவே புத்தகங்களும் தங்கள் உருவை அடிக்கடி மாற்றிக் கொள்கின்றன. ஏதேதோ சப்தங்களையும், மயக்க மூட்டும் காட்சிகளையும் கொண்டிருக்கின்றன. இதுவரை பார்த்தறியாத விலங்குகள், மனிதர்கள், மறைந்து புலப்பட்டு ஒளிந்து கொள்கின்றனர். புத்தகம் ஒரே நேரத்தில் ஒருவர் மட்டுமே ஒற்றை வழியாகவிருக்கிறது. வரிகளின் பிரவேசிக்கும் சாலையில் நடக்க நடக்க எண்ணிக்கையற்ற ஓவியங்களை, நகரங்களை, காட்சிகளை, துயரத்தை, கொண்டாட்டத்தை, வியப்பை, கோரத்தை வேட்டையைக் காண முடிகிறது. புத்தகம் கண்களால் வாசிக்கப்பட்டாலும், செவியால் நுகரப்படுவதும், நாவால் ருசிக்கப்படுவதும், உணர்ச்சிகளால் தொட்டு உணரப்படுவதுமாக ஒரு மாய விளையாட்டையே நிகழ்த்துகின்றன.

'பிரபஞ்சம் ஒரு மாபெரும் புத்தகம்' என்கிறார் போர்ஹே. இந்த வாசகம் நம்மைப் பிரபஞ்சத்தோடு மிகுந்த இணக்கம் கொள்ளச் செய்துவிடுகிறது. பலராலும் தொடர்ந்து எழுதப்பட்டுக் கொண்டும் உருமாறிக் கொண்டுமிருக்கிறது. கடவுளின் புத்தகம் பற்றி [illegible] கிழக்கு தேய நாடுகளில் நம்பிக்கை உள்ளது.

வாழ்வின் பரிட்சயத்தில் எதை எதையெல்லாம் அடைந்தேனோ அதற்குச் சமமாகவும், மேலாகவும் புத்தகங்கள் எனக்கு சாத்தியங்களை, நிகழ்வுகளை அறிமுகம் செய்திருக்கின்றன. இன்னமும் வாழ்வில் ஒருதடவை கூட நடந்து பரிட்சயப்படாத பனி உறைந்த மலையையும் அதன் வெண்ணிறப் பனிப்பாதையில் நடந்து செல்லும்போது வெளிப்படும் சாமான குளிர் மூச்சையும் கதைகள் வழியே மட்டும்தான் உணர்ந்திருக்கின்றேன். இதுவே போதுமானதாகக் கூடப்படுகிறது. கதைப் புத்தகங்கள் மட்டுமல்ல கணித, பௌதீக, உளவியல், தத்துவ, சரித்திர, மாயயோக புத்தகங்களும் என்னை தங்களின் பாதையில் நடந்து திரிய அழைத்திருக்கின்றன. சில மெய்யியல் புத்தகங்களின் வழியே விஞ்ஞானம் பற்றிய அறிதலையும், விஞ்ஞான புத்தகங்களில் மெய் தேடலையும், கணித நூல்களில் கதைகளின் சாத்தியங்களையும், கதைகளில் காலம் வெளி பற்றிய புதிர்களையும் மாற்றி, கலைத்துக் கலைத்து வாசிப்பவனாக இருந்திருக்கிறேன். சில சமயங்களில் தோல்வியுமுண்டு. எனக்குப் பிடித்தமான புத்தகங்களின் எழுத்தாளர்கள் எனது நெருங்கியவர்களாகவே குடியிருக்கிறார்கள். அவர்கள் நான் தனிமையுறும்போது எனது அறைக் கதவைத் தட்டி சந்தோஷமாகப் பேசி விவாதித்துக் கலைகிறார்கள். வேறுவேறு காலத்தில் பிறந்த பல எழுத்தாளர்கள் கூட ஒரே அறையின் வழி காலம் மீறி பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் அறிமுகமாகிக் கொள்கிறார்கள்.

எனது படிப்பறை மேஜையில் எப்போதும் புத்தகங்கள் நிரம்பிக் கிடக்கின்றன ஒரு வாசகனாக இருப்பது தான் எத்தனை பெரிய காரியம். ஒரு வாசகனுக்காகத் தானே இத்தனை எழுத்தாளர்களும், வாசகனின் மேஜையிலோ, புத்தக அலமாரியிலோ கட்டிலிலோ எப்போதும் புத்தகங்கள் மிக மௌனமாக தங்களைப் பற்றி ஒரு முணுமுணுப்புகூட இன்றி காத்திருக்கின்றன. சில புத்தகங்களின் காத்திருப்பு நூறு வருஷங்களுக்கு மேலாகக் கூட ஆகிவிடுகிறது. எவ்விதமான நிபந்தனையும் இன்றி புத்தகங்கள் எப்போதும் தயாராக இருக்கின்றன தமது வாசகனுக்காக.

---

### ஏழைகளின் வாழ்க்கையை மாற்றினார்....

"சுற்றுச் சூழலைக் காக்க விரும்பினால் முதலில் மக்களைக் காக்க வேண்டும். ஏனெனில் உயிர்ப் பன்மயத்தில் மனிதர்களும் ஒரு பகுதி நமது சொந்த இனத்தைக் காப்பாற்ற முடியாவிடில், மரங்களை எப்படிக் காப்பாற்றப் போகிறோம்? ஏழை மக்கள் சுற்றுச்சூழலை ஒழிப்பது போல் சில நேரங்களில் தோன்றுகிறது. உயிர் வாழ்க்கை என்பதே அவர்களுக்கு எல்லாவற்றையும் விட முக்கியம். எனவே மிகவும் அடிப்படைத் தேவைகளை பெறும் ஆர்வத்தில் சூழலுக்கு நீண்ட கால அடிப்படையில் தாங்கள் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. சுற்றுச் சூழலை நம்பியிருக்கும் ஏழை எளியவர்களே அதன் அழிவுக்கும் காரணமாக இருப்பது வேடிக்கைதான். எனவே தான் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க நாம் உண்மையில் விரும்பினால் ஏழைகளின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்."

புகழ்பெற்ற சுற்றுச்சூழல் ஆதரவாளரும்

மக்களாட்சி ஆதரவும் போராளியுமான வங்காரி மூட்டா மாத்தாய் (கென்யா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக் கொள்கைத் தீர்மானங்களில் வாசக வட்டங்கள் வகிக்கக் கூடிய பங்கு

2006ம் ஆண்டு அறிமுகம் செய்யப் பட்ட புதிய கல்விக்கொள்கை பரீட்சை களை மையப்படுத்திய பாடத்திட் டத்தினை மாற்றி, மனிதருக்கு இருக்க வேண்டிய அடிப்படைப் பண்பு களுடன் சமூகத்தில் ஏற்புடையவராக வாழுவதற்கு பிள்ளைகளை உரு வாக்குவதை நோக்கமாகக் கொண் டது. ஆரம்பம் முதல், இது வறிய கிராமங்களில் பயிலும் மாணவர்களுக்கு உகந்தவொன்றல்ல மற்றும், ஆசிரியர் களுக்கு வீண் வேலைப்பளுவினை அதிகரிக்கின்றது என்றும் பலவாறாக விமர்சனங்களை வழங்கிக் கொண்டி ருந்தோமே தவிர இக்கொள்கையின் நன்மைகளைப் பெறுவதற்கு என்ன முறையில் வெவ்வேறு பின்புலங்களில் இதனை நடைமுறைப்படுத்தலாம் என்கின்ற ஆக்கபூர்வமான ஆராய்ச்சி யில் இறங்கவில்லை.

சாந்தி சச்சிதானந்தம்

## கொள்கைத் திட்டங்களும் சமூக முரண்பாடுகளும்

சமீபத்தில் கொழும்பிலுள்ள பிரபல பாடசாலைகளின் அதிபர்கள் பாடசாலை அனுமதிகளில் ஊழல் குற்றச்சாட்டின் அடிப்படையில் தமது பதவியிலிருந்து உடனடியாக விலக்கப்பட்டனர். இந்நடவடிக்கையின் விளைவாக, அவர்களின் பாடசாலைகளில் பெற்றோரும் மாணவர்களும் எதிர்ப்புப் போராட்டங்களிலும் வகுப்புப் பகிஷ்கரிப்பிலும் ஈடுபட்டார்கள். பாடசாலை நேரங்களில் ஏராளமான பொலிஸ் படையினரைக் கொண்டு பாதுகாப்பு பலப்படுத்தப்படும் அளவுக்கு இவர்கள் காத்திரமாகத் தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்தார்கள். திடீரென்று பாரதூரமான இந்த முடிவுகள் எவ்வாறு எடுக்கப்பட்டன, ஏன் இவ்வளவு முரண்பாடுகள் வெடிக்கும் அளவுக்கு கொண்டு செல்லப்பட்டன என பொது மக்களாகிய நாங்கள் குழம்பிக் கொண்டு இருந்த வேளை இதைப் பற்றி உயரிடங்களிலிருந்து கசிந்த உத்தியோகபூர்வமற்ற செய்திகள் எம்மைத் தூக்கிவாரிப் போட்டன. ஜனாதிபதி செயலகத்தில் பணி புரியும் உயரதிகாரியொருவரின் பிள்ளைக்கு பாடசாலை அனுமதி மறுக்கப்பட்டதால் அவர் கோபமுற்று கல்வி அதிகாரிகளுக்குச் சென்று முறையிட்டு அவர்களெல்லோரும் சேர்ந்து பிரபல பாடசாலைகளின் அதிபர்களுக்கு 'பாடம் புகட்டும்' வேலையில் இறங்கியதன் விளைவே இந்த நடவடிக்கை என்ற செய்திதான் அது.

ஒரு பாடசாலையின் இரண்டு கிலோ மீற்றர் சுற்று வட்டத்திலிருந்து வரும் பிள்ளைகள்தான் அங்கு அனுமதி பெறலாம் என்ற சட்டத்தினையும் இயற்றி, சில 'தேசிய' பாடசாலைகளுக்கு மட்டுமே கற்றல் கற்பித்தல் வளங்களை அபரிமிதமாக வழங்கியும் கொண்டிருந்தால் இங்கு பெற்றோர் தமது பிள்ளைக்கு தாம் தெரிவு செய்யும் சிறந்த பாடசாலையில் கற்கவைக்கும் உரிமை மறுக்கப்படுகின்றது என்பதுதான் உண்மை. அதாவது, எல்லா நாட்டின் பிள்ளைகள் அவர்கள் எங்கிருந்தாலும், கல்வியைப் பூரணமாகக் கற்கும் சமவாய்ப்புக்களைப் பெறுவதற்கு இந்தக் கட்டமைப்பு உதவுகின்றதா என்பதே விவாதமாகும். இந்தப் பிரச்சனை, எவ்வாறு பாடசாலை அனுமதிகளில் ஊழலினை உருவாக்குகின்றது, பல சமயங்களில் முறையற்ற வகையில் அனுமதி பெறப்படுவதும் பிஞ்சுக் குழந்தைகளையே அவர்கள் இந்த இந்த இடத்தில்தான் வசிக்கின்றார்கள் என பொய் சொல்லும்படி பெற்றோர் தூண்டும் அருவருக்கத்தக்க வழக்கத்திற்கு இட்டுச் செல்லுகின்றது என்றுதான் அதிகாரிகள் எல்லோரும் தமது கவனத்தைச் செலுத்தியிருக்கவேண்டும். ஆனால், முக்கியமான இந்த விவாதத்தினை விட்டு விட்டு அவர்கள் வஞ்சம் தீர்க்க விளம்பினார்கள். நாமெல்லோரும் அதிபர்கள் விலக்கப்படலாமா இல்லையா என்கின்ற முரண்பாடுகளுக்குள் சிக்கினோம். கடைசியில் நடந்தது என்ன? அந்த ஐந்து அதிபர்கள் சட்டத்திற்கு மாறாக பதவி விலக்கப்பட்டிருக்கின்றார்கள் என நீதிமன்றம் தீர்ப்பினை வழங்கியதன் பயனாக திரும்ப தங்கள் பதவிகளுக்கு வந்தார்கள். வழமைபோல் எல்லாம் நடக்க ஆரம்பித்தது. முரண்பாடுகளைக் கையாளத் தெரியாமல் ஆர்ப்பாட்டங்களில் வெறுமனே இறங்குகின்ற ஒரு வளர்ந்தோர் உலகத்தினை முன்னுதாரணமாக எமது பிள்ளைகளுக்குக் காட்டியதுதான் மிச்சம்.

அதிகாரிகளின் பக்கம் நிகழும் தவறுகள் இவையென்றால் மக்கள் பக்கத்திலும் வேறு பிரச்சனைகள் எழுகின்றன. அரசாங்கம் எந்தக் கொள்கையைக் கொண்டு வந்தாலும் அதைப் பற்றிய பூரண விளக்கத்தைப் பெறாமலே சில மாயப் பதிவுகளை வைத்துக் கொண்டு [illegible] எதிர்ப்புத் தெரிவிப்பது அதிலொன்றாகும். 2006ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட புதிய கல்விக்கொள்கை இதற்கு சிறந்த உதாரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைகளை மையப்படுத்திய பாடத்திட்டத்தினை மாற்றி, மனிதருக்கு இருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளுடன் சமூகத்தில் ஏற்புடையவராக வாழக்கூடிய பிள்ளைகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது இந்தக் கொள்கை. ஆரம்பம் முதல், இது வறிய கிராமங்களில் பயிலும் மாணவர்களுக்கு உகந்ததல்ல என்றும், ஆசிரியர்களுக்கு வீணே வேலைப் பளுவினை அதிகரிக்கின்றது என்றும் பலவாறாக விமர்சனங்களை வழங்கிக் கொண்டிருந்தோமே தவிர இக்கொள்கையின் நன்மைகளைப் பெறக்கூடிய வகை முறையில் வெவ்வேறு பின்புலங்களில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான ஆராய்ச்சியில் இறங்கவில்லை. இதனால் பரீட்சைகளை மையப்படுத்திய நமது பாடத்திட்டங்கள் எந்த விதத்திலும் மாறவில்லை. இன்று முன்னரிலும் பார்க்க அதிகமாக பெற்றோர் தமது பிள்ளைகளை தனியார் கல்வி நிலையங்களுக்குச் சிறு வயதிலிருந்தே அனுப்பி வருகின்றனர். ஒரு முறை வெகுநாள் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஒரு ஆசிரியரை நான் நலம் விசாரித்தபோது, 'இப்போதெல்லாம் எங்கள் பாடசாலையில் கணிப்பீடுகள் செய்ய வேண்டிய தேவையைக் குறைத்திருக்கிறார்கள், ஆதலால் வேலை நன்றாகப் போகிறது' என்று கூறினார். இந்த மட்டத்திலேயே புதிய கல்விக் கொள்கைத் திட்டம் பார்க்கப்படுகின்றது, செயற்படுத்தப்படுகின்றது என்று இந்த உதாரணங்களிலிருந்து நாம் அனுமானித்துக் கொள்ளலாம்.

## கொள்கை வகுப்போரும் பொதுமக்களும் ஊடாடக்கூடிய பொதுத் தளங்களின் தேவை

மேற்கூறிய உதாரணங்களிலிருந்து கல்வித் துறையில் கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்படும் பொழுது நாம் கவனிக்க வேண்டிய பல விடயங்களை உணர்ந்து கொள்ள வேண்டும். முதலாவதாக, திட்ட அதிகாரிகளும் அவர்களுக்கு ஆலோசனை கொடுக்கும் நிபுணர்களும் தங்கள் சொந்த வாழ்க்கையின் அனுபவங்களின் அடிப்படையை மட்டும் வைத்துக்கொண்டு சட்டத்தினையோ கொள்கைத் திட்டத்தினையோ வரைய முடியாது. பல்வேறு சமூக, பொருளாதாரப் பின்னணிகளில் இருப்பவர்களின் அனுபவங்களும் இதற்கு எடை சேர்க்கவேண்டும். அடுத்து, திட்டத்தினை நடைமுறைப்படுத்தப் போகின்றவர்கள் அதைப் பற்றிய பூரண விளக்கம் பெற்றிருக்க வேண்டும். மூன்றாவதாக இத்திட்டங்களினால் பயனடையப் போகின்ற பொது மக்கள் மத்தியில் அதன் சாதக பாதக விடயங்களைப் பற்றிய தெளிவு இருக்க வேண்டும். இது மூன்றும் அமையப் பெற்றாலேயே பொருத்தமான திட்டங்களை வரைந்து பூரணமாக நாம் செயற்படுத்தலாம். இவ்வாறு செய்வதற்கு நிபுணர்களும் அதிகாரிகளும் கல்விச் செயற்பாட்டில் சகல பங்குதாரர்களினதும் (stakeholders) அபிப்பிராயங்களைப் பெறுவதும், நாம் எடுக்கும் தீர்மானங்களின் விளக்கங்களை அவர்களுக்கு அறிவிப்பதும் அவர்கள் பெறுவதும் கிரமமாக நடைபெறவேண்டிய நடவடிக்கைகளாகும்.

ஒரு நாடு முழுவதும் செயற்படுத்தப்படும் திட்டத்தினைப் பற்றி அதன் பங்குதாரர்களிடம் அபிப்பிராயம் பெறுவது சிக்கலான காரியமாகும். கொள்கை வகுப்போர், திட்டச்செயற்பாட்டு அதிகாரிகள், அத்திட்டத்தில் பங்குபெற்றும் பயன் பெறும் பொது மக்கள், இந்த மூன்று தரப்பினரும் ஒன்றாகச் சந்திக்கக்கூடிய தளங்கள் எங்கள் சமூகத்தில் அரிதாகவே காணப்படுகின்றன. இதனால்தானே மேல்மட்ட வர்க்கத்தினரின் நலன்களைப் பிரதிபலிப்பதாகவே எமது கொள்கைத் திட்டங்கள் இருக்கின்றனவென்று நாம் அடிக்கடி புலம்பிக் கொண்டிருக்கின்றோம்? எனவே மேற்கூறிய சகல தரப்பினரும் பங்குபெற்று ஒருவருக்கொருவர் அபிப்பிராயங்களைப் பகிர்ந்து கொள்ளும் தளங்களை உருவாக்குவது ஒரு சவால் என்பது தெளிவாகின்றது. ஆனால் அது மட்டுமல்ல பிரச்சனை. எடுக்கப்படும் ஒரு விடயத்தினைப் பற்றிய தேர்ந்த அபிப்பிராயங்களை சொல்லக் கூடிய வகையில் இத்தளங்களில் பங்குபற்றும் அனைவரும் அவ்விடயத்தினைப் பற்றிய தகவல்களையும் விளக்கத்தினையும் கொண்டிருக்க வேண்டும் என்பதும் இன்று தேவையாகின்றது. ஒரு பரந்த அளவில் இவற்றைச் செய்து முடிக்க முடியுமா என்று மலைக்கத்தான் வேண்டும். இந்த சவால்களுக்கெல்லாம் தீர்வாக விருத்தியடைந்த நாடுகளில் விவாத உரையாடல்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஒரு நாடு முழுவதும் செயற்படுத்தப்படும் திட்டத்தினைப் பற்றி அதன் பங்குதாரர்களிடம் அபிப்பிராயம் பெறுவது சிக்கலான காரியமாகும். கொள்கை வகுப்போர், திட்டச்செயற்பாட்டு அதிகாரிகள், அத்திட்டத்தில் பங்குபெற்றும் பயன்பெறும் பொது மக்கள், இந்த மூன்று தரப்பினரும் ஒன்றாகச் சந்திக்கக்கூடிய தளங்கள் எமது சமூகத்தில் அரிதாகவே காணப்படுகின்றன. இதனால்தானே மேல்மட்ட வர்க்கத்தினரின் நலன்களைப் பிரதிபலிப்பதாகவே எமது கொள்கைத் திட்டங்கள் இருக்கின்றனவென்று நாம் அடிக்கடி புலம்பிக் கொண்டிருக்கின்றோம்?

## விவாத உரையாடல் (Deliberative Dialogue)

உரையாடல் என்பது மற்றவர்களுடைய அபிப்பிராயங்களை உள்வாங்கத் தயாராக இருப்பவர்கள் மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வினை இலக்கு வைத்து நடைபெறும் தொடர்பாடலாகும். மனிதர்களுக்கிடையில் நேர்மையான உறவுகளை உருவாக்கவும் ஆழப்படுத்தவும் உதவும் ஒரே சாதனம் உரையாடலாகும். அதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவாதம் புரிவது என்பது தீர்மானம் எடுப்பதற்கு அப்பால் ஒரு விடயத்தின் சாதகபாதகங்களை சீர்தூக்கிப் பார்த்து அதை ஆராய்வதாகும். இதனை ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூட்டாக இணைந்து செய்யும்போது அவரவர்களின் நலன்கள், அவர்கள் சிந்திக்கும் போக்குகள், குறித்த விடயம் தொடர்பாக அவரவர்களின் அபிலாசைகள் போன்றவையெல்லாம் அங்கு பங்குபற்றும் சகலருக்கும் தெரியும் வாய்ப்பு கிட்டுகின்றது. எடுக்கப்படும் தீர்மானங்களும் அநேகமானவர்களுக்கும் பயனளிக்கும் முடிவுகளாக இருக்கும் சாத்தியக் கூறுகளும் அதிகரிக்கின்றன.

> உரையாடலில் ஈடுபடும் இருதரப் [illegible] மத்தியில் [illegible] புரிந்துணர்வினை [illegible] நடைபெறும் இதுபோன்ற உரையாடல்கள் மனிதர்களுக்கிடையில் நேர்மையான உறவுகளை உருவாக்கவும் ஆழப்படுத்தவும் உதவும். இவ்வகை உரையாடலாகும். அதில் விவாதம் புரிவது என்பது தீர்மானம் எடுப்பதற்கு அப்பால் ஒரு விடயத்தின் சாதக பாதகங்களை சீர்தூக்கிப் பார்த்து அதை ஆராய்வதாகும்.

- விவாத உரையாடல்கள் என்பது சம்பந்தப்பட்டவர்களை உள்ளீர்த்து செய்யப்படும் ஜனநாயக பூர்வமான பொது நடவடிக்கையாகும். இங்கு அதில் பங்குபற்றும் சகலரும் பலதரப்பான அபிப்பிராயங்களையும் சாதக பாதகத் தன்மைகளையும் பன்முகத் தெரிவுகளையும் அவற்றின் விளைவுகளையும் சீர்தூக்கிப் பார்க்க வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு சமூக சூழலில் சமூக, அரசியல் நிகழ்ச்சி நிரலை (அஜெண்டா) திசைகாட்டும் பாத்திரம் இவர்களுக்கு வழங்கப்படுவதினால் இங்கு ஒவ்வொரு தனிமனிதரினதும் சமூக செயற்பாடு வலியுறுத்தப்படுகின்றது.
- விவாத உரையாடல்களின் பெறுபேறுகள் எந்த நேரமும் அபிப்பிராய ஒற்றுமையாகத்தான் இருக்க வேண்டும் என்பதல்ல. ஆனால் அவை நிச்சயமாக பல்வகைப்பட்ட பின்புலங்களைப் பற்றிய ஆழ்ந்த விளக்கத்தின் அடிப்படையிலேயே நிகழுகின்றன என்பதை உறுதியாகக் கூறலாம்.
- கல்வித் துறையில் தொடர்புடையோர் பலரின் நலன்களுக்குப் பொருத்தமான தீர்மானங்கள் எடுக்கவேண்டிய இக்கட்டான சந்தர்ப்பங்களிலெல்லாம் விவாத உரையாடல்கள் கைகொடுக்கின்றன. சில கருத்துக்களை பொது மக்கள் மத்தியில் வைத்துப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும், அவர்கள் அக்கறைப்படும் விடயங்கள் என்னென்ன என்பதை விளங்குவதற்கும், பொதுக் கல்வியின் நோக்கங்கள் எவை என வரையறுப்பதற்கும், எடுக்கப்பட்ட தீர்மானங்களை சிறப்பாக செயற்படுத்தும் ஆற்றலும் தலைமைத்துவமும் உள்ள செயற்பாட்டாளர்களை உருவாக்குவதற்கும் விவாத உரையாடல்கள் உதவுகின்றன.

பொது விடயங்களில் விவாத உரையாடல்கள் மேற்கொள்வது எமக்குப் புதியதொன்றல்ல. எமது பாரம்பரிய கிராம பஞ்சாயத்து நடைமுறைகள் பல விவாத உரையாடல்களைத் தூண்டும் நடைமுறைகளாகவே இருப்பதை நாம் காணலாம். பண்டைய கிரேக்கத்திலும் அமெரிக்கப் பழங்குடி இனத்தினர் மத்தியிலும் பிரஜைகள் கூட்டம், குடிகள் சபைகள் எனப் பல உருவங்களில் இது நடைமுறையில் இருந்து வந்துள்ளது. சமீப காலத்திலும் 1980களில் ஜனநாயகத்தை ஆதரித்து போலந்து நாட்டில் தோன்றிய தொழிலாளர் இயக்கம் கூட (Solidarity Movement) விவாத உரையாடல் அரங்குகளிலேயே உருவம் பெற்றது. இன்று, ஸ்கந்திநேவியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் கொள்கைத் திட்டங்கள் மற்றும் சட்டங்கள் வரைவதற்கான ஒரு பொருத்தமான கருவியாக விவாத உரையாடல் பயன்படுத்தப்படுகின்றது. இந்நாடுகளிலெல்லாம் விவாத உரையாடல்களை மேற்கொள்வதற்கு உகந்த அரங்காக வாசக வட்டங்கள் பயன்படுகின்றன.

## வாசக வட்டங்கள் என்றால் என்ன?

- இவை ஐந்து தொடக்கம் பன்னிரண்டு வரையிலான அங்கத்தவர்களைக் கொண்ட சிறிய குழுக்களாகும்.
- பலதரப்பட்ட விடயங்களையும் வாசித்துத் தம்முள் கலந்துரையாடி அவற்றைப் பற்றிய ஆழமான அறிவு பெறும் நோக்கத்துடன் இவை கிரமமாகக் கூடுகின்றன.
- பரஸ்பர மரியாதையுடன் ஒவ்வொருவரும் பயன் பெறத்தக்க முறையில் உரையாடுவதற்கான விதிகளை தமக்கு இவை வகுத்துக் கொள்ளும்.
- இந்த விதிகளை அனுசரிப்பதற்கு உதவியாக கலந்துரையாடல்களை நெறிப்படுத்தும் இணைப்படுத்துனரைத் தம்முள் தேர்ந்தெடுக்கும்.
- அனைவரினதும் கருத்துக்களின் பின்னணிகளையும் விளக்கங்களையும் பெற உதவுமேயொழிய இதன் பெறுபேறுகளுக்கு எவ்வொரு ஒத்திசைவுத் தேவையில்லை.

விவாத உரையாடல்கள் நிகழ்த்துவதற்கான சாதகமான சகல அம்சங்களையும் வாசக வட்டங்கள் கொண்டிருப்பதனால் முக்கியமான பொதுப் பிரச்சனைகளை விவாதிக்கும் தளங்களாக இவை காலக்கிரமத்தில் உபயோகிக்கப்படத் தொடங்கின. உதாரணமாக ஸ்வீடன் நாட்டில் முக்கியமான கொள்கைத் திட்டங்களை அரசு வகுக்க வேண்டுமெனில் உடனடியாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது தனது பிரதான நிர்வாக அலகுகளுக்கூடாக வாசகர் வட்டங்களைத் தூண்டிவிடும். இவை அப்பிரச்சனை பற்றி விவாதிப்பதற்காக ஒரு குறித்த காலப் பகுதியை ஒதுக்கி அப்பகுதிக்குள் கிரமமாக சந்தித்துக் கொள்ளும். அவை விவாதித்து உரையாடுவதற்கான வழிகாட்டல்களை பல அரச சாரா நிறுவனங்களும் வெளியிடும். இந்த வழிகாட்டல்கள் குறித்த பிரச்சனையை அறிமுகம் செய்து, அது பற்றி நிலவக்கூடிய சகல கண்ணோட்டங்களையும் அபிப்பிராயங்களையும் நிரற்படுத்தி, ஒவ்வொரு அபிப்பிராயத்தினதும் சாதக பாதகங்கள் எவையென்னும் விஞ்ஞான விளக்கத்தினையும் முன்வைக்கும்.

ஒரு குறித்த விடயம் பற்றிய கலந்துரையாடல்கள் சராசரியாக 4 மணித்தியாலங்கள் நிகழலாம். ஒவ்வொரு குழுவும் வாரம் இரண்டு மணிநேரம் வீதம் இரண்டு மாதங்களுக்குக் கூடுகின்றன. கூடுவதற்கு முன்னர் அதன் அங்கத்தவர்கள் எல்லோரும் தமக்குரிய வழிகாட்டல்களைப் படித்து விவாதத்திற்கும் அபிப்பிராயப் பகிர்வுக்கும் தயாராக வருவர். குறித்த காலப் பகுதியில் சகல தரப்பு விடயங்களும் உரையாடப்பட்ட பின்னர் அதன் பயனாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அல்லது கருத்துக்கள் இலகுபடுத்துனரால் தொகுக்கப்பட்டு அரச நிர்வாகத்திற்கு வழங்கப்படும். இவ்வாறு நாடெங்கிலும் நூற்றுக்கணக்கான குழுக்கள் ஒரு விடயம் குறித்து தமக்குள் சந்தித்து தமது முடிவுகளைத் தொகுத்து வழங்கலாம். ஈற்றில், இத்தொகுப்புக்கள் எல்லாம் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டமிடலில் ஈடுபடுவோர் பார்வைக்கு விடப்படுகின்றது. இவ்வபிப்பிராயங்களின் அடிப்படையிலேயே அவர்கள் தங்கள் கொள்கைகளை வரைகின்றனர்.

கொள்கைச் செயலாக்கத்தில் ஏற்படக்கூடிய பல முரண்பாடுகளை வாசிப்பு வட்டங்களை ஏற்படுத்தும் இம்முறை தவிர்க்கின்றது. ஒரு நாட்டின் பிரஜைகள் தமக்குள் ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகளை வீதி மறியல் போராட்டங்கள் போன்றவற்றில் இறங்காமலே நாகரிகமாகத் தீர்த்துக் கொள்ளப் பழகுகின்றனர்.

ஸ்வீடனின் அளவுக்கு பங்கேற்கும் ஜனநாயக முறை இல்லாவிட்டாலும் அமெரிக்காவிலும் இப்பொழுது அதிகளவில் வாசிப்பு வட்டங்கள் சமூகமட்டத்தில் பிரச்சனை தீர்க்கும் கருவியாகப் பயன்படுத்தப்படத் தொடங்கியிருக்கின்றது. கடைசி பத்து வருடங்களாக அமெரிக்காவின் இருநூறுக்கு மேற்பட்ட சமூகக் குழுக்கள் தமக்கு மத்தியில் தோன்றும் உள்ளூர் பிரச்சனைகளை வாசிப்பு வட்டங்களின் மூலம் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன. அவற்றில் எண்பத்தி ஐந்துக்கும் மேற்பட்ட குழுவினர் வெற்றிகரமாகச் செயற்பட்டிருக்கின்றனர் எனவும் புள்ளிவிபர அறிக்கைகள் கூறுகின்றன. இந்தப் பின்னணியிலேயே, கல்விக் கொள்கைத் திட்டமிடலில் கொள்கை வரைபவர்களுக்கிடையிலும் பொது மக்கள் மத்தியிலும் ஒரு உரையாடற் பாலத்தினை ஏற்படுத்தும் நோக்கில் அங்கு வாசிப்பு வட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மனிதர்கள் தாங்கள் கற்பதற்கும், சிறு குழுக்களாக பொது நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், நிறுவனங்கள் இயங்கும் விதங்களில் மாற்றங்களை உண்டாக்குவதற்கும், சமூக மட்டத்தில் புதிய திட்டங்களுக்கும், கொள்கைத் திட்டங்களைத் தீர்மானிப்பதற்கும் இவை உதவியிருக்கின்றன.

தொடர் விடயங்களில் விவாத உரையாடல்கள் மேற்கொள்வது எமக்குப் புதியதொன்றல்ல. எமது பாரம்பரிய கிராம பஞ்சாயத்து நடைமுறைகள் பல விவாத உரையாடல்களைத் [illegible] நடைமுறைகளாகவே இருந்தன. நாம் [illegible] பழமையாகிவிட்டதென்று [illegible] பழக்கத்தை இன்று [illegible] நிறுவனங்கள் [illegible] சபைகள் என பல உருவங்களில் இதனை முறையில் [illegible]

## கல்விக் கொள்கைத் திட்டத்திற்கான வாசக வட்டங்கள்

இந்தப் பின்னணியிலேதான் அமெரிக்காவில் கல்விக் கொள்கைத் திட்டங்களை வகுப்பதற்கு உதவியாக கொள்கை வரைபவர்களும், பாடசாலை சமூகத்தினரும், பொது மக்களும் பங்குகொள்ளக்கூடிய வாசகர் வட்டங்களை ஆர்கென்லோ, ஒக்லஹோமா ஆகிய இரண்டு மாநிலங்களில் பரிட்சார்த்த ரீதியில் செயற்படுத்தத் துணிந்தனர். அமெரிக்காவில் கல்விக் கொள்கைகள் அதன் மாநில அரசுகளின் தனிப் பொறுப்பு என்பதனால் மாநில அரசின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை சமூகத்தினர் மற்றும் கல்வி விடயத்தில் அக்கறை கொண்ட ஆர்வலர்கள் போன்றோரை இணைத்து மாநிலமெங்கும் வாசகர் வட்டங்கள் அமைக்கப்பட்டன. இவை முன்பு விவரித்ததுபோல வாரம் ஒரு முறை இரு மணித்தியாலங்களுக்குக் கூடி விவாதித்து ஒரு மாதத்தின் பின்னர் தங்கள் அறிக்கைகளை சமர்ப்பித்தன.

இத்திட்டம் முடிவடைந்த பின்னர், அது மதிப்பீடு செய்யப்பட்டது. இம்மதிப்பீடு அடிப்படையில் பின்வரும் கேள்விகளைக் கேட்டுக் கொண்டது.

1) பொது மக்களின் அபிப்பிராயங்களைப் பெறவேண்டுமென்று நாம் கூறும்போது பொது மக்கள் என வரையறுப்பது யாரை?

2) கொள்கைத் திட்டம் வரைபவர்கள் (legislators) இயங்கும் அரசியல் தளத்தில் பொது மக்கள் என நாம் அழைக்கக்கூடியவர்கள் எவ்வாறு தொடர்பாடல் செய்யக் கூடியவர்கள்?

3) கொள்கை வரைபவர்களுக்கும் பொது மக்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையே நிலவும் இடைவெளியினை எவ்வாறு விளங்கிக் கொள்கின்றனர், அதை எவ்வாறு நிரப்ப எத்தனிக்கின்றனர்? இந்த இடைவெளியை நிரப்புவதற்கு வாசிப்பு வட்டங்கள் உதவுகின்றனவா இல்லையா?

f) கல்விக் கொள்கைச் செயலாக்கத்தில் பொது மக்களின் பங்கு என்ன என்பதை இந்த மதிப்பீட்டின் பெறுபேறுகள் தீர்மானிக்குமா?

இதற்காக வாசிப்பு வட்டங்களில் பங்குகொண்ட அரசியல்வாதிகள், அரசு கொள்கைத் திட்டமிடலின் அடிப்படைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டப்பட்டனர். அதாவது, தகவல் பெறுதல், விளக்கம் கொள்ளல், பிரதிநிதித்துவம், பொது மக்களின் பங்களிப்பு போன்றவை பற்றி அவர்களின் சிந்தனையலைகள் பெறப்பட்டன.

விசேட ஊடகங்களில் நிகழ்ந்து வருகின்ற விவாதங்களைச் சமூகம் அறிந்து கொள்ளும் வாசக வட்டங்களின் தோற்றுவாய்ப்புகளால் முக்கியமான பொதுப் பிரச்சனைகளை விவாதிக்கும் தளங்களாக இவை காலகிரமத்தில் உருவாக்கப்பட்டு தொடர்கின்றன. உதாரணமாக ஸ்வீடன் நாட்டில் முக்கியமான கொள்கைத் திட்டங்களை அரசியல்வாதிகள் கொண்டு வரும்போது உடனடியாகவே அது தனது பிரேரணையை வாசக வட்டங்களுக்கூடாக வாசகர் வட்டங்களுக்குக் கொடுத்துவிடும். இவை அப்பிரச்சனை பற்றி விவாதிப்பதற்காக ஒரு குறித்த காலப்பகுதியை ஒதுக்கி அப்பகுதியில் தீவிரமாக சிந்தித்துக் கொள்ளும்.

## வாசக வட்டங்களின் மதிப்பீட்டின் சாராம்சம்

கொள்கைத் திட்டம் வரைவோர் தாம் அதற்கான தகவல்களையும் உள்ளீடுகளையும் பெறுவதற்கு வழக்கமாக பின்வரும் வழிகளில் தங்கியிருக்கக் காணப்பட்டனர்:

- நிபுணர்களின் ஆலோசனைகளும் ஆய்வறிக்கைகளும்
- வெகுசன ஊடகங்கள்
- தமது வேலை சார்ந்த சூழலும் சொந்த அனுபவங்களும்
- பாடசாலைகள்
- ஆதரவாளர்கள், வாக்காளர்கள்

எடுக்கப்படும் விடயங்களைப் பற்றிய தகவல்கள் விளக்கங்கள் தெரிந்த பிரஜைகள் சமூகம் இல்லாத காரணத்தினாலும் மக்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணும் வாய்ப்புக்கள் இல்லாமல் போனதாலும் இவர்களுக்கு பொது மக்களின் அபிப்பிராயத்தினை அறிவது மிகவும் சிரமமாகக் காணப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் வாசக வட்டங்கள் அவ்வாறு பொது மக்களுடன் தொடர்பு கொள்ளுவதற்கு நல்ல வாய்ப்பினை வெகுவாக சிலாகித்தனர்.

மேலும், மக்களுடன் தோழமையான உறவுகளைத் தாபிக்கவும் இந்த வாசகர் வட்டங்கள் உதவின என்றும் அரசியல்வாதிகள் தெரிவித்திருந்தனர். சமூக வலையமைப்புக்களை உருவாக்கவும், அதே போன்று தங்கள் சமூகத்தின் கல்வி விருத்திக்காக தொழிற்படும் அர்ப்பணிப்பினை அதில் பங்குபற்றிய பல பிரஜைகள் தெரிவிப்பதற்கான உத்வேகம் உருவாகியதையும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

மீளாய்வில் அரசியல்வாதிகளுக்கும் மக்களுக்கும் இடையே உருவாக்கப்பட்ட உறவுகளைப் பற்றி விபரமாக அறியக் கூடியதாயிருந்தது. அரசியல்வாதிகளுக்கோ பொது மக்களுடன் தொடர்பாடுவதற்கான பாதுகாப்பான களம் தேவைப்பட்டது. பகிரங்கத் தளங்களில் இந்தப் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடையாது. தவிரவும், பொது மேடைகளில் பிரச்சார ரீதியிலேயே அவர்களுடைய தொடர்பாடல்கள் அமையக் கூடும். ஆனால் ஒரு சிறிய குழுவின் மத்தியில் மக்களுடன் மனம் விட்டு உரையாட அவர்கள் எல்லோருக்கும் முடிந்தது. வெகு அருகாமையில் அவர்களின் 'மனித' முகங்களைப் பார்த்த மக்களும் அவர்களுடன் ஒரு நட்புறவை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது என்று தெரிவித்தனர். இதன் பயனாக, மக்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆட்சியின் உண்மையான விளக்கங்களை நாம் பெற்றுக் கொண்டோம் என்று பல அரசியல்வாதிகள் சொல்லக் கேட்கக் கூடியதாக இருந்தது. மக்களின் அபிப்பிராயத்தைக் கோருதலும், அவர்களை கொள்கைத் திட்டச் செயலாக்கத்தில் பங்குதாரர்களாக ஆக்குதலும் அங்கு வெற்றிகரமாக நிகழ்ந்தன என்று அரசியல்வாதிகள் விளக்கினர்.

இவ்வாறு பல நன்மைகள் நேர்ந்திருப்பினும் பங்குபற்றிய அரசியல்வாதிகளுக்கு குறைகளும் இல்லாமல் இல்லை. நிபுணர்களிடம் தாம் அறியக்கூடிய அளவு விடயங்கள் அதில் பங்குபற்றிய பொது மக்களிடமிருந்து வரவில்லை என சிலர் குறைப்பட்டனர். சில தொகுதிகளில் மக்களின் பங்களிப்பு குறைவாக இருந்ததால் அத்தொகுதிகளின் பிரதிநிதித்துவம் ஒரு பக்கச் சார்பாக இருந்ததாகவும் அபிப்பிராயப்பட்டனர். சில கலந்துரையாடல்கள் ஒரு குவி மையம் இன்றி பத்தையும் பலதையும் அலசுவதாகவும் தன்மையில் பங்குபற்றியவர்களின் நேரத்தை விரயமாக்கியது என்றனர். இதனால் முக்கியமான கல்விப் பிரச்சனைகளை ஆழமாகக் கலந்துரையாட முடியாமல் போனதுக்கு வருந்தினர். ஒரு சில குழுக்களில் குட்டையைக் குழப்பும் பிரகிருதிகள் வந்து சேர்ந்து பயனுள்ள முறையில் கலந்துரையாடல்கள் செல்லாவண்ணம் தடுக்கலாகும் புரிந்தனர் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியப்பட்டது. முக்கியமாக, வாசகர் வட்டங்களில் இயங்கத் தேவையான நேரம் தயக்க ஒரு பெரும் பிரச்சனையாக இருந்ததைப் பல அரசியல்வாதிகள் தெரிவித்தனர். வாரம் இரண்டு மணித்தியாலங்கள் என ஒரு மாதத்தில் ஒதுக்குவது அவர்களுக்கு மிகக் கஷ்டமாக இருந்தது.

கொள்கையை வகுக்கின்றவர்களுக்கும் மக்களுக்கும் இடையே பணி புரிபவர்கள்தாம் அரச அதிகாரிகள். அவர்களுக்கும் வாசக வட்டங்கள் மக்களின் அபிப்பிராயத்தைப் பற்றிய புதிய பரிமாணங்களைக் காட்டியது. முக்கியமாக, அபிப்பிராயங்கள் எத்தனை நுண்ணிய முறைகளில் வேறுபடுகின்றன என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வாசக வட்டங்கள் உதவின. கொள்கை உருவாக்கம், அதன் செயலாக்கம் என்பனவற்றை அரசு, பாடசாலை, சமூகம் என்ற இந்த மூன்று தளங்களையும் இணைத்து செயற்படுத்தலாம் என்பதை இது காட்டியது.

## இலங்கையில் கல்விக் கொள்கைத் திட்டம் வரைதலில் வாசக வட்டங்களின் பயன்

இப்படி இப்படிச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே .... என்றெல்லாம் சொல்லுவது மிக இலகுவான காரியமாகும். உண்மையாக எப்படி இருந்திருக்கும் என்று தெரியாதாகினும் இப்படி இருந்திருக்கலாம் என்று நாம் கனவு காண்பதைத் தடுக்க முடியாது. அந்த வகையில் தான் தற்போது நடைமுறையிலிருக்கும் புதிய கல்விக் கொள்கைத் திட்டம் செயற்படுத்தப்படும் முன்னர் அதனை வாசகர் வட்டங்கள் மூலம் பொது மக்களினதும், கல்வி அதிகாரிகளினதும், பாடசாலை சமூகங்களினதும் பார்வைக்கு விட்டிருந்தால் அதைப் பற்றிய [illegible] ஆழப்படுத்தப்பட்டிருக்குமோ என்ற எண்ணத் தூண்டுகின்றது. இதன் பயனாக இந்தக் கல்விக் கொள்கையை எங்கள் நாட்டின் நகர்ப்புறத்தைச் சார்ந்த மாணவர்களுக்குப் பொருத்தமாகவும், கிராமப் புறத்தைச் சார்ந்த மாணவர்களுக்குப் பொருத்தமாகவும் அந்தந்தக் களங்களில் அவற்றுக்கேற்றிய வேறுபாடுகளுடன் செயற்படுத்தும் புத்தாக்கமான தீர்வுகளைக் கண்டு பிடித்திருப்போமோ? முதலிலேயே முழு விளக்கத்தினையும் பெற்றுக் கொண்ட காரணத்தினால் ஆசிரியர்கள் இக்கொள்கையை உள்ளார்ந்தமாக எதிர்க்காது அதனை இன்னும் பயனுறுதி மிக்க முறையில் செயற்படுத்தியிருப்பார்களோ? பெற்றோர்களும் இந்தக் கல்வி முறை உண்மையில் தங்கள் பிள்ளைகளை சமூகத்தின் சிறந்த பிரஜைகளாக முழுமை பெற உதவுகின்றது என்பதை உணர்ந்திருப்பார்களாயின் தனியார் கல்விக் கலாசாரத்தை ஒழிக்க உதவியிருப்பார்களோ? தெரியவில்லை. ஆனால் இவையெல்லாம் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் வாசக வட்டங்களில் இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

> கொள்கைச் செயலாக்கத்தில் ஏற்படக் கூடிய பல முரண்பாடுகளை வாசிப்பு வட்டங்களை எப்படி நாம் தீர் முறை தவிர்க்கின்றது. ஒரு நாட்டின் பிரஜைகள் தங்களுள் ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகளை வீதி வழியில் போராட்டங்கள் போன்றவற்றில் இறங்காமலே தீர்த்துக் கொள்ளப் படுகின்றனர்.
>
> சுவீடனில் அனைத்து மக்களுக்கும் ஜனநாயக முறை [illegible] அமெரிக்காவிலும் இப்பொழுது அதிகளவில் வாசிப்பு வட்டங்கள் சமூக மட்டத்தில் பிரச்சனை தீர்க்கும் கருவியாகப் பயன்படுத்தப்பட்டுத் தொடர்கின்றது.

இன்று ஆங்கில மூலக் கல்வி பரப்பப்படுகின்றது. எங்கள் மக்களும் பழைய காலனித்துவ மோகத்தினால் ஆட்கொள்ளப்பட்டு எல்லாரும் ஆங்கிலத்தில் படித்தால்தான் மதிப்புக் கூட என்று கருதி தங்கள் பிள்ளைகளை ஆங்கில மூல வகுப்புகளில் சேர்க்கின்றனர். இதைவிட மூலைக்கு மூலை சர்வதேச பாடசாலைகள் முளைத்த வண்ணமே இருக்கின்றன. ஒரு இனத்தினதும் நாட்டு மக்களினதும் தனி அடையாளத்தையும், அவர்கள் பண்பாட்டுக் கோலங்களையும் தீர்மானிக்கின்ற இத்தகைய முக்கியமான விடயம் ஒருவித விவாதமுமின்றி பாடசாலைகளில் செயற்படுத்தப்பட்டது மிகவும் வருத்தத்திற்குரியது. இது பற்றியும் நாடளாவிய ரீதியில் பல மட்டங்களிலுமுள்ளவர்களாலும் வாசக வட்டங்களில் விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும். இதன் மூலம் ஆங்கில மூலக் கல்விக் கொள்கை மாறுகின்றதோ இல்லையோ தங்கள் வாழ்க்கையில் தாய்மொழி வகிக்கின்ற பங்கின் முக்கியத்துவத்தை மக்கள் உணரக்கூடியதாக இருந்திருக்கும்.

பாடசாலை அனுமதிப் பிரச்சனை வாசகர் வட்டங்களில் விவாதிப்பதற்கான இன்னுமொரு பொருத்தமான விடயமாகும். தமது பிள்ளைகளை நாம் சிறந்தது என்று கருதும் பாடசாலைகளில் படிக்கவிடுவதற்கு பெற்றோருக்கு உரிமை இருக்கின்றதா இல்லையா? அவ்வாறாயின் பாடசாலைகளுக்கிடையிலுள்ள வளப் பகிர்வினையும் பயன்பாட்டினையும் நாம் ஈடு செய்து சமப்படுத்த வேண்டுமா இல்லையா? என்று போன்ற கேள்விகளை அதிகாரிகளுக்கும் பொது மக்களுக்கும் விடவேண்டியது அவசியமாகும்.

அதே போல்தான் தனியார் கல்வி நிலையங்களைப் பற்றிய விவாதமுமாகும். தனியார் கல்வி நிலையங்கள் பல்கிப் பெருகுவதைப் பற்றி அரசாங்கத்தின் நிலைப்பாடு தான் என்ன? இவற்றால் விளையும் நன்மை தீமைகள் என்ன? பெற்றோரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறு ஒழுங்கான பண்பாட்டிலிருந்து அன்னியப்படுத்தலாம். இந்த மொழிமுறையைப் பற்றி பல ஆசிரியர்களுக்கும் நலன்கள் பின்னப்பட்டிருக்கின்றனவே. அதற்கு என்ன செய்யலாம்? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் வாசக வட்டங்கள் பதில் சொல்லக் கூடும். சில சமயங்களில் தனியார் கல்வி நிலையங்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் அரசு இறங்கவும் இவை உதவலாம்.

எங்கள் அரசாங்கம் அவ்வப்போது தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவும் யோசனையை முன்வைப்பதை நாம் காணலாம். இந்த யோசனை முன்வைக்கப்படும் விரைவிலேயே தலைநகரில் ஆர்ப்பாட்டங்களும் பெருகிவிடும். இதற்கு அரசியல் பின்னணிகளும் கைகொடுக்கும். தனியார் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படுவதைப் பற்றி ஆக்ரோஷமாகக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கும் நபர்களிடம் சென்று நீங்கள் ஏன் இந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றீர்கள் என்று கேட்டால் அவர் அனேகமாக இது அமெரிக்கர்களின் சதித்திட்டம் என்றே பதில் கூறுவார். இதற்கு மேல் அவரால் ஒன்றும் விளக்க முடியாது. முடிவில், அதைக்கூடத் தெரியாது இவ்வாறு அரைவேக்காட்டு விளக்கமுடன் இருப்பவர்கள்தான் எங்கள் கொள்கைத் திட்டத்திலைப் பற்றிய தீர்மானத்திற்கான அழுத்தத்தைக் கொடுக்கின்றனர். அரசும் பயந்து தனது யோசனையைப் பின்வாங்கிக் கொள்கின்றது. உயர் கல்வி வழங்குகின்ற நிலைமைகள் எங்கள் நாட்டில் மிகக் குறுகிய நிலையில் பல்கலைக்கழகங்கள் தனியார் மயமாக உருவானதன் விளைவு என்ன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கத்தான் வேண்டும். இதற்கு வாசக வட்டங்கள் உதவும்.

> கொள்கை வகுப்பவர்களுக்கும் மக்களுக்கும் இடையே பரஸ்பர புரிதலைக் கொண்டு வர அரசு அதிகாரிகள் அவர்களுக்கும் வாசக வட்டங்கள் மக்களின் அபிப்பிராயத்தைப் பற்றிய புரிந்துணர்வினைக் கொடுக்கும். ஆக்கபூர்வமாக அபிப்பிராயங்களைத் தெரிவிக்க நுண்ணிய முறையில் இயலுமாக்கின்றன. இவ்வாறு உண்மையில் கொழும்பின் வாசக வட்டங்கள் ஒரு தனிமனிதனின் முன்னேற்றத்திற்கும், அதன் பிரதேசத்தின் வளர்ச்சிக்கும், மற்றைய அரச படிமுறைகளுக்கும் என்ற இந்த மூன்று நோக்கங்களையும் இணைத்துச் செயற்படுத்துவதை இது காட்டுகிறது.

பாடசாலைகளில் கற்பிக்கப்படும் சமய நெறிகள் வாசக வட்டங்களில் விவாதிப்பதற்கான இன்னோர் விடயமாகும். எமது மாணவர்கள் ஆண்டு ஒன்றிலிருந்து தத்தமது சமய நெறிகளைப் பற்றிய விளக்கத்தினைப் பெறுகின்றார்கள். ஆனால் இந்த விளக்கம் பெரும்பாலும் எங்கள் மதமே சிறந்த மதம் என்கின்ற ரீதியில் தரப்படுவதை நாம் காணலாம். மதங்கள் ஒவ்வொன்றும் ஒரு நீண்ட வரலாற்றுப் பின்னணி கொண்டன. ஆனால் மாறி வரும் காலத்தில் சமூக பொருளாதார விசைகளை உட்படுத்தித் தமது தோற்றத்தினைப் பெற்றன. இந்த வரலாற்றில் அவை மதங்களாகிய தமக்குள் வேறுபட்டு பகிர்ந்து கொண்ட கருத்துக்களோ ஒரு கோடி. மதங்களை ஒப்பீட்டு ரீதியில் நோக்குவதனால் அவற்றில் இருக்கக்கூடிய பொதுமைத் தன்மையும் அவற்றின் காரண காரியங்களும் விளங்க ஏதுவாகின்றன. இப்படியான பரந்த மனப்பான்மையுடன் வளரும் பிள்ளைகள்தான் எதிர்காலத்தில் ஒரு பன்முகப் பண்பாட்டு சமூகத்தின் சிறந்த பிரஜைகளாக வளர முடியும். இல்லாவிடின், எமது வருங்காலச் சமூகமும் நாம் இன்று சீரழிக்கிறப்பதைப் போல குறுகிய வாதமாகிய இன மற்றும் மதவாதத்திற்குள் அமிழ்ந்து போய் விடும். பாடசாலைகளில் ஒப்பீட்டு அடிப்படையிலான சமய பாடக் கற்பித்தலைக் (Comparative Religious Teaching) கொண்டுவருதலை ஆராயும் வாசக வட்டங்களை ஏற்பாடு செய்தல் மிகப் பயன் தரும்.

## எங்கள் முன்னால் விரியும் கேள்விகள் சில

வாசக வட்டங்களைத் தொடர்ந்து கல்வித் துறையின் விருத்திக்கு நாம் பயன்படுத்தப்போகின்றோமெனில் சில கேள்விகளை மனதில் வைத்துக் கொண்டு செயற்பட வேண்டும் என்று தோன்றுகின்றது. இக்கேள்விகள் நாம் எமது வருங்கால உபாயங்களை வகுப்பதற்கு சிலவேளைகளில் உதவி புரியக்கூடும்.

கல்வித் துறையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பொது மக்களுக்கு உரித்து சக்தியாக இருக்கும் அம்சம் என்ன? அவர்கள் அவ்வாறு தம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு ஒரு வரையறை இருக்கின்றதா?

கொழும்பிலுள்ள சில பாடசாலைகளில் அவற்றின் அதிபர்கள் விலக்கப்பட்டபோது அவற்றின் பெற்றோர்கள் வந்து ஆர்ப்பாட்டம் செய்து அதனை அரசியல் பிரச்சனையாக்கியதை நாம் முன்பு கண்டோம். பொது மக்கள் அதிகளவில் பங்கெடுக்கும்போது அதிகாரப் போட்டிகளும், செல்வாக்குச் செலுத்தும் சில குழுக்கள் பாடசாலையிலும் சமூக மட்டத்திலும் தோன்றுவதைத் தவிர்க்க முடியாமல் இருக்கலாம். அப்படியானால் என்ன செய்வது?

ஒரு நாட்டின் தேசிய சட்ட மற்றும் கொள்கைத் திட்டமிடல்களுக்கு வாசக வட்டங்கள் இட்டுச் செல்ல முடியுமா?

கல்வித்துறை மேலும் தனியார் மயமாகிக் கொண்டு செல்லும் இந்தக் காலத்தில் பொது மக்கள் இதில் அக்கறை காட்டி ஈடுபடுவது சாத்தியந்தானா? தேவையா?

❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறூனரும் நவீன கல்வியும்

புறூனரின் கல்விச் சிந்தனைகளைத் தமிழில் அறிமுகப்படுத்துவதுடன் நவீன கல்வியில் அவரது சிந்தனைகள் பெறும் முக்கியத்துவத்தையும் ஆராய்கின்றது இக்கட்டுரை.

பேரா. சபா. ஜெயராசா
கல்வியியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## (அ) கோட்பாட்டுப் பின்புலம் "எந்தப் பாடத்தையும் எந்தப் பிள்ளைக்கும், எத்தகைய விருத்தி நிலையிலும் வினைத்திறனுடன் கற்பிக்க முடியும்"

இது உளவியலாளர் ஜெரோம் எஸ். புறூனருடைய நாற்பது ஆண்டு கால ஆய்வுகளில் இருந்து பெறப்பட்ட ஆதாரபூர்வமான முடிவு. அவரது ஆய்வுகள் தொடர்ந்து சென்றன. ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் அறிகை தொடர்பான மத்திய ஆய்வு நிலையத்தை நிறுவி மேலும்பல ஆய்வுகளுக்கு அவர் தலைமையில் அமைந்தார்.

யாதாயினும் ஒரு பொருளை அறிதல் ; விளங்குதல், உணர்தல், அப்பொருள் பற்றிய காரண காரியத் தொடர்புகளை இணைத்தல், தீர்ப்பு வழங்குதல் போன்ற பல்வேறு உளச் செயல்களை உள்ளடக்கியதே "அறிகை" என்று உளவியலிலே கொள்ளப்படும்.

1915 ஆம் ஆண்டு பிறந்த புறூனர் தமது இளமைக்காலத்திலேயே உளவியல் ஆய்வுகளில் ஆழ்ந்த ஈடுபாடு காட்டினார். இரண்டாம் உலகப்போரின் போது உளவியல் யுத்த முறைகளைப் பயன்படுத்துவதற் கைதேர்ந்தவராக விளங்கினார். யுத்த காலத்தில் மக்கள் மத்தியிற் சாதகமான பிரசாரங்களைச் செய்தல், கருத்தேற்றம் செய்தல், பொதுசன வேட்கையை உருவாக்குதல் என்பவற்றில் உளவியல் நுண்முறைகளை வெகு நளினமாகக் கையாண்டார். இத்துறைகளில் அவர் பெற்ற பட்டறிவு மனிதரின் புலக்காட்சி அமைப்புக்களில் மேலும் மேலும் ஆய்வுகளைச் செய்வதற்கு உற்சாகமளித்தது.

புலக்காட்சி அமைப்பும், மனிதரின் சிந்தனைச் செயல் முறைகளும் ஒன்றிணைந்தவை. ஒருவரது சிந்தனைச் செயல் முறையை விரிவாக ஆராய்ந்தால் அறிவை அவர் எவ்வாறு பெற்றுக் கொள்கின்றார், நுண்மதி ஆற்றலை எவ்வாறு விருத்தி செய்கின்றார் என்பதை உணரமுடியும். ஒருவர் எவ்வாறு கற்றுக் கொள்கின்றார், திறன்களை எவ்வாறு சொந்தப்படுத்துகின்றார் என்பதும் சிந்தனைச் செயல் முறையுடன் இணைந்தது. 1960ஆம் ஆண்டில் அவர் வெளியிட்ட 'கல்வியின் செயல் முறை' என்ற நூல் உளவியலையும் கல்வியியலையும் இணைக்கும் அறிகை தொடர்பான செயற்பாட்டின் தேடலாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து 1962ஆம் ஆண்டில் 'தெரிதல் என்பது பற்றி' என்ற நூலையும், 1966ஆம் ஆண்டில் 'போதனை முறையை நோக்கிய ஒரு கோட்பாடு' என்ற நூலையும், 1971ஆம் ஆண்டில் 'கல்வியின் பொருத்தப்பாடு' என்ற நூலையும் வெளியிட்டார்.

கல்வியியல், கற்றல், கற்பித்தல் தொடர்பான கோட்பாடுகளை உருவாக்குவதற்கு அறிகை உளவியல் மட்டும் அனுசரணையாக அமையமாட்டாது, வேறு பல துறைகளையும் உள்ளடக்கிய பன்முகமான ஆய்வு அவசியம் என்பதைப் புறூனரின் பிரயோக அணுகு முறைகள் விளக்கின. இந்த விருத்தி புறூனரில் மட்டுமன்றி உளவியல் முறையிலும் காணப்படுகின்றது. ஒருவகையில் இதனைச் சமூக உளவியல் அணுகுமுறையில் உருவாக்கம் தழுவிய விரிவு என்றும் கூறலாம். புறூனர் மாக்சிய அணுகு முறையை ஏற்றுக் கொண்டவரல்லர். அவர் கல்வியியலை விளக்குவதற்கு உயிரியல், மானுடவியல், பொறியியல் ஆகிய புலங்களைத் தொடர்புபடுத்துவதற்கு உற்சாகம் காட்டிய அளவுக்கு சமூகவியலையும், சமூக முரண்பாடுகளையும் தொடர்புபடுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை.

மேலும் அவர் தமது ஆய்வுகளில் ஒப்பியல் அணுகு முறையைப் பெருமளவிலே பயன்படுத்தினார். முதிர்ச்சி அடைந்தவர்களின் கற்றலை, முதிர்ச்சி அடையாதவர்களின் கற்றலுடன் ஒப்பிடல், மனிதரின் கற்றலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் நிலை விலங்குகளுடன் ஒப்பிடல் என்றவாறு ஒப்பியல் அணுகுமுறை சில விளக்கங்களைப் பெறுவதற்கு உறுதுணையாக இருக்குமேயன்றி அதன் வாயிலாக ஒரு பூரணமான சாதனையை உளவியலில் உருவாக்கி விட முடியாது என்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது.

டுயி, பியாஜே, பிராய்ட், மாக்ஸ் போன்ற சிந்தனையாளரின் கருத்துக்கள் புறூனரின் கல்வி உளவியலாக்கங்களிலே ஊடுருவி நிற்கின்றன. டார்வின் விளக்கிய பரிணாம வளர்ச்சி அல்லது படிமலர்ச்சியின் தொடர்ச்சியை மனிதக் கற்றல் செயற்பாடுகளிலே புறூனர் காண்கின்றார். நனவு உள்ளத்துக்கும் நனவில் உள்ளத்துக்குமிடையே நிகழும் முரண்பாடுகளை அறிந்தார். மனநலத்துக்கும் மனநோய்க்கும் இடையே காணப்படும் முரண்பாடுகளை விளக்குவதற்கு அவர் பிராய்டின் கருத்துக்களிலே காலூன்றி நின்றார். இந்நிலையில் புறூனரை நவபிராய்டியரென்றும் விமர்சிக்க முடியும்.

கல்வியியற் கற்றல், கற்பித்தல் தொடர்பான எண்ணக்கருக்களை வகுப்பதற்கு அறிகை உளவியல் மட்டும் அடிப்படையாக அமையமாட்டாது. இதற்குப் பல் துறைகளையும் உள்ளடக்கிய பன்முகமான ஆய்வு அவசியம் என்பதைப் புறூனரின் பிற்கால ஆய்வுமுறைகள் விளக்கின. இந்த விருத்தி புறூனரில் மட்டுமன்றி [illegible] அறிகை முறையில் [illegible] புறூனர் [illegible] நல்லது. அவர் கல்வியியலை விளக்குவதற்கு உயிரியல், மானுடவியல், மொழியியல் ஆகிய புலங்களைத் தொடர்புபடுத்துவதற்கு [illegible] காட்டிய ஆர்வத்தை [illegible] சமூக முரண்பாடுகளாலும் தொடர்புபடுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை.

மேற்கூறியவற்றைக் கருத்திற் கொண்டு புறூனர் "பரிணாமத்துக்குரிய கருவிசார் பாகம்" என்ற நிலைப்பாட்டை முன்வைத்தார். மனிதனின் விருத்தியும், அவனுக்கே உரிய சிறப்பான உளத்திறன்களும் அவன் கருவிகளைக் கண்டு பிடிக்கவும் பயன்படுத்தவும் வல்ல ஆற்றலின் காரணமாக உருப்பெற்றன என்பதைக் கருவாகக் கொண்டதே பரிணாமத்துக்குரிய கருவிசார் பாகமாகும். கருவிகளின் பயன்பாடு மனிதனின் புலன்கள் உளத்திறன்கள் உடலியக்கத்திறன்கள் என்பவற்றை விருத்தியடையச் செய்தன. மொழியினூடாகவும் பண்பாட்டுக் கருவிகளினூடாகவும் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய செயல்களைக் கற்றுக் கொள்ளவும், சிந்தனைச் செயல்முறைகளை உருவாக்கிக் கொள்ளவும் முயல்கின்றனர் என்று விளக்கும் புறூனர் மனிதரின் மொழி வளர்ச்சியிலும் சிந்தனைச் செயல்முறையிலும் அடிப்படையாக விளங்கும் உள்ளுறை பொருளாதார உற்பத்தி, என்பவற்றைத் தமது ஆய்வுகளிலே பயன்படுத்தத் தவறி விடுகின்றார். இந்நிலையில் அவர் ஆதரவுவாதியாகவும் மாறிவிடுகின்றார்.

பாலியல் வேட்கைகளுக்கும் சமூகக் கட்டுப்பாடுகளுக்குமிடையே முரண்பாடுகள் எழுகின்றன. அக உணர்வுகளுக்கும் புற வாழ்க்கைக்குமிடையே முரண்பாடுகள் எழுகின்றன இம்முரண்பாடுகளை விளக்குவதற்குரிய முயற்சியும் அகவயமான ஓர் அணுகுமுறையே பிராய்டினால் முன்மொழியப் பெற்றது. பிராய்டிசம் அகவயமான ஓர் அணுகு முறையென்றும் இயங்கியல் நோக்கு புறம்பான ஓர் அணுகுமுறையென்றும் உளவியலிலே கருதப்படும். மனித விதியை நுண்மதி ஆற்றல்களால் மாற்றியமைக்க முடியும் என்ற கருத்தாக்கம் ஊடாகப் புறூனர் பிராய்டிசத்துக்குப் புதிய விளக்கம் தரும் நவபிராய்டியராகின்றார்.

மனித நடத்தைகளை விளக்கிய ஸ்கின்னரின் கருவிசார் நிபந்தனைப்பாட்டுக் கொள்கையைப் புறூனர் ஏற்றுக்கொள்ளவில்லை. மீளவலியுறுத்தலால் மனித நடத்தைகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன என்பது வெறும் பொறிமுறை சார்ந்த காட்டுருவாகவே அமைகின்றது. விலங்குகளின் நடத்தைகள் போன்று மனித நடத்தைகள் பொறிமுறைக் கட்டுப்பாடுகளுக்கு உள்ளடங்கமாட்டா. மொழி என்ற குறியீட்டுச் செல்வத்தை வைத்திருப்பதன் காரணமாக மனிதனுடைய கற்றல் விலங்குகளின் கற்றலில் இருந்து அடிப்படையில் வேறுபடுகின்றது. கருவிகள் ஆக்கும் திறன் மனித நடத்தையில் மேலும் சிக்கலான இயல்புகளை ஏற்படுத்துகின்றன.

மனித நடத்தைகளை விளக்குவதற்குப் பண்பாட்டுக் கோலத்தை ஆதாரமாகக் கொள்ளும் புறூனர் அறிவே தனித்த தீர்மானிப்பு விசையாக மாறி விட முடியும் என ஏற்றுக்க முயலவில்லை. பண்பாட்டுத் தீர்மானிப்பு விசையும் உயிரியல்சார் தீர்மானிப்பு விசையும் ஒன்றுடன் ஒன்று இடைவினை கொள்வதன் வாயிலாக மொழியும் சிந்தனைக்குரிய கருவிகளும் உருவாக்கப்படுகின்றன என்பது அவரின் கருத்து.

ஒரே நேரத்தில் பல்வேறு வகையான தகவல்கள் மனிதனை வந்தடைகின்றன. அவையனைத்தையும் சமகாலத்தில் உள்வாங்கிக் கொள்ளும் திறன் மனிதனுக்கு இல்லை. ஆனால் அவற்றை ஒழுங்குபடுத்தி உள்வாங்கும் திறனை மனிதன் கண்டுபிடித்துள்ளான். வகைப்படுத்தல், கோட்பாடுகளை அமைத்தல் மாதிரிகளை உருவாக்குதல் என்பவை மனிதனால் ஆக்கப் பெற்ற "எளிதாக்கும் செயல்" முறைக்குரிய கண்டு பிடிப்புகளாகும். சிக்கலான அறிவுத் தொகுதியைப் பாகுபடுத்தி, ஒழுங்குபடுத்தி அறிந்து கொள்ளும் திறனை மனிதன் கண்டறிந்துள்ளான். இவையனைத்தும் "பண்பாடு" என்ற பெருநிகழ்வினுள் அடங்குகின்றன. பண்பாடு என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து மக்களுக்குமுரிய பொதுச்செல்வமாகின்றது. எமது எதிர்பார்ப்புக்களுக்கேற்றவாறு 'நிகழ்ச்சித் திட்டமாக்கப்பட்ட ஆபத்து நிலை' என்ற அவலப்பையும் பண்பாடு கொண்டுள்ளது. அதாவது எமது அறிவுத் தேவைகளைப் பண்பாட்டிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். அதே வேளை பண்பாடு எமக்குரிய முன்கொட்சிகளை உருவாக்குவதிலும் பங்கு கொள்கின்றது.

மேற்கூறிய பின்புலத்தில் கல்வி பற்றிய தமது கருத்துக்களை அவர் குறிப்பிடுகின்றார். அறிவைப் பெற்றுக் கொள்வதற்குரிய நுட்பவியல்கள் மீது கவனம் செலுத்துதலே கல்வியின் முக்கிய பணியாகும். அந்த நுட்பவியல்கள் சூழலை வெல்லல் மேலும் மேலும் கட்டுப்படுத்துவதற்குரிய கருவிகளாக அமைகின்றன.

கற்றலில் மொழியின் முக்கியத்துவமும் புரூணரால் வலியுறுத்தப்படுகின்றது. சிந்தனையை ஒழுங்கு படுத்திச் செயற்படுவதற்கு மொழி துணை செய்கின்றது. மொழியில் காணப்படுகின்ற பொதுப் பண்புகளையும் சிறப்புப் பண்புகளையும் நோக்குவதுடன் அது அறிகைச் செயல்முறையில் எவ்வாறு பங்கு கொள்ளுகின்றதென்பதையும் ஆராய்தல் வேண்டும். நுண்மதி விருத்தியில் மொழி நடுநாயகமாக விளங்குகின்றது. மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதற்குரிய திறன் கற்றலுக்கு இன்றியமையாததாகும். சிந்தனை, செயல் ஆகியவற்றை வழிகாட்டும் ஒரு கருவியாக மொழியை அமைக்கும் பொழுது அதன் உள்ளார்ந்த ஆற்றல் வெளிப்படுகின்றது. மொழி விருத்தியும் வளமும் பெறாத பண்பாட்டுச் சூழலில் நுண்மதி விருத்தி மட்டுப்படுத்தப்படுகின்றது.

கல்வியிலே தாராண்மை வாத மக்களாட்சிக் கோட்பாட்டைப் புரூணர் முன்னெடுத்துச் செல்கின்றார். இவரது தாராண்மை வாதம் நடப்பியலோடு இணையாத கற்பனையானதும் அல்லது ஆதர்ச வாதமாக விளங்குகின்றது. சமூகவியல் நோக்கில் ஆழ்ந்து பார்க்கும் பொழுது மத்தியதர வகுப்பினரை மேம்படுத்துவதற்குரிய தாராண்மைவாதியாகவே புரூணர் காணப்படுகின்றார். கல்வி என்பது பல்வேறு ஆய்வுப்புலங்களினூடாக நோக்கப்படவேண்டிய வேளையில் இவரது ஆய்வுகள் பெரும்பாலும் உளவியலை மட்டும் கட்டளைக் கல்லாகக் கொண்டுள்ளன. ஆய்வின் போதனையியல் சார் வலுவுடையதாகின்றது.

தாராண்மைவாத மக்களாட்சி என்ற கருத்தியலின் வளர்ச்சி காரணமாக பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் தொழிலாளர்களுக்கும் தாழ் மத்திய தர வகுப்பினருக்கும் கல்வி புகட்ட

மனித நடத்தைகளை விளக்குவதற்குப் பௌதிகத் தொகுதிகளை ஆதாரமாகக் கொள்ளும் புரூணர் அறிவு தனித்து நின்று வளர்வதாக மாற்றி முடியும் என ஏற்றுக் கொள்ளவில்லை. பௌதிகத் தொகுதி வழியும் உயிரியல் சார்ந்த தொகுதி வழியும் ஒன்றுடன் ஒன்று இணைவதன் விளைவாகத் தான் மானிடச் செயற்பாடுகள் சிந்தனைக்குரிய கருத்துக்களும் உருவாக்கப்படுகின்றன என்பது அவரின் கருத்து.

வேண்டுமென்ற இயக்கங்கள் வலிமையடைந்தன. கைத்தொழிலியல் கருதுகளைப் பெறும் உபாயமாகவும் இது அமைந்தது. இந்நிலையில் அனைவருக்கும் கல்வி கற்பிக்கப்பட முடியும் என்று முன்மொழியப் பெற்ற உளவியல் உபாயங்கள் முற்போக்கானதாகவும் மனித நேயம் கொண்டதாகவும் விளங்கியதென்பதை நிராகரிக்க முடியாது.

புரூணரின் கருத்துக்களை மேலோட்டமாகப் பார்க்காது ஆழ்ந்து நுணுக்கமாகப் பார்க்கவேண்டிய தேவை எழுகின்றது. கல்விக்கு அடிப்படையாகப் பண்பாட்டு உளவியற் காரணிகளை நோக்கும் புரூணர் ஏனைய காரணிகளை அழுத்தக் கூறிவிடுகின்றார் என்பதை முற்கூறியே கண்டோம்.

எந்த ஒரு பாடத்தையும் எந்த ஒரு பிள்ளைக்கும், எந்த ஒரு நிலையிலும் கற்பிக்க முடியும் என்று அவர் கூறும்பொழுது, அவர் கல்வித் தொகுதியை எளிமையாக்கும் ஒரு செயல் முறையையும் வற்புறுத்துகின்றார் என்ற விமர்சனமும் முன்மொழியப்படுகின்றது. எளிமையாக்கல் கருத்து மலினத்தை ஏற்படுத்த முடியும். ஒரு சாராருக்குத் தரம் குறைந்த கல்வியையும் இன்னொரு சாராருக்குத் தரமுடைய கல்வியையும் வழங்கல் ஏற்றத் தாழ்வுள்ள ஒரு சமூக அமைப்பின் இயல்பாகக் காணப்படும். இத்தகைய ஒரு பிறழ்வினை எவ்வாறு தடுக்க முடியும் என்ற கருத்தை புரூணர் முன்வைக்கவில்லை. இந்நிலையில் அவரை ஒரு யூட்டோப்பியன் கற்பனை வாதியென்றும் விமர்சிக்க முடியும். அடையும் வழிகள் இன்றி ஒரு கனவுலகைச் சிந்தித்தல் யூட்டோப்பியன் அணுகுமுறையென்று கல்வியியலே கொள்ளப்படும்.

அடிப்படையான ஒரு சமூக நிர்மாணத்தின் வழியாகவே அனைவருக்கும் தரமான கல்வியை வழங்க முடியும் என்பதை வலியுறுத்தும் சமூக நிலைமாற்றத்துக்கான கல்விநெறி அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை அடையும் தருக்கத்தைத் தெளிவாக முன்வைக்கின்றது என்பதை இச் சந்தர்ப்பத்தில் நினைவு படுத்தல் பொருத்தமானது.

## (ஆ) அறிவு தொடர்பான அமைப்பு

கல்வியை எவ்வாறு ஒழுங்கமைப்பது என்ற கேள்விக்கு விடை தருவது கலைத்திட்டமாகும். மிகவும் பரந்து விரிந்து வளர்ந்து செல்லும் அறிவுத் தொகுதியை மாணவரது விருத்திக்கேற்றவாறு தொகுத்து ஒழுங்கமைத்துக் கொடுக்கும் ஒரு வடிவமே கலைத்திட்டமாகும்; கலைத் திட்டத்தைக் கல்வியின் செயல் வடிவம் என்றும் கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவின் பாடசாலைக் கலைத்திட்டத்தை மீள் வரைவமைக்கும் செயல்நெறிகள் காணப்பட்டன. எத்தகைய பாடங்களைக் கற்பிப்பது, பாட உள்ளடக்கத்தில் எவற்றைச் சேர்ப்பது, கலைத்திட்டத்தின் பயன்பாடு எவ்வாறு இருத்தல் வேண்டும் போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டன. இவை தொடர்பாக அறிவின் அமைப்பு அல்லது அறிவின் கட்டமைப்பு பற்றி புறூனர் தமது கருத்துக்களை முன்வைத்தார்.

அறிவு தொடர்பான அமைப்பை விளக்குதல் கல்வியியலைப் பொறுத்தமட்டில் பொருண்மை கொண்ட ஒரு நடைமுறைக்கையாகும். பொருள்களுக்கிடையேயுள்ள தொடர்பும் அறிவுப்பரப்பில் அவை எவ்வாறு இடம் பெறுகின்றன என்பது பற்றியும் அவர் நோக்கினார். அவற்றோடிணைந்ததாக அறிவுப்பரப்பை உருவாக்கும் மூலக் கூறுகள் பற்றியும் நோக்க வேண்டியிருந்தது. அறிவுப் பரப்பைக் கற்றலுக்கேற்றவாறு எவ்வாறு ஒழுங்குபடுத்தி அமைப்பது என்பதும் சிந்தனைக்குரிய பொருளாயிற்று.

இதனை மேலும் விளங்கிக் கொள்வதற்கு கணிதம், புவியியல், வரலாறு, உயிரியல், பௌதிகவியல், என்றவாறு விரிந்து செல்லும் பாடப் புலங்களில் எவ்வாறு பிரதான எண்ணக் கருக்கள் இடம்பெறுகின்றன அவற்றில் காணப்படும் பிரதான கோட்பாடுகள், விதிகள், பாவனை என்பனவை பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பவற்றிலிருந்தே ஒரு பாடப்பரப்பினை உருவாக்கும் மூலக் கூறுகளை விளங்கிக் கொள்ளலாம்.

பாடப் புலங்களில் இடம்பெறும் சில மூலக்கூறுகளைப் புறூனர் சுட்டிக் காட்டுகின்றார். இலக்கிய பாடத்தில் 'அன்பியல்', 'இன்பியல்' முதலியவை இடம்பெறுகின்றன. இணைத்தல், பகிர்ந்து கொடுத்தல், தொடர்நிலைகள், முதலியவை கணிதவியலிலே காணப்படுகின்றன. இயற்கையின் தொடர்ச்சி பற்றிய எண்ணக்கருக்கள் உயிரியல் பாடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றைக் கருத்திற் கொண்டு ஒழுங்கமைக்கப்படும் கலைத்திட்டத்தில் உள்ளடக்கமானது 'உத்தம அளவிலான' கற்றலை ஏற்படுத்தக் கூடியவாறு இருத்தல் வேண்டும். உத்தம அளவிலான கற்றலை ஏற்படுத்துதல் விருப்புடைய ஓர் இலட்சியமாகும். கற்போனது உளவிருத்தி, அவனுடைய அறிவாற்றல் பண்பு, அறிவை உள்வாங்கும்திறன் என்பவற்றுடன் அறிவின் அமைப்பின் மீதும் கவனம் செலுத்தும் பொழுதுதான் உத்தம அளவிலான கற்றலை ஏற்படுத்த முடியும். இச்சந்தர்ப்பத்திற் புறூனர் 'உத்தம அமைப்பு' என்ற கருத்தையும் முன்வைக்கின்றார்.

> அறிவியல் [illegible] ... [illegible] ... ஏற்படுகின்றது.

கற்கப்படும் அறிவு, கற்போன் இயல்பு ஆகிய பண்புகளைக் கருத்திற் கொள்வதுடன் கற்போனுக்கு ஏற்றவாறு அறிவை உபாயப்படுத்தி வழங்குதல் என்பதையும் ஒழுங்குபடுத்துதலே உத்தம அமைப்பின் பண்புகளாகும்.

மூன்று பண்புகளின் அடிப்படையில் அறிவின் அமைப்பை விளக்கலாம். முதலாவது, அறிவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பண்பு. இரண்டாவது, சிக்கனப்படுத்தும் பண்பு. மூன்றாவது, வினைத்திறன்படுத்தும் பண்பு. ஒரே உள்ளடக்கத்தை வெவ்வேறு வடிவங்களிலே தருதல் பிரதிநிதித்துவப்படுத்தும் பண்பு எனப்படும். குறித்த உள்ளடக்கத்தை ஆர்வமுடன் கற்பதற்குரிய ஏற்பாடுகளை வழங்குதலுடன் சிக்கனமும் வினைத்திறனும் இணைந்துள்ளன. புறூனர் இங்கு வலியுறுத்தும் கருத்து யாதெனில் கற்பதற்குரிய உள்ளடக்கத்தைத் தெரிவுசெய்வதில் சிக்கனமும் வினைத்திறன் வலுவும் அதிக சிறப்பு வாய்ந்த கட்டமைக்கள் என்பதாகும். அதாவது மாணவர்கள் குறிப்பிட்ட கால அளவுக்குள் விளக்கத்துடனும் விசையுடனும் கற்பதற்கேற்றவாறு பாடப்பொருள் அமைப்பு இடம் பெறவேண்டும் என்பதை வலியுறுத்தினார். இவ்வாறாக அறிவின் உள்ளடக்கத்தை ஒழுங்கமைப்பதே 'கல்வியின் செயல்முறை' என்று கொள்ளப்படும்.

ஒவ்வொரு மாணவனும் தனிப்பண்புகளுக்கு ஏற்றவாறு அறிவின் அமைப்பும் கற்பிக்கவியல் அமைப்பும் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

'அந்தப் பொருளைக் கற்றோம்' 'இந்தப் பாடத்தை அறிந்தோம்.' என்பவையல்ல கல்வியின் இலக்குகள். நுண்மதித்திறன்களை விருத்தி செய்தல் அல்லது எவ்வாறு கற்றல் என்ற ஆற்றலை விருத்தி செய்தல் என்பதே கற்றலின் உள்ளார இலக்காக இருத்தல் வேண்டுமென புறூனர் விளக்கினார். அதாவது பிரச்சினை தீர்க்கும் வழிமுறைகளை உருவாக்கும் திறனை வளர்த்துக் கொள்வதே கல்வியின் உள்ளார்ந்த இலக்காகும். இவற்றை வேறு விதமாகக் கூறுவதாயின் எவ்வாறு கற்க வேண்டும் என்ற இலக்கின் மீதே கவனம் செலுத்துதல் ஆழ்ந்து வலியுறுத்தப்படுகின்றது.

விளங்குதல், கற்பனைசெய்தல், வினைப்படல், மொழியையும் பிற குறியீடுகளையும் ஆளுகைப்படுத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியவற்றை வளர்க்க வேண்டியுள்ளது. இவற்றோடு பாடத்தின் அடிப்படை அமைப்பை அறியும் முதன்மை வலியுறுத்தப்படுகின்றது. அடிப்படை அமைப்பை அடிப்படை உள்ளடக்கம் என்றும் கூறலாம். கண்டுபிடித்தலின் வாயிலாகக் கற்றலே புறூனர் விதந்துரைத்த கற்றல் முறையாகும். மாணவர் தாமே வினாக்களை அமைத்தலும் தமது முயற்சியின் காரணமாகத் தாமே விடையைக் கண்டறிதலும் ஊக்குவிக்கப்பட வேண்டியுள்ளது. மாணவன் தனக்காகத் தானே கண்டுபிடித்து முன்னேற்றம் பெறுதலே வலியுறுத்தப்படுகின்றது.

கண்டு பிடித்தல் வாயிலாகக் கற்றல் என்பது மாணவனை மத்தியாக அல்லது கற்பவனை நடுநாயகமாகக் கொண்ட முறையியலாகும். குழந்தைகள் தாமாகவே கற்கின்றார்கள். அவர்களது அகத்தேயிருந்து அறிவு தேடும் திறன் தானாகவே வேற்றாகப் பெருக்கெடுக்கின்றது. ஆசிரியர் தலையீடு வேண்டியதில்லை என்ற புனைவு இலட்சியவாதங்களைப் புறூனர் ஏற்றுக் கொள்ளவில்லை.

கற்றலில் மொழியின் சிறப்பினை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றார். இந்நிலையில் வளர்ந்தோர், ஆசிரியர் என்போருடன் கொள்ளும் தொடர்புகளும் இடைவினைகளும் மொழித்திறனை வளம்படுத்துகின்றன. இந்நிலையில் கற்பிப்போரின் துணையீடு கட்டாயமாகவும் தீர்மானமாகவும் தேவைப்படுகின்றது.

தெரிந்தவற்றை அடிப்படையாக வைத்துப் புதியவற்றைத் தேடல் வேண்டும். தயார் நிலையிலுள்ள ஓர் உள்ளமே கண்டு பிடித்தலைச் சாதகமாக்கிக் கொள்ளும். ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே நிகழும் ஒழுங்கமைந்த இடைவினைகளின் மீதே மாணவரில் நுண்மதி விருத்தி கால்கோள் கொள்ளும். பொருத்தமான நேரங்களில் பொருத்தமான தகவல்களை வழங்குதலே ஆசிரியரின் கடன். அது மாணவனுக்குத் தன்னிறைவு தரல் வேண்டும். சரியென மேலும் முன்னேற்றகரமான தொழிற்பாட்டினை மாணவர் தாமே செய்யக் கூடியவாறு ஆசிரியர் பணிப்புரை தருதல் விரும்பத்தக்கது.

> அறிவுப் பொருள்களைக் கற்றல் இதற்குப் பாடத்தை அறிந்திருத்தல் மட்டுமன்றிக் கல்வியின் இலக்காகும் [illegible] நுண்மதித் திறன்களை [illegible] செய்தல் அறிவு [illegible] என்ற ஆற்றலை விருத்தி செய்தல் என்பதே கற்றலின் உயர்ந்த இலக்காக இருத்தல் வேண்டுமென புறூனர் விரும்பினார். அதாவது பிரச்சினை தீர்க்கும் வழிமுறைகளை உருவாக்கும் திறனை வளர்த்தலே [illegible] கல்வியின் உயர்ந்த இலக்காகும். இவற்றை வேறு விதமாகக் கூறுவதாயின் எவ்வாறு கற்பது என்பதை [illegible] மிக உயர்ந்த நோக்கமாக ஆக்குதல் வலியுறுத்தப்படுகின்றது.

நுண்மதிச் செயற்பாடுகளைப் பொறுத்த வரை இரண்டு பிரதான பண்புகள் புறூனரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஒன்று உட்கிளர்ந்தெழும் சிந்தனை. மற்றையது பகுப்பாய்வுச் சிந்தனை. பிரச்சினைப் விடுவிக்கும் கற்பித்தல் முறை உட்கிளர்ந்தெழும் சிந்தனைச் செயலை வளர்க்கின்றது. உட்கிளர்ந்தெழும் சிந்தனையை வளர்ப்பதற்கு அனுசரணையாக பகுப்பாய்வுச் சிந்தனையை அமைத்தல் வேண்டும். இந்த இரு வகையான சிந்தனைகளும் செயற்படுவதற்குரிய களமாக இருத்தலே சிறந்த கலைத்திட்ட ஒழுங்கமைப்பின் இயல்பாகக் கொள்ளப்படும். பிரச்சினை விடுவித்தல் தொடர்பான அலகுகள் கலைத்திட்டத்தில் இடம்பெறல் வேண்டும்.

பிரச்சினை விடுவித்தலின் உயர்ந்த நிலையாக நுண்மதி மிகு பிரச்சினை விடுவித்தல் விளங்குகின்றது. இது கணிதவியலையும் விஞ்ஞான விளக்கங்களையும் உள்ளடக்கி நிற்கும். மனனம் செய்து வெறும் பொறிமுறையாகக் கற்றலைப் புறூனர் விரும்பவில்லை. கற்றலிலும் கற்பித்தலும் விசாரணைக்குரிய திறன்களை முக்கியப்படுத்த வேண்டும் என்ற கருத்தை அவர் கொண்டிருந்தார். எவ்வாறு அறிதல், எவ்வாறு தெரிந்து கொள்ளல், எவ்வாறு இயக்குதல், எவ்வாறு நிறுவுதல், என்றவாறு விசாரணைக்குரிய திறன்கள் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். மேலும் மேலும் விசாரணைகளை வளர்த்தெடுத்தல் வாயிலாக அறிவில் முன்னேறிச் செல்லலாம். மனிதமேம்பாட்டின் அடிப்படையாக அமைவது விசாரணைத்திறனாகும். மனித ஆற்றலும் மேலோங்க விசாரணைத்திறனும் மேலோங்கும்.

## (இ) சுழல் ஏணிக் கலைத்திட்டம்:

சுழல் ஏணிக்கலைத்திட்ட ஒழுங்கமைப்பை புறூனர் வலியுறுத்தினார். சுழல் ஏணிக்கலைத்திட்டம் என்றால் என்ன என்பதை முதற்கண் நோக்குதல் வேண்டும். திறன்கள் எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் ஆகியவற்றைத் தெரிந்தெடுத்துக் கற்பிப்பது சுழல் ஏணிக் கலைத்திட்டத்தின் தலையாய பண்பு.

சுழல் ஏணி என்பது மத்திய ஒரு தண்டை ஆதாரமாகக் கொண்டு படிகள் சுற்றிச் சுற்றி உயர்ந்து செல்லும் ஓர் அமைப்பாகும். அத்தகைய ஒரு மாதிரிகையைப் பின்பற்றுவதே சுழல் ஏணிக்கலைத் திட்டம். முதலாம் வகுப்பில் ஓர் எண்ணக்கருவின் மிகவும் எளிய பண்புகளைக் கற்றல் ஒரு மாணவன் பத்தாம் வகுப்பில் அதே எண்ணக்கருவை மிக ஆழ்ந்தும் சிக்கலாகவும் கற்கின்றான். அதாவது, ஒரே எண்ணக்கரு ஒவ்வொரு வகுப்பிலும், வெவ்வேறு விதமாகவும், வெவ்வேறு விளக்கத்துடனும், வெவ்வேறு பிரயோகங்களுடனும் கற்பிக்கப்படுகின்றது. சுழல் ஏணிக்கலைத்திட்டத்துக்குச் சார்பான பல்வேறு நியாயங்களை புறூனர் முன்வைக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிகை விருத்திக் கோலத்தை விளக்கும் பொழுது, மூன்று அடிப்படைப் பண்புகள் அவரால் முன் வைக்கப்பட்டுள்ளன. அவை (அ) செயலால் அனுபவங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல் (ஆ) புலக்காட்சி ஒழுங்கமைப்பாலும், படிமங்களாலும் அனுபவங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல் (இ) குறியீடுகளால் அனுபவங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தல். மேற்கூறியவற்றை, செயல்வழி, காட்சி வழி, குறியீட்டுவழி என்றவாறு சுருக்கிக் கூறலாம்.

இவை வளர்ச்சிப்படி நிலைகளோடு இணைந்து செல்லும் என்று புறூனர் விளக்கினார். பியாஜே வளர்ச்சிப்படி நிலைகளைத் தொடர்ச்சியாக விளக்கியமை போன்று, புறூனரும் விளக்கினார். ஆனால் புறூனர் விருத்திச் செயல்முறையில் ஆழ்ந்த அக்கறை காட்டினாரேயன்றி, வளர்ச்சிப்படி நிலைகள் மீது கட்டுப்பட்டு நிற்கவில்லை. விளைதிறன் மிக்க கற்பித்தலின் வாயிலாக உளவிருத்தியை மேம்படுத்த முடியும்.

[illegible]

சுழல் ஏணிக்கலைத்திட்டம் தொடர்பாக புறூனர் ஒரு சிறப்பான கருத்தை முன்வைத்தார். எந்த ஒரு விருத்தி நிலையிலும் மாணவரது நுண்மதிக்கிறமும், அறிவுத் திறனும் ஆற்றலும் ஒரே தன்மையினதாக இருக்கும் என்று குறிப்பிட்டார். அதனை குறித்த ஒரு பாடத்தின் பேராற்றல் கொண்ட ஒருவரது உளச் செயற்பாடும் அந்த அறிவை ஆரம்ப நிலையிலேயே கற்றுக்கொள்ளுகின்ற ஒரு மாணவனது உளச் செயற்பாடும் ஒத்ததாகவே இருக்கும். 'பௌதிகவியலைக் கற்கும் ஒரு பாடசாலை மாணவன் பௌதிகவியல் அறிஞனாவான்'.

ஒரு மாணவனிடத்துக் கற்றல் எவ்வாறு நிகழ்கின்றது என்பதை அடுத்து நோக்குதல் வேண்டும். ஏற்கனவே ஆய்வாளர்களால் அமைந்துள்ள 'கற்கை அமைப்பு' என்ற உள அமைப்புக்கேற்ப புதியதாகக் கற்பித்தல் உள்வாங்கப்படுகிறது. அறிவை அமைப்பு வடிவங்களாலும், கோட்பாடுகள் எவ்வாறு கட்டியெழுப்பப்படல் வேண்டும் என்ற செயற்பாடும் பாடசாலையின் ஒவ்வொரு மட்டங்களிலும் பிரதான தொழிற்பாடுகளாக இடம்பெறல் வேண்டும்.

செயல்வழி, புலக்காட்சி ஒழுங்கமைத்தல்வழி என்பவற்றினூடாக குறியீட்டு அமைப்பை நோக்கி மாணவர்கள் முன்னேறிச் செல்வதற்குரிய ஒழுங்கமைப்பைப் பாடசாலைகளில் ஏற்படுத்தல் வேண்டும். இதற்குச் சுழல் ஏணிக்கலைத்திட்டம் மிகவும் பொருத்தமானதாக அமைகின்றது. எளிதான நுண்மதிச் செயற்பாடுகளில் இருந்து மிக நுட்பமான நுண்மதிச் செயற்பாடுகளை ஓர் எண்ணக்கருவின் பன்முகப்பட்ட விருத்தியைச் சிறுசிறு பிரிவுகளாக்கிக் கற்பிப்பதற்கு இந்தக் கலைத்திட்டம் துணை செய்யும்.

எந்தக் குழந்தைக்கும் எந்த ஒரு நிலையிலும் எத்தகைய ஒரு பாடத்தையும் வழங்கும்போது அதனை அறிவுசார் நேர்மையுடன் கற்பிக்க வேண்டும். அடிப்படையான கருத்தேற்கள் எவ்வகையிலும் மாசுபடுத்தப்படலாகாது.

எடுத்துக் காட்டாக இலக்கியத்தில் இடம் பெறும் துன்பியற் கோட்பாட்டை மாணவனுடைய விருத்தியின் மூன்று நிலைகளிலும் எவ்வாறு கற்பிக்கலாம் என்பதை நோக்கலாம்.

(அ) செயல்வழி நிலையில் மாணவனுக்கு ஏற்படும் உடல் நோவுடன் துன்பச் சுவையைத் தொடர்புபடுத்தலாம்.

(ஆ) காட்சிவழி நிலையில் மாணவனை துன்பியற் காட்சிகளைப் படமாகவோ, நாடகமாகவோ அனுபவிக்கச் செய்து துன்பியற் பண்பை விளக்கலாம்.

(இ) குறியீட்டு வழியிற் சொற்களாலும் படிமங்களாலும், துன்பியற் பண்புகளை அறியும் அனுபவங்களை வழங்கலாம்.

விஞ்ஞான பாடத்தில் மின்னியலை எவ்வாறு மூன்று நிலைகளிலும் கற்பிப்பது என்பதை அடுத்து நோக்கலாம்.

(அ) செயல் வழி நிலையில் மின்விளக்கை எரியவைத்தல், ஆளியை அழுத்துதல் போன்ற அனுபவங்களால் மின்னியலின் விளக்கங்களை மாணவர் பெறலாம்.

(ஆ) காட்சிவழி நிலையில் மின் சுற்றோட்டப் படத்தை வரைந்து அல்லது ஒரு காட்டுருவைச் செய்து மின்னியலைக் கற்றுக் கொள்ளலாம்.

(இ) குறியீட்டு வழியிற் சொற்களால் மின்னியலை விளக்கலாம். குறியீட்டு வழியின் உயர்ந்த நிலையில் மின்னியல் விதிகளைக் கணிதக் குறியீடுகளால் விளக்குவதை மாணவர் அறிந்து கொள்வர்.

சுழல் ஏணிக்கலைத் திட்டத்தை ஒழுங்கமைப்பது அத்துணை எளிதான செயலன்று. அனுபவமும் திறமையும் பெற்ற பல்வேறு அறிஞர்களின் சேவைகள் ஒன்றிணைக்கப்படல் வேண்டும். இதற்கென்று சிறப்பார்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியர் ஆளணி உருவாக்கப்படல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு பயிற்சிநிலைக்குமுரிய எண்ணக் கருக்களைத் தெரிவு செய்தலும் ஒவ்வொரு பாடங்களிலும் அவற்றைக் கற்பித்தலும் நீண்ட ஆய்வுகளின் பின்னரே முடிவு செய்யப்படல் வேண்டும்.

(ஈ) பாடசாலை ஒழுங்கமைப்பு :

ஒருவன் தனக்குரிய நுண்மதி ஆற்றல்களின் உன்னத நிலைகளை அடைவதற்குத் துணைபுரிவதே பாடசாலையின் உயர்ந்த இலட்சியம். அவ்வாறு உளத்திறன் விருத்திக்குப் பாடசாலைகள் உறுதுணையாயிருக்க வேண்டுமேயன்றி ஏனைய கடமைகளைப் பாடசாலைகள் பொறுப்பேற்க வேண்டியதில்லை என்று புறூனர் கருதினார். அதாவது பிற சமூக நிலையங்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகளைப் பாடசாலைகள் தமக்குரியதாக வலிந்து பொறுப்பேற்பது தடைப்பட வேண்டும். எடுத்துக் காட்டாக பிள்ளைகளின் உடல் நலத்தை மேம்படுத்தும் பணியைப் பாடசாலை மேற்கொள்ள வேண்டியதில்லை, அவற்றைச் சுகாதார நிலையங்களோ சமூகசேவை நிலையங்களோ மேற்கொள்ளலாம்.

இச்சந்தர்ப்பத்திலும் புறூனர் விமர்சிக்கப்பட வேண்டிய ஆய்வாளராகின்றார். மாணவரின் நுண்மதி ஆற்றல்கள் உடல்நலம், சமூக இசைவாக்கம், மனவெழுச்சிக் கோலங்கள், அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுதல் என்ற பலவகைப் பண்புகளுடன் தொடர்பு கொண்டவை. இத்தகைய ஒன்றிணைந்த தொடர்புகளையும் பாடசாலைகள் நிராகரித்து விட்டுத்தனித்து நுண்மதித்திறன்களில் மட்டும் கவனம் செலுத்தல் முடியாது.

சமூக மாற்றத்தின் அடிப்படைக் கருவியாக அவர் கல்வியைக் கருதினார். பாடசாலைகள் எதிர்த்தாக்கங்களைச் சமூகத்திலே உண்டாக்குகின்றன. ஆகவே அவற்றைக் கலைத்துவிட வேண்டுமென்று றீமன், இலிச் போன்ற கல்விச் சமூகவியலாளர் தமது கருத்துக்களை முன்வைத்தனர். ஆனால் பாடசாலைக் கலைப்புச் சமூக என்ற கருத்தை புறூனர் ஏற்றுக் கொள்ளவில்லை. தொழில் நுட்பவியல் சிக்கலடைந்து வளர்ச்சியடைய மனிதவாழ்வியல் மாற்றங்கள் விரைந்து நடைபெறுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் பாடசாலைகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் மேலும் மேலும் இக்கட்டான நிலையை அடைகின்றன.

சுருள் ஏணிக் கலைத்திட்டம் தொடர்பாக புறூனர் ஒரு சிறப்பான கருத்தை முன்வைக்கின்றார். எந்த ஒரு விருத்திநிலையிலும் மாணவனுக்கு [illegible]

யாதாயினும் ஒரு கல்வியில் மனிதனை ஈடுபடுத்தாது மனிதப் பண்புகளை வளர்த்தெடுக்க முடியாது. சிக்கலடைந்து செல்லும் சமூக மாற்றங்களினூடே கல்வியை வழங்கும் நிறுவனமாக்கப்பட்ட வகையாகப் பாடசாலை அமைந்து விட்டது.

இந்த நிறுவனம் சமூகத்திலிருந்து அந்நியப்படாததுடன் பொருத்தமற்ற முறையில் செயற்படும் மனனஞ் செய்து கற்றலைக் கைவிட வேண்டும்.

சமகால உணர்வுகளை வெளியிடும் மொழிக்கும் சமகாலநிகழ்வுகளுக்குமிடையே உள்ள இடைவெளியைப் பாடசாலைகள் முறியடித்துவிடக்கூடாது. சமூக, பண்பாட்டு மாற்றங்களை உள்வாங்கக் கூடியதாக பாடசாலைக் கலைத்திட்டம் தொடர்ந்து சீர்திருத்தி அமைக்கப்படல் வேண்டும். பாடசாலை மட்டும் தனித்துச் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்ற யதார்த்தத்தை புறூனர் ஏற்றுக்கொண்டார். சமூக மாற்றத்துக்கான பரந்த வேலைத்திட்டத்துடன் கல்வி இணைக்கப்படும் பொழுதே வினைத்திறன் கொண்ட மாற்றங்களை நிகழ்த்த முடியும். அரசியல், பொருளியல் சார்ந்த பின்புலங்களில் இருந்தே கற்பித்தலியல் முகிழ்த்தெழல் வேண்டும்.

சமூகவியல் அடிப்படையில் பாடசாலைகளை நோக்கும் பொழுது ஐக்கிய அமெரிக்காவின் பாடசாலைகள் மத்திய தரவகுப்பினருக்கு மிக்க ஏற்புடையதாயிருந்தாலும் தொழிலாளர்களின் இடர்களை அவை மேலும் தூண்டி விடுதலும் அவரால் அனுமதிக்கப்படவில்லை. இவற்றின் மத்தியிற் பரிய சமூகமாற்றம் பற்றிய அரசியல், பொருளியல், கல்வி நிர்வாகவியல் ஆகிய பல்துறைப் பண்புகளை உள்ளடக்கிய பரந்த அணுகு முறைகளால் நிகழ்த்தப்படல் வேண்டுமென்பதைத் தொடர்ந்து வலியுறுத்தினார்.

பாரம்பரிய விழுமியங்களையும் சார்புகளையும் தொடர்ந்து வழங்கி வருவதோடு மட்டுமன்றி உலகு பற்றிய மாற்று வகையான கருத்துக்களையும் பாடசாலைகள் வழங்க வேண்டுமென்று புதுமோடி வாதியாகவும் புறூனர் விளங்கினார். ஒவ்வொரு மனிதனும் தனது பண்பாட்டு மட்டத்தைக் கடந்த செவ்வழியான நுண்மதிச் செயல் முறைகள் கல்வியால் வளர்த்தெடுக்கப்பட வேண்டியுள்ளன. மனிதர்களிடத்து நுண்மதி தொடர்பான தனித்துவ விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் பண்பாடு என்பது கட்டியெழுப்பப்படல் வேண்டும் என்பது அவரது கருத்தாகும்.

பிள்ளைகள் பாடசாலைக்கு வரும் பொழுது தாம் அறிந்தவற்றைச் சொற்களால் வெளியிடும் திறன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றவர்களாக வருகின்றார்கள். இந்நிலையில் மலையின் உள்ளுணர்வோடு இணைந்ததாகவே கற்பித்தலைத் தொடங்க வேண்டும். பாடசாலைக்கு வரும் பிள்ளைகளுக்கு மாத்திரமன்றி, யாதாயினும் ஒரு திறனை அல்லது அறிவை ஆரம்ப நிலையில் கற்கும் எந்த வயதுக்கும் இவ்வாறு கற்பித்தலைத் தொடங்க வேண்டும். பிள்ளையின் உள்ளுணர்வைப் பாதுகாத்தலே பாடசாலைகளில் தலையாய இலட்சியங்களாக இருத்தல் வேண்டுமென்று புரூனர் வலியுறுத்துவர். மேலும் சாதிரமையான ஒரு பாடசாலை ஒழுங்கமைப்பில் தேவையானபொழுது உள்ளுணர்விலிருந்து கற்றலைத் தொடங்குவதும் பொருத்தமான சந்தர்ப்பத்தில் பகுத்தாராய்ந்து கற்பதற்குப் பிள்ளைகளுக்கு மெருகூட்டுதல் வேண்டுமென்று புரூனர் கருதுகின்றார்.

உள்ளுணர்வுச் சிந்தனை என்பது பலவகைப்படும். தொழிற்பாடு, நம்பிக்கை, காட்சிக்கொள்ளல், சொல்சாதுரியங்கள், பிரச்சினைகளுக்கு நியமமற்ற வடிவங்களைத் தேடுதல், கிடைக்கும் தகவல்களின் ஒருபகுதியைப் பயன்படுத்துதல் என்பவை உள்ளுணர்வுச் சிந்தனையின் அம்சங்கள். பிரச்சினை விடுவிக்கலுக்கான அடிப்படைச் செயற்பாடுகளைப் பகுத்தாராய்வும் பண்பு விளக்குகின்றது. பகுத்தாராய்தல் பிரச்சினை விடுவிப்பவரின் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்கின்றது.

புலன்கள் வழியாகப் பொருட்கள் வேறுபாடு கண்டு கற்கும் செயல்முறைகளை மரியா மொன்ரிசூரி விளக்கினார். உருவவடிவிலே பொருள்களைக் கண்டறியும் திறன் குறைந்த நிலையில் ஆரம்பமாகக் காணப்படுகின்றது. நெருக்கிவிடாக அவர்கள் வரவுகளுக்குப் பழக்கப்பட்டு விடுவார்கள். இதன் காரணமாகப் பாடசாலையின் தொடக்க ஆண்டுகளில் மிகவும் மாணவர் மிகுந்த உயர் நிலையில் உள்ளதான அனுபவங்களைப் பிள்ளைகளுக்கு வழங்கவேண்டுமென்று புரூனர் விதப்புரை செய்கின்றார்.

மொழி உணர்வுகளை வெளிப்படுத்துவதும் சமகாலத்துவத்தைத் [illegible]

பொருத்தமான கற்பித்தல் முறைகள் பாடசாலைகளில் அமைக்கப்படாதவிடத்து மாணவரின் உள்ளுணர்வு அழைத்துமுறை முடக்கப்பட்டுவிடும். அதாவது அவர்களின் இரகசிய நுண்மதி வாழ்க்கை பாதிப்புக்குள்ளாகும். பாடநூல்களில் இடம்பெறும் மேலெடாதரம் மிகைபாலதுமான பகுப்பாய்வுகள் பிள்ளைகளிடத்துச் சந்தேகங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்தும். இந்த இடர்கள் ஏற்படாதவாறு பாடசாலை ஒழுங்கமைப்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

புரூனரின் ஆய்வுகள் தொடர்பான பல்வேறு விமர்சனங்களை முன்வைக்க முடியும். அடிப்படையான சமூக மாற்றம் பற்றிய கல்விக்கோட்பாடுகளை விடுத்து, வழமை அடிப்படையான ஆசிரியர் வகிபங்கை மாற்றியமைக்க முயலும் அவரது அணுகுமுறைகள் வெறும் இலட்சியவாதமாகச் சிந்தனையையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.


**REFERENCES**

**Books by Jerome S. Bruner**

| | | |
|---|---|---|
| 1. | Mandate From the people | 1944 |
| 2. | Opinions and personality (with Smith and White) | 1956 |
| 3. | The Process of education | 1960 |
| 4. | A study of thinking (with good now and austin) | 1962 |
| 5. | On knowing | 1962 |
| 6. | Studies in cognitive growth (with olver and green field) | 1966 |
| 7. | Toward a theory of instruction | 1966 |
| 8. | Process of cognitive growth - infancy | 1968 |
| 9. | The relevance of education (with Anita Gill) | 1971 |


**மனிதனின் தனித்துவம்**

கலையை படைத்ததில் இல்லை. அறிவியலை உருவாக்கியதிலும் இல்லை. மாறாக கலை அறிவியல் இரண்டையும் சமமாக வெளிப்படுத்தும் மூளையை கொண்டிருப்பதில் தான் மனிதனின் தனித்தன்மை உள்ளது.

— ஜே. ப்ரோனோவ்ஸ்கி —




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# காலநிலை மாற்றத்தின் மனிதன் மீதான தாக்கங்கள்

பொதுநலவாய புவியியல் பணிமனையின் (Common-wealth Geographical Bureau - CGB) நிதியுதவியுடன் 2005 யூன் 20ம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை "காலநிலை மாற்றத்தின் மனிதன் மீதான தாக்கங்கள்" என்ற கருப் பொருளில் கொழும்புப் பல்கலைக் கழக புவியியல் துறையின் அனுசரணையுடன் பயிற்சிப் பட்டறையொன்று பிரசுவா ஹோட்டலில் இடம்பெற்றது. கொழும்பு பல்கலைக்கழக புவியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் றோபேட் அன்ரனியினால் ஒழுங்கமைக்கப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வில் கொழும்புப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் டி. ஹெட்டியாராச்சி, கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.எம். பி.சேனாநாயக்க, புவியியல் துறைத் தலைவர் பேராசிரியை ஜெயந்தி டி சில்வா மற்றும் சர்வதேச பங்கேற்பாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பொதுநலவாய புவியியல் பணிமனை என்பது ஓர் அரச சார்பற்ற நிறுவனமாக விளங்குவதுடன் 58 பொதுநலவாய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களின் புவியியல் துறைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது. 1960ஆம் ஆண்டுகளில் புவியியலாளர்களைக் கொண்ட ஒரு சிறிய குழுவினால் இது ஸ்தாபிக்கப்பட்டது. கலை மற்றும் சமூக விஞ்ஞானங்களில் உள்ள பாடங்களிலிருந்து பொதுநலவாயத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஒரேயொரு நிறுவனம் இதுவாகும்.

கடந்த பல ஆண்டுகளாக பல மாநாடுகளையும், கருத்தரங்குகளையும் இந்நிறுவனம் ஒழுங்கு செய்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இதன் நடவடிக்கைகளும், நோக்கங்களும் மாற்றமடைந்துள்ளன. வருடாந்த ரீதியாக, சமூக, பொருளாதார, சூழல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளுடன் தொடர்பான, குறிப்பாக பொதுநலவாயத்தின் அபிவிருத்தி குறைந்த நாடுகளில் ஆற்றலைக் கட்டியெழுப்பும் பயிற்சிப் பட்டறைகளை (Capacity Building Workshops) மேற்கொண்டு வருகின்றது. சூழலுடன் இணைந்த சுற்றுலா, நகராக்கப் பிரச்சினைகள், உணவுப் பாதுகாப்பு, எச்.ஐ.வி எயிட்ஸ் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆபிரிக்கா, தென்ஆசிய நாடுகளில் பயிற்சிப் பட்டறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பயிற்சிப் பட்டறையின் 2005ஆம் ஆண்டுக்கான விடயமாக காலநிலை மாற்றமும் அதன் பூகோள ரீதியான தாக்கங்களும் என்ற அம்சம் கருப்பொருளாகக் கொள்ளப்பட்டது. பனிக்காலம் மற்றும் இடைப் பனிக்காலத்தின் இயற்கை வட்டங்களின் விளைவாகவே காலநிலை மாற்றம் ஏற்பட்டதென்பதை ஏற்றுக் கொண்டாலும் இன்று






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நடவடிக்கைகளில் செயற்பாட்டினால் பூகோள வெப்பமடைதலும், பச்சைவீட்டுத்தாக்கமும் ஏற்பட்டு வருகின்றமை தொடர்பாக பூகோள சமூகம் கவலையடைந்துள்ளது. மனிதனால் தூண்டப்படும் காலநிலை மாற்றம் என்பது பூகோள அமைப்புகளுடன் திட்டமிடப்படாத முறையில் ஏற்படும் விளைவு என துல்லியமாக ஒருவர் வரையறை செய்வதனைக் குறிப்பிடத்தக்கது.

விஞ்ஞான சமூகம் ஒருங்கிணைக்கப்பட்ட மாதிரிகளைப் பயன்படுத்தி காலநிலை மாற்றத்தை எதிர்வு கூறும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட சமன்பாடுகளையும், ஒரு செக்கனுக்கு பில்லியன் செயற்பாடுகளையும் மேற்கொள்ளும் அதிநவீன கணனிகளைப் பயன்படுத்தி நீண்ட காலத்துக்கான எதிர்வு கூறல்களை மிகத் துல்லியமாக மேற்கொள்வது மிகவும் கடினமானது. இவ் ஆய்வுகளின் முடிவுகள் எதுவாக இருந்தாலும், காலநிலை மாற்றம் மீதான மனித பங்களிப்புக்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் மனித நடவடிக்கைகள் மற்றும் மனித வாழ்க்கையின் மீதான அதன் தாக்கங்கள் பிரச்சினைக்குரியதாகவே இருக்கும்.

ஐக்கிய அமெரிக்காவில் மாத்திரம் பூகோள வெப்பத்தினால் ஏற்படப்போகும் பொருளாதார இழப்புக்கள் 17-108 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடல் மட்ட மாற்றங்களினால் ஏற்படும் மனித இழப்புக்கள் ஆபிரிக்கா, ஆசியா, பசுபிக் தீவுகளில் 92-118 மில்லியனுக்கு இடையில் காணப்படும். இதன் காரணமாகவே காலநிலை மாற்றத்தினை ஏற்படுத்தக் கூடிய பச்சைவீட்டு வாயுக்களைக் குறைத்துக் கொள்வதற்கு பூகோள சமூகம் அக்கறை கொண்டுள்ளதென்பதை உறுதிப்படுத்துவதற்கு சிறிய, பெரிய நாடுகள் கியோட்டோ உடன்படிக்கையில் கையொப்பமிட வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றியோர் பல்துறை சார்ந்தவர்களாக இருந்தனர். புவியியல் உட்பட சமூக, விஞ்ஞான பாடங்கள் சார்ந்த விரிவுரையாளர்கள், அரச



சார்பற்ற நிறுவன அதிகாரிகள், பொறுப்பு வாய்ந்த அமைச்சுக்களின் இள நிலை அதிகாரிகள் என இலங்கையுட்பட இந்தியா, பாகிஸ்தான், சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். பயிற்சிப் பட்டறையின் பிரதான நோக்கம் இவ்வாறு பெறப்படும் திறன்களும், அறிவும் பரந்தளவில் மக்களைச் சென்றடைய வேண்டுமென்பதே.

பயிற்சிப் பட்டறையில் கருத்துக்களை முன்வைப்பதற்கு லண்டன் பல்கலைக்கழகத்தின் லண்டன் கிங்ஸ் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மார்க் பெல்லிங், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டேவிட் கிக்கின்ஸ், பேராசிரியர் விக்டர் சவேஜ் வருகை தந்திருந்தனர். காலநிலை மாற்றம், அனர்த்தங்களின் பாதிப்புக்கள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் இம் மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதங்களும் மேற்கொள்ளப்பட்டன. கோட்பாட்டு ரீதியான வகுப்பறைக் கலந்துரையாடல்களில் மட்டும் தங்கியிருக்காமல் அனுபவரீதியாகத் தரவுகளைச் சேகரிப்பது எவ்வாறு என்பதைக் கற்றுக் கொள்ளும் நோக்கில் ஒரு நாள் வெளிக்களப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்டதுடன் புதிய அனுபவங்களையும் பங்கேற்பாளர்கள் பெற்றுக் கொண்டனர். □

---

நாட்டுப்புற வழக்காறுகள் சமூக அரசியல் தன்மை வாய்ந்தவை மக்களை அடையாளப்படுத்துவதின் வாயிலாக அவர்களுக்கு இடையிலான வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் பொதுத் தன்மைகளையும் காட்டுபவை. மக்களின் அதிகாரம் செயல்படும் முறைகளையும் உயர்த்துபவை. மக்களின் அருவமான மன அமைப்புகளுக்கு உருவம் கொடுப்பவை நடைமுறை வாழ்க்கையில் வெளிப்படுத்த இயலாத எண்ணங்களை, உணர்வுகளை, எதிர்ப்புக் குரல்களை வெளிப்படுத்துவதற்கான களங்களாகத் திகழ்பவை. இப்படிப்பட்ட சமூக அரசியல் தன்மை வாய்ந்த நாட்டுப்புற வழக்காறுகள் பற்றிய ஆய்வுகள் நடுநிலையானவையாக இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஆய்வாளர்களின் கருத்தியல் சார்பு நாட்டுப்புறவியல் ஆய்வுகளின் சமூக அரசியல் நிலைப்பாடுகளைத் தீர்மானிக்கின்றன.

*கலாநிதி சி. மௌனகுரு*

*மாறிவரும் சமூகம், நாட்டுப்புறவியல் ஆய்வுகள். பக்கம் 43 — 2003*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வுகள்

# இன்றைய கல்வி நிலவரம் பற்றிய கருத்தாடல்

வவுனியா தெற்கு கல்வி வலயம் தமது வலயப் பரப்பில் இருக்கும் கல்விசார் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்ப்பதற்கான முன்முயற்சியாக மாநாடு ஒன்றை நடாத்தி முடித்திருக்கிறது. 'இன்றைய கல்வி நிலவரம் பற்றிய கருத்தாடலும் கல்வி விருத்திக்கான மூலோபாயங்களைத் தேடலும்' என்ற தொனிப்பொருளில் இம் மாநாடு நடந்து செப்டெம்பர் 16ம், 17ம் திகதிகளில் வவுனியாவில் நடைபெற்றது. மாநாட்டில் நோக்கங்களுக்கு ஏற்ப விடயப்பரப்பு, கட்டுரைகள் திட்டமிடப்பட்டிருந்தன. முதல் நாள் அமர்வில் பத்துக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இரண்டாம் நாள் குழுக் கலந்துரையாடலாக வடிவமைக்கப்பட்டு இருந்தன. கட்டுரைகளில் விடுபட்ட விடயங்கள் பல தொகுக்கப்பட்டு முழுமைப்படுத்த உதவின.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட விடயங்கள் பற்றி மேலும் ஆழமாக சிந்திக்கப்பட வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது. தொடர்ச்சியான யுத்தத்தினாலும் திட்டமிட்ட புறக்கணிப்புகளாலும் வட கிழக்கில் கல்வித்தரம் வீழ்ச்சியுற்றிருக்கும் நிலையில், வளங்கள் பற்றாக்குறை முக்கியமாக இனங்காணப்பட்டு இருந்தது. இதனை நிவர்த்தி செய்யும் முயற்சியிலும் பல்வேறு அபிப்பிராயங்கள் முன்வைக்கப்பட்டன. அனைத்துக்கும் மேலாக ஆசிரியர் சமூகத்தின் ஆற்றல்கள் மனோபாவங்களில் எத்தகைய மாற்றங்கள் விருத்தி செய்யப்பட வேண்டுமென்ற அக்கறையும் பரவலாக வெளிப்படப்பட்டது.

காலத்தின் தேவையை உணர்ந்து வவுனியா தெற்கு வலயம் செயற்படத் தொடங்கி இருப்பது இதுவொரு நல்ல தொடக்கமாகும். இவர்களைப் பின்பற்றி ஏனைய கல்வி வலயங்களும் செயற்பட வேண்டும்.

மேற்படி மாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரைகள் தொகுக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சம். ஆவணப்படுத்தப்பட்டாயிற்று. இனி நாம் செய்ய வேண்டியவை தான் ஏராளம். மாநாட்டில் வழங்கப்பட்ட கட்டுரைகள் முறையே :

01. பிரதேசப் புவியியல் அமைப்பும், சமூக பொருளாதார நிலைமைகளும் (க.ஜெயச்சந்திரன்)

02. பிரதேசத்தின் உட்கட்டமைப்பு தொடர்பான பிரச்சினைகள் (இ. இந்திரானா)

03. ஆரம்பக் கல்வி தொடர்பாக எதிர்கொள்ளப்படும் இடர்களும், முன்பள்ளிக் கல்விக்கான வாய்ப்புக்களும். (ப.சிவராஜா)

04. இடைநிலைக் கல்வி தொடர்பாக எதிர்கொள்ளப்படும் இடர்கள் (இ.இருபதி)

05. மாணவர்களின் பொதுப்பரீட்சைப் பெறுபேற்றுப் பகுப்பாய்வு (த. மேகநாதன்)

06. பாடசாலைகளின் இணைப்பாட விதானச் செயற்பாடுகளும் முறைசாராக் கல்வியும். (க.சத்தியசீலன்)

07. அதிபர்களின் முகாமைத்துவ திறன், ஆசிரியர்களின் வாண்மை பயிற்சி, தகுதி, மனோபாவம் பற்றிய இடர்கள் (சா. அமிர்தலிங்கம்)

08. பாடசாலைகளில் பௌதீக வளப் பற்றாக்குறை (சி.சிவகுமாரன்)

09. வலயக்கல்விப் பணிமனை, பாடசாலைகள் தொடர்பான ஆளணிப் பற்றாக்குறை (அ.ஸ்ரீகரன்)

10. பிரதேசத்தின் கல்விக்கு உதவி வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்பு (ம.க. பற்பநாதன்)

மாநாட்டின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய அதிகாரிகள், ஆய்வாளர்கள் மற்றும் இவர்களை வழிநடத்திய வலயப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

**ச.பாஸ்கரன்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாது வெளியீடு

# இலங்கையில் முகாமைத்துவக் கல்வி

மா. சின்னத்தம்பி
தலைவர், கல்வித்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பக்கம்
xiv + 268

அளவு
145mmx215mm

விலை
ரூ 480

ISBN
955 9429 68 X

பொருளடக்கம்: I எண்ணக்கரு, II முகாமைத்துவ கல்வி வளர்ச்சி, III கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி, IV கலைத்திட்டம், V பிரச்சனைகளும் பணிகளும், VI முகாமைத்துவ கல்வி ... நூல் விபரப்பட்டியல், சுட்டி

## வெளிவரவுள்ள கல்வியியல்துறைசார் நூல்கள்

- தமிழ் கல்விச் சிந்தனைகளின் போக்கு — பேராசிரியர் சோ. சந்திரசேகரன், கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்
- ஒப்பீட்டுக் கல்வி — பேராசிரியர் சோ. சந்திரசேகரன், கல்விப் பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்
- வகுப்பறைகளில் கல்வி உளவியல் — திரு. உமைநாதர் நவரட்ணம், பணிப்பாளர், தமிழ் மொழிப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்
- செயல்வழி ஆய்வு: ஓர் அறிமுகம் — திரு. கை. தனபாலசிங்கம், ... பணிப்பாளர், தமிழ் மொழிப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்

குமரன் புத்தக இல்லம்

இணையத் தளம் www.kumaranbook.com

---

சாது அறிஞர் வெளியீடு


சர்வதேச கல்வி நிறுவனம் (International Academy of Education), சர்வதேச கல்வி பணியகம் (International Bureau of Education), யுனெஸ்கோ (UNESCO) ஆகிய நிறுவனங்களின் அனுசரணையுடன் வெளியிடப்பட்ட கல்விசார் செயற்பாடுகள் பற்றிய கைந்நூல் தொடரின் (Educational Practices Series) தமிழாக்கம்

இவ் வரிசையின் முதல் வெளியீடு

# பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள்?

**(How Children Learns)**

**கலாநிதி ஸ்டேலா வொஸ்னியாடோ**



தமிழ் மொழிப் பதிப்பாசிரியர்
பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

மொழிபெயர்ப்பு
திருமதி. புஷ்பா சிவகுமாரன்

பக்கம்
60

ISBN
955 9429 69 8

விலை
ரூ 90

## இவ்வரிசையில் வெளிவரவுள்ள ஏனைய நூல்கள்

1. கற்பித்தல் (Teaching)
2. பெற்றோரும் கற்றலும் (Parents and Learning)
3. பயனுறுதி வாய்ந்த கல்விசார் நடைமுறைகள் (Effective educational practices)
4. கணிதத்தில் மாணவரின் அடைவினை மேம்படுத்தல் (Improving student achievement in Mathematics)
5. போதித்தல் (Tutoring)
6. மேலதிக மொழிகளைக் கற்பித்தல் (Teaching Additional Languages)
7. பிள்ளைகள் எவ்வாறு கற்கிறார்கள்? (How children learns?)
8. நடத்தைப் பிரச்சினைகளைத் தவிர்த்தல் - பயனுடைய வழிமுறைகள் (Preventing Behaviors- What works)
9. பாடசாலைகளில் HIV/AIDS நோய்களைத் தவிர்த்தல் (Preventing HIV/AIDS in Schools)
10. கற்றலுக்கான ஊக்கல் (Motivation to learn)
11. கல்வி மற்றும் சமூக மன வெழுச்சிசார் கற்றல் (Academic and Social emotional learning)
12. வாசிப்பைக் கற்பித்தல் (Teaching Reading)
13. பாலர் பாடசாலைகளினூடாக முன்பள்ளி நிலையின் மொழியறிவை மேம்படுத்தல் (Promoting pre-school language)

அகலம் ஆழம் அறிவிற்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்கும்

# ஜெயா மெடிக்கல் கிளினிக்

Dr. ஜெயகாந்தராஜா

நிலாவெளி வீதி,
திருகோணமலை.

026-2223589
0777-177221

நூலைத் தேடு உலகம் உன்னைத் தேடும்

சாஸ்திரி கூழாங்குளம்
செல்லையா ஞாபகார்த்த

# சித்த ஆயுர்வேத மருத்துவ நிலையம்

Dr. சத்தியநாதன்

Dr. சாந்தி சத்தியநாதன்

153, குருமன்காடு,
வவுனியா.

சாஸ்திரி கூழாங்குளம்.
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org